ஓம்

புகழேந்திப்புலவர் இயற்றிய

சித்திரபுத்திர நாயனார் கதை.

பூ. ரா. அப்பாதுரை முதலியார்

அவர்களாற்றமது

சரவணபவர் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

மண்ணடி, சென்னை.

இதன் விலை] 1936 [அணா 8.

கடவுள் துணை.

சித்திர புத்திர நாயனார்கதை.

காப்பு.

அத்தனும் அயனுமாலு மானமாரிஷிகள்தேவர்
நித்தமும்பலாபலன்கள் நெறியுடன்தெரிவதற்குச்
சித்திரபுத்ரனார்தாம் செனித்ததோர்கதையைப்பாட
மத்தமாகஜமுந்தொந்தி வயறுதங்காப்பதாமே.

வெண்பா.

சீர்கொண்ட பூதலத்திற் சித்திரபுத்திரன்கதையைப்
பார்கொண்டசெந்தமிழாற்பாடவே--ஏர்கொண்ட
வார்பூத்தகோலமுலை மாதுமையாறீன்றெடுத்த
கார்பூத்தகுஞ்சரத்தான் காப்பு.

விருத்தம்.

ஆனைமுகமு மொருகொம்பு மகன்றமார்புஞ் சிறுகண்ணும், பானைபோலப்பெருவயிறும் பாங்காங் பூணுநூலழகும், தானேதோன்றி எனதுளத்திற்றயவாய்வாழும்விநாயகனே, நானேயுனதுபதந்தொழுதேனுவிலுதிப்பாய் கணபதியே.

நூல்.

திருமகிழ்ந்துவாழுமந்தச் சித்திரபுத்திரர்கதையை
விருப்பமுடன்பாட விநாயகனேமுன்னடவாய்
விக்கின விநாயகனே வேழமுகத்தைங்கரனே
தொந்திக்கணபதியே தூயவனேமுன்னடவாய்
கர்த்தனருள்பெற்ற கணபதியேகாத்தருள்வாய்
சத்திக்கணபதியே தையலுமைபுத்திரனே
எத்திசையும்போற்றும் இறையோன்திருமகனே
பத்தியுடன்தொழுவோர்க்குப் பாவங்கள்தீர்த்தவனே

சித்திரபுத்திரர்கதையைச் செப்பவருள்செய்வாயே
சீராகவாழுஞ் சித்திரபுத்திரர்கதைக்கு
நேராகவந்துதவு நீலமயில்வாகனனே
அந்தரியேதாயே அயனாரிடத்திருக்கும்
சுந்தரியேவெள்ளை நிறச் சோதியேமுன்னடவாய்
பத்தியுடனெப்பொழுதும் பாங்காகவந்துதவாய்
புத்திமிகவுண்டாகப் பொற்கொடியேவந்துதவாய்
பத்தியுடன்யானும் பாடுகிறேனிக்கதையை
ஆதியரனாரும் அச்சுதனும்வேதாவும்
தீதில்லாமுப்பத்து முக்கோடிதேவர்களும்
எல்லோருமாக இருக்குமோர் நாளையிலே
சித்தமகிழ்ந்து செப்புவார்ஈச்சுரரும்
நன்றுதீதுத்தெரிய நடுவெழுதுவார்கணக்கர்
ஈசனருள்பெற்ற யமதருமர்தன்னிடத்தில்
நேசமுடன்கணக்கு நிச்சயமாய்த்தானெழுதப்
புண்ணியம்செய்தவரைப் பூதலத்தில்வாழ்பவரை
எண்ணரியபாவ மியற்றினோர்தங்களையும்
ஒன்றுந்தவறும லுள்ளபடிதானெழுத
வெற்றிபுனைநற்கணக்காய் விரைந்தேயெழுதிவர
அந்நகரநாட்டுக்காம் அதிகாரியாங்கணக்கர்
முத்திரைநாட்டுக் கெங்குமுதற்கணக்கர்
நாட்டுக்கணக்கும் நயனார்பெருங்கணக்கும்
ஏட்டுச்சுவடியில் எழுதுமெழிற்கணக்கர்
நல்லார்குணத்தை நடுவெழுதுநாயகனார்
பொல்லார்குணத்தைப் பிரித்தெழுதும்புண்ணியனார்
தன்னைநினைத்தவர்க்குந் தன்னியமஞ்செய்தவர்க்கும்
இந்நிலத்திற்செல்வம் இசைவாகத்தானருள்வார்
எல்லோரும்நீங்க ளியல்பாகத்தான்கேளும்
உத்தமனார்தம்கதையை யுவப்போடுதான்கேளும்
சித்தர்திருக்கதையை யன்பாகத்தான்கேளும்
மன்னவனார்தம்கதையை மகிழ்ந்திருந்துகேட்டவர்கள்
தென்னவனார்தம்கதையைத் தினமிருந்துகேட்டவர்கள்
பரமனார்தம்கதையைப் பத்தியுடன்கேட்டவர்கள்
பார்வேந்தர்தன்கதையைப் பண்புடனேகேட்டவர்கள்
சித்திரபுத்திரர்கதையைச் சிந்தையுடன்கேட்டவர்கள்
உத்தரங்கள்சொல்லாம லுண்மையாய்க்கேட்டவர்கள்

புத்திரனற்பாக்கியங்கள் பொருந்தியேதாம்வாழ
வேண்டுமென்றேயீச்சுரனார் விஸ்தாரம்செய்தகதை
இனிமேல்நடத்துகிறோம் இப்போதுசெய்யும்வகை
சித்திரைக்குச்சித்திரையிற் சீராரும்பௌரணையில்
விரதமதுதானிருந்து வெண்பட்டுத்தானுடுத்தி
புண்ணியமான பூதானந்தான்கொடுத்து
அடைகாயும்வெள்ளிலையு மன்பாகத்தான்கொடுத்துப்
பூதானங்கோதானம் வஸ்திரதானங்கொடுத்துப்
பந்தல்விதானம் பாங்காகத்தான்போட்டுத்
தோரணங்கள்கட்டித் துலங்குமேற்கட்டிகட்டி
விந்தைவிநாயகரை விரைந்துமேதான்போற்றி
செய்யும்வகையதற்குச் சிறக்கவேவைத்தபின்பு
பூரணகும்பம் பொன்னின்குடத்தில்வைத்து
வஸ்திராபரணங்கள் வகையுடனேதான்சாத்தி
தட்சணைகள்வைத்து திருமாலைகள்சாத்திச்
சந்தனங்குங்குமம் சரியாகத்தான்சாத்தி
வாழைகமுகுடனே வான்கரும்புதானிறுத்திப்
பொன்னின்விளக்குவைத்துப் பூமலர்தான்சாத்தி
வாழையிலைபரப்பி வைக்கும்வகைக்கனிகள்
வாழைப்பழமும் வருக்கைப்பலாச்சுளையும்
மாங்கனியுந்தேங்கனியும் மற்றுமுள்ளநற்கனியும்
தேமாங்கனியுடனே செழுங்கதலிநற்பழமும்
விளாங்கனியுஞ்சர்க்கரையும் மிகப்படைத்துக்
கடலைசிறுபயறும் காராமணிப்பயறும்
கடலைபொரியவலும் வேண்டும்பணியாரம்
தேனுந்தினையும் திறமாகத்தான்படைத்துக்
கரும்போடிளநீரும் கற்கண்டுநற்கனியும்
பொரிவிளங்காயுடனே பிட்டமுதுவெள்ளுருண்டை
கொழுக்கட்டைவகைகள்கொண்டுவந்துதான்படைத்து
தோசைவடையிட்டலியுந் தோன்றமிகப்படைத்து
அப்பமதிரசமும் ஆனதொருதேன்குழலும்
பாயசமும்பானகமும் பதிவாகத்தானும்வைத்து
அன்னமிகச்சமைத்து அரன்பாலன்முன்னேவைத்து
புத்துருக்குநெய்யும் பொரிக்கறியுள்ளதெல்லாம்
அடைகாயும்வெள்ளிலையு மன்பாகத்தான்படைத்து
அத்தனார்தம்மருளால் அமுதுசெய்யப்பண்ணுவித்து

நிவேதனஞ்செய்து நியமமுடன்பூசித்துத்
தோத்திரங்கள்செய்து தொழுதுமிகப்பணிந்து

விருத்தம்.

கங்கையைத்தரித்தோன்பாலா கரிமுகாவுன்றன்பாதஞ்
சங்கையாய்த்தரணியோர்கள் தயவுடன்போற்றிசெய்ய
மங்களமாகவாழ்ந்து வந்தெனக்கருளுநாதா
யெங்குமாய்நிறைந்தாய்நீயுமிறைவாபோற்றிபோற்றி.

வசனம்.

இப்படிக்குக் கணபதியைத் தோத்திரஞ் செய்து அருச்சனை நைவேத்தியமுதலானதுஞ் செய்து தூபதீபங்கொடுத்து அப்பால் மேற்படி கதையை நடத்த வேண்டியது.

நடை.

சங்கரனூர்மெச்சத் தானெழுதுமெய்க்கணக்கர்
சித்திரபுத்திரரைச் சீருடனே தானிருத்தி
பீதாம்பரஞ்சாத்திப் பரிவட்டந்தான்சாத்தி
சீதளசந்தனமும் ஷெண்பகமுந்தான்சாத்தி
சுத்தமாயுள்ளதெல்லாம் தோன்றமிகச்சாத்தி
அறிவால்முறைப்படியே அர்ச்சனைகள்செய்தபின்பு
வெள்ளிலையோடும் விளங்குமடைகாயும்
உள்ளமகிழ்நைவேத்தியம் உவந்துமிகப்படைத்துப்
புத்தகத்தினேடிலங்கும் பொன்னெழுத்தாணியுடன்
பூதலத்திலுள்ள புதுப்பண்டமுள்ளதெல்லாம்
இஷ்டமுடனேபடைத்து எல்லோருமிக்கதையைத்
தெண்டனிட்டேயிக்கதையைச்செப்பவேவேண்டுமென்று
பத்தியுடன்கேட்கப் பகரலுற்றவிக்கதையை
ஓங்குபுகழ்மாதர்மைந்தர் உண்மையாயெங்களுக்குச்
சொல்லுமையாவென்று துன்பமறக்கேட்கலுற்றூர்
கல்லுமுருகக் கருத்துடனேகேட்கலுற்றூர்
மன்னும்புகழுங்கள் மங்கிலியந்தான்வாழ்க
மலடிகளெல்லா மனமுருகித்தான்கேட்க

அகம்பாவம்விட்டு அன்புடனேகேட்டவர்கள்
புண்ணியங்கள்செய்து புதுமையுடன்கேட்டவர்கள்
நல்லநினைவுவைத்து நன்றாகக்கேட்டவர்கள்
கதைமுழுதுங்கேட்டவர்கள் கயிலைபதம்பெறுவார்
எந்தமனக்குறைவும் நீங்குமென்றீச்சுரனார்
பிச்சையிடாத பெரும்பாவியானவரும்
நச்சுவாய்ப்பல்லர்கள் நடுக்கேடுசெய்தவர்கள்
கள்ளிகளாயுள்ளவர்கள் கணவனுரைகடந்தோர்
பிச்சையிட்டுண்ணாத பெரும்பாவியானவர்கள்
குண்டுணிகள்சொல்லுங் கொடும்பாவியானவர்கள்
உற்று நின்றுகேட்டு உறவைமுறித்தவர்கள்
பலநினைவுவைத்த பாவிகளானவர்கள்
கொற்றவரைத்தள்ளிவைத்த கொடும்பாவியானவர்கள்
மற்றவரைத்தேடி வாழ்ந்திருக்குமாபாவி
பிள்ளையழுக்கும் பெரும்பாவியானவர்கள்
சண்டையிட்டுநித்தந் தன்பேச்சுமேலிடவே
கொண்டவனை நிப்பேணாத கொடும்பாவியானவர்கள்
தன்வீட்டைச்சாத்தி அசல்வீட்டிற்போயிருந்து
பின்னங்கள்பேசும் பெரும்பாவியானவர்கள்
பசித்தாரிருக்கப் பார்த்திருந்தபாவியர்கள்
இத்தியாதிபேர்களெல்லாம் இக்கதையைகேளாமல்
கடக்கவேநில்லுமென்று கணக்காயுரைத்தமொழி
பூமிதனில்விளைந்த புதுமொழியைக்கேளுமென்றார்
பெரியவர்முதலார்க்குப் பிசகாமல்தானீந்து
வேதியர்க்கீந்தீந்து விரதமதைக்கொண்டாடிக்
கேட்டவர்களெல்லாங் கிளையுடனேவாழ்ந்திருப்பார்
காரணமாய்நடந்த கதையைநடத்துகிறோம்
பதிவிரதையாயிருந்து பாங்குடனேகேளுமென்றார்
பக்தியுடன்கேட்டாற் பாடுகிறேனிக்கதையை
ஈசனருளால் யமதருமர்தன்னருகே
நேசமுடன்கணக்கு நிச்சயமாய்த்தானெழுதப்
புண்ணியஞ்செய்தவரைப் பூதலத்தில்வாழ்பவரைப்
பாவங்கள்செய்தவரைப் பகுத்துகணக்கெழுத
வேணுமென்றுசொல்லி விமலனார்செய்தகதை
கயிலாசமீதிற் காரணமானகதை
தெய்வலோகபட்டணத்திற் றிரமாய்நடந்தகதை

நன்றாகச்சொல்லுகிறேன் நாடெல்லாந்தானறிய
இந்திரனுமிந்திராணியு மிருந்துமிகவாழ்கையிலே
புத்திரவாசை பிடித்துமிகப்புலம்பி
நடந்தகதைசொல்லுகிறோம் நன்றாகக்கேளுமென்றார்
நல்லதொருபசுவு மிறையோன்கொடுத்திருக்கப்
பிள்ளையில்லாவாழ்வு பெருமையடையாதென்று
இந்திராணியம்மை யேங்கிமிகவாடிச்
சொன்னவசனத்தைச் சொல்லுகிறேன்கேளுமென்றார்
பட்டணம்பல்காது பாவங்கள்தீராது
ஆளடிமைகன்று ஆகாசம்போய்விடுங்காண்
ஆபரணாதியெல்லாம் அழித்திடுங்காண்மன்னவரே
சிந்தித்தகாரியங்கள் சிதறியேபோய்விடுங்காண்
என்றுசொல்லவிந்திரனும் எண்ணியறங்களெல்லாம்
கன்னிகாதானங்கள் கருத்தாகச்செய்தார்காண்
மாதானங்கோதானம் வஸ்திரதானங்களும்
விமரிசையாய்த்தருமங்கள் வேணபடிசெய்தபின்பு
தவசுசெய்யவேணுமென்று தானினைத்தாருத்தமனார்
உத்தமருமுத்தமியும் உலகாண்டோன்றனை நினைந்து
தபசுகள்செய்தகதை சாற்றுகிறோம்நீர்கேளும்
இந்தக்கதையை யெள்ளளவுந்தப்பாமல்
கேட்டவர்களெல்லாம் கிளையுடனேவாழ்ந்திருப்பார்

விருத்தம்,

சித்திரபுத்திரர் கதையைச் சிறப்புடன் கேட்க நோன்பு, பத்தியாயிருந்தோரெல்லாம் பழவினை நீங்கி நல்ல, சித்தர்தம்பதியைச்சேர்ந்து அன்புடன் சுகித்துவாழ்வார், பத்தியாயென்று முன்பு பகர்ந்தனர் நூல் வல்லோரே.

வசனம்.

அதெப்படியென்று கேட்பீரானால் அனேகமான திரவியங்கள் பூமிகள் முதலான சகலபாக்கியங்களிருந்தாலும் மைந்தனில்லாவாழ்வு வாழ்வல்ல வென்று இந்திரனு மிந்திராணியும் வெகு மனஸ்தாபமாய்க் கிலேசப்பட்டுத் தங்கள் பொக்கிஷக்களஞ்சியத்திலுண்டான திரவிய முதலானவற்றை யெல்லாங் கொண்டு

அநேக தருமங்களைச்செய்து பின்பு பார்வதி சமேதரா கிய ஈசனை நினைத்துத் தவசுசெய்யச் சித்திரபுத்திர நாய னூர்வந்து அவதரித்ததாக நடந்த கதையானதால் இதை அன்பாகப்பக்தியுடன் கேட்பவர்களுக்கு வரும் பலனை இனிமேல் சொல்லுகிறோம் கேட்பீர்களாக.

நடை.

உத்தமருமாவார் உயர்ந்தகுடியாவார்
பத்தினிகளாவார் பலபிள்ளைத்தாயாவார்
சத்திசிவம்பொருந்தித் தாட்டிகராய்வாழ்ந்திருப்பார்
நீடூழிகாலம் நேசமாய்வாழ்ந்திருப்பார்
மங்கிலியம்வாழ்ந்து மகிழ்ச்சிமிகவுண்டாகும்
செல்வமிகவுண்டாகிச் சீராகத்தானிருப்பார்
ஆழ்கடல்வற்றிடினும் அவர்புகழ்தான்குன்றாது
மாற்றிலாச்செம்பொன் மதிக்குமவர்வம்சத்தில்
புண்ணியவானுனாலும் போகமுள்ளாரானாலும்
மண்ணுமதியுள்ளளவும் வாழ்வுமிகவுண்டாகும்
சித்திரைக்குச்சித்திரையிற் சீராரும்பௌரணையில்
சித்திரைமாதம் திருநோன்புநாளதனில்
உத்தமரைநோக்கி யொருநோன்புசெய்தவர்கள்
மைந்தர்களானாலும் மடந்தையர்களானாலும்
எந்தக்குலத்தில் எவர்களேயானாலும்
தந்தைதனைக்கொன்ற பெரும்பாவியானாலும்
நித்தமதுவுண்ணும் நீசரேயானாலும்
இந்தக்கதையை இயல்பாய்க்கருத்தில்வைத்து
பூலோகத்தியற்கையென்று யோசியாமலேயிருந்து
இளகும்படிமனதில் எந்நேரமும்நினைத்தால்
அங்கேதானன்பாக அவரேவெளிப்படுவார்
இந்திரனைப்போலே இனிதாகவாழ்வுமுண்டாம்
அந்தநெடுமால்பதத்தில் அழகுடனேவாழ்ந்திருப்பார்
சிவனருளுமுண்டாகும் தீங்கொன்றும்வாராது
நன்மையுடன்செல்வங்கள் நாள்தோறுமுண்டாகும்
முன்னேன்பிராத முழுமூடரானாலும்
இந்தநோன்பிருந்தவர்களிகபரமுந்தான்பெறுவார்
முத்தியருள்கொடுக்கும் மோகங்கள்தானீங்கும்

வல்வினைகளானவெல்லாம் வழிவிலகித்தான்போகும்
நல்லதொருபுண்ணியங்கள் நாள்தோறுமுண்டாகும்
ஆராகிலுமிதனை யன்புடனேகேளுங்கள்
நாயனார்பிறப்பை நன்றாகச்சொல்லுகிறேன்
கயிலாசத்தில்நடந்த காரணத்தைச்சொல்லுகிறேன்
சிவனார்கயிலையினிற் சிறப்பாயிருக்கையிலே
அரனார்மிகமகிழ்ந்து ஆனபராசத்தியுடன்
கேளாயுமையவளே கிருபையுடன்சொல்லுகிறேன்
ஊழ்வினையின் விதிப்படியே இவ்வுலகில்
அவரவர்செய்தபுண்ய பாவங்கள்தானறியார்
நாமேயறியவென்றால் ஞாயமில்லைகண்டாயே
நம்மைநினையாமல் நாள்தோறுமுண்டவர்கள்
சிவசிந்தையில்லாத சென்மங்களானவர்கள்
நல்வினையைச்செய்யாத நாஜன்மமானவர்கள்
அசுரர்நரகர் அரக்கர்முதலானோர்
சத்திசிவமறந்து தானிடுக்கண்செய்வதனால்
அதற்கானசெய்தி யடைவாய்புகல்கின்றேன்
ஒப்பில்லாப்பெண்ணே யுமையவளே நீகேட்பாய்
செப்பமுடன்கணக்குச் சீராகத்தானெழுதக்
கையாளொருவனை நான் காரிகையேவேண்டுகிறேன்
நாமேகணக்கெழுத நல்லதல்லகண்டாயே
மூலமாயுலகத்தில் மூத்தமகன்தனைவைத்தோம்
மாபாரதமெழுதி மெத்தவலுத்தான்காண்
கோலமயில்வாகனனும் கொடுஞ்சூரன்கண்டாயே
சூரரைக்கொல்லவே சேனைக்குவைத்தோங்காண்
சாலக்கணக்கெழுதான் தகப்பன்குருசாமி
கோலப்பிரமாவைக் கொண்டுசிறையும்வைத்தான்
அவனைத்துதித்தவர்க்கு அநேகவரங்கொடுப்பான்
புவனக்கணக்கெழுதப் புகார்சொல்வானன்மகனும்
பாலரிருந்தும் பழிப்பார்க்கிடமானோம்
மக்களிருந்து மாதேபயனில்லை
நல்வினைகள்தீவினைகள் நன்றாயெழுதிவர
எந்தவினையானாலு மியல்பாகவுள்ளபடி
கணக்குப்படியே கருமங்கள்தான்பொசிப்பார்
பிறர்சாட்சியால்கணக்குப் பிரபஞ்சத்தேயிருக்கும்
ஆதலால்ஓர்கணக்க னரங்கேவேண்டுகிறேன்

என்றரனார்சொல்ல வியல்பானபார்வதியும்
நல்லதுதான்சொல்லவந்தீர் நாயகரேயும்முடைய
திருவுளத்துக்கேற்றபடி செய்யுமென்றுள்பார்வதியும்
இன்பமாய்ப்பேசி ஈசருமேதுசொல்வார்
பூமாதைநோக்கிப் பொற்பலகைகொண்டுவா
என்றபொழுதே யியல்பான பொற்பலகை
நன்றெனவேபார்வதியும் நாதன்முன்புவைத்தனளே
பார்வதிகொண்டுவரப் பரமசிவனேதுசெய்தார்
சித்தமகிழ்ந்து சித்திரக்கோல்தந்திடென
அந்தப்படியே யம்மையுமைகொண்டுவந்தாள்
சாதிலிங்கத்தோடு தவளநிறப்பச்சையுடன்
நீலமணிமஞ்சளுமாய் நெறியாகச்சேர்த்துடனே
பால்நிறமுமாகப் பாவித்தார்பலகையின்மேல்
சாலவேதம்மைப்போல் தயாநிதியாகவென்று
கோலமுடனிருக்கக் குறித்தாரேசித்திரத்தில்
பஞ்சவர்ணமாகப் பாகமதுதப்பாமல்
திருக்கரத்தாற்று னுஞ்சிறப்பாயெழுதினரே
தம்மைப்போலிருக்கவென்று தானேயெழுதலுற்றுன்
உறுவையெழுதியுண்மையுடன் தான்பார்த்து
திரிபுரியேநீயுஞ் சித்திரத்தைப்பாரெனவே
இந்தப்புதல்வனை நீ ரிப்போதழையுமென்றுள்
அழையுமென்றபோதேயரனுமதைப்பார்க்க
ஆருமறியாத அரனார்தம்பேரருளால்
சித்திரத்திலேயுதித்த சிறப்பானபுத்திரனே
வாராய்மகனேயென்று மலர்க்கரங்கள் நீட்டிடவும்
கைகாட்டிவாய்காட்டி கருவுருவாய்த்தான்திரண்டு
கருணைவிழிநோக்காலே கையிற்பிறந்தனரே
பிறந்தாரேஉத்தமனார் வேணும்வரங்கள்பெறப்
பணிந்தவர்க்கேயருள்கொடுக்கும் பரமனதுசந்நிதியில்
தெண்டனிட்டுவாய்புதைத்துச் சென்னியின்மேற்கைகு
நிற்குமந்தவுத்தமரை நீலகண்டர்தான்பார்த்து [வித்து
எக்கோடிகாலம் இயல்பாகவுள்ளமட்டும்
அக்காலம்நீடூழி யாகவேதானிருப்பாய்
பல்லாயிரங்கோடி பகிரண்டமுள்ளமட்டும்
எள்ளுக்குளெண்ணெய்போலெங்கும்நிறைந்திருப்போ
பூவுக்குள்வாசம்போற் பொருந்தியிருப்போம் (ம்

நாட்டுக்கும்நமக்குமிது பண்புதான்கண்டாயே
ஒன்றுயிருக்குமிட மொருவருந்தாமறியார்
அறிவார்தவமுடையா ரடையாளஞ்சொல்லுகிறேன்
நன்றாயுரைக்கின்றேன் நன்மகனேகேளப்பா
மோட்சவழிசந்திக்கு மொழிந்தோமதுபோல
மோட்சவழியுபதேச மொழிந்தோமேயின் றுனக்கு
எங்களதுமனத்தி லிருக்குநினைவுக்ளும்
தேவாசுரர்கள் சிறப்பானமாதவர்கள்
எறும்புகடையான வெண்பத்துநா நூறு
ஆயிரம்யோனிபேத மாகுமுயிர்களெல்லாம்
செய்கின்றதெல்லாந் திறமாயெழுதுமென்றார்
கருவுமுதல்நற்கணக்குங் கட்டாயெழுதுமென்றார்
கயிலாசத்துள்ள கணக்கெல்லாமெழுதுமென்றார்
மகாமேருநற்கணக்கும் வைகுண்ட நற்கணக்கும்
பிரமலோகக்கணக்கும் பின்புமற்றுமுள்ளதெல்லாம்
எல்லாக்கணக்கு மெழுதவருள்கொடுத்து
உமையவளுந்தானும் உண்மையாய்த்தானழைத்து
ஆபரணப்பெட்டகத்தை யழைப்பித்தாரந்நேரம்
பூட்டைத்திறந்து புதுப்பட்டுத்தான்கொடுத்து
காலிற்சிலம்பணிந்து கனகமணித்தண்டையிட்டு
முன்கையிற்காப்பிட்டு முழுமணியில்வளையிலிட்டுத்
தங்கச்சரப்பளியுந் தனியாரமுத்தரித்து
அரனார்திருக்கரத்தா லாபரணந்தான்பூட்டிக்
காதிலேகுண்டலங்கள் கதிரொளிபோற்றான்சாத்தி
முப்புரிநூலு முழுவயிரப்பதக்கமுடன்
தூய்மைபெருகும் சூடாமணிக்கவசம்
வில்சேர்சரப்பளியும் வேணபணியாபரணம்
பாதமுடிவரைக்கும் பலபணிகள்தான்பூட்டி
பார்வதியுமீஸ்வரரும் பார்த்தார்கள்கண்குளிர
அரனார்மனமகிழ்ந்தே யச்சிறுவனையழைத்து
திருநீற்றுக்காப்பிட்டுச் சித்திரபுத்திரனெனவே
உபதேசங்காதி லுரைத்தாரேயுத்தமற்கு
அதிகாரஞ்செய்கணக்கு அய்யனேதந்தோமென்றார்
முத்திரைமோதிரத்தைச் சித்திரமாய்க்கையிலிட்டு
நீடூழிகாலங் கணக்கெழுதுவாயென்றார்
உத்தமருமங்கே உடன்வணங்கிக்கைகூப்பி

அம்மையுமைபார்வதியையப்போதேதெண்டனிட்டார்
தெண்டனிட்டுநின்றதொரு சித்திரபுத்திரரை
மார்பிலணைத்து மகனேயெனமொழிந்து
ஆருமறியாத அரும்பொருளார்தன்மகனே
சீருடனே நீயும் சிவனாருட்படிக்குப்
பார்விசும்புமிந்த அரன்மொழிகள் தப்பாமல்
பல்லாயிரங்கோடிப் பலன்கணக்குத்தானெழுத
சொல்லார்கண்க்கைச் சுருதியெனவுண்டாக்கிக்
கருமநிழல்போலக் கணக்கில்தினசரியும்
எழுதிவருவாய்நீ யியற்றும்பயன்படியே
பழுதுகள்வராமல் பார்த்தவுடனவ்வேடு
எடுத்தவர்கள்பேசாமல் இயனிழலேசாட்சிசொல்லும்
இச்சாட்சிவந்து யியல்பாய்க்கணக்கெழுதும்
உனக்குப்பிரயாசம் ஒன்றுமில்லையென்றுசொல்லிக்
கணக்கராயிருந்து கருவூலங்கைக்கொள்ளும்
என்றுகருவூலம் ஏற்பித்தாளன்னேரம்
பண்டுமுன்னுள்ள பழையகணக்குள்ளதெல்லாம்
ஆயிரம்தேவர்கள் அசைக்கவொண்ணாப்பட்டோலை
தப்பாமலேயெழுதத் தார்வேந்தர்தான்கொடுக்கச்
சித்திரபுத்திரனார் அன்பாகதன்னிடத்தில்
வாங்கினருத்தமனார் வையகம்வாழவென்று
அன்றுடங்கணக்கு அணுவும்பிசகாமல்
இருந்துகணக்கை யெழுதுகின்றருத்தமனார்
சிவனார்தம்வாசலிற் சிறப்பாயெழுதுகின்றார்

விருத்தம்.

அய்யனுமுமையுங்கூடி யான்நற்கணக்கராக
மெய்யராய்ச்சிருஷ்டித்தார்கள் மேதினியுள்ளமட்டும்
செய்யனுங்கணக்கைப்பார்த்துச் சிறுபிழைவாராவண்
தையலாள்பாகன்அருங்கணக்கெழுதலுற்றார். (ணம்

வசனம்.

எப்படியென்றால் கைலாயத்திலே சுவாமியும் பரமேஸ்வரியும் முப்பத்துமூக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளுமற்றுமுள்ள தபோதனர்களும்

நிறைந்திருக்கும்போது அண்டபுவனங்க ளெல்லாம் பாவபுண்ணியபலன் தெரியவேண்டி நம்முடையகுமா ரர்களிருவராலும் ஆகவேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கின்றபடியால் மற்றுமுள்ள பேர்கள் இதற்கு ஆகத்தக்கவர்க ளாருமில்லை யென்று சுவாமி பரமே ஸ்வரர் தாமேயோசித்து உமையவளை யழைத்துத் தங்கப்பலகை யெடுத்துவரச் சொல்லி உருவமைக்க அதை உமையவள்கண்டுஅதிசயப்பட்டுக்கருவுருவாய்ப் பேசும்படி கிருபைபாலிக்கவேண்டுமென்று அறிவிக்க அப்படியே கிருபைசெய்து மந்திரமுபதேசித்துச் சித் திரபுத்திரனென்று பேர்வைத்து ஆடையாபரண முத லானமும் பூட்டி மகனைக்கட்டிமுகந்து அண்டபுவனங் களிலுமுண்டான முன்னாள் கணக்கும்கருமூலமும்விஷ் ணு, பிர்மா முதலானவர்களிடமுள்ள கருமூலமும் பாவபுண்ணியப் பலக்கணக்குங் கொடுக்க உமையவ ளாகிய பரமேஸ்வரியும் வேண்டத்தகுத்த வரங்களுங் கொடுத்துத் தினமும் நடக்கிற பாவபுண்ணிய முத லான பலகணக்கை நமக்கு அறிவியுமென்று சுவாமி உத்தரவுகொடுத்தபடியே சித்திரபுத்திருங் கைலங் கிரிவாசரான பரமேஸ்வரா சந்நிதானத்தி லிருந்து கணக்கெழுதிவத்தார். இப்படிக்கைலாயத்தில் நடந்து வரும்போது தேவேந்திரன்மகவாசைகொண்டு வேண த்தக்க தருமங்களைச் செய்து ஈஸ்வரனைநோக்கி இந் திராணியுடன் தவம்பண்ணுகிற விஸ்தாரத்தை இனி மேற்சொல்லுகிறேமன்புவைத்து ஒரேமனதாய்க்கேட் பீர்களாக.

நடை.

எண்ணத்தொலையாத ஏற்றசிவபூசைதன்னை
செய்யவேவேணடுமென்று திரமாகவே நினைத்து
தேவாதிதேவரெல்லாம் சேரவேசூழ்ந்துவரச்
செம்பொன்மணித்தேரிற் சிறப்புடனேதானேறி
பசும்பொன்னுலகாளும் பதியைவிட்டுத்தேர்நடத்தி
விண்ணுலகக்கன்னியர்கள் வேணப்பணிசூழ்ந்துவர
இப்படியேயிந்திரனு ரேத்துத்தவஞ்செய்ய
வருகிறவழிதனிலே வந்தாளகலிகைதான்

புண்ணியதீர்த்தமாடப் புறப்பட்டாளகலிகையும்
தந்திரமாயப்போது தான்கண்டாரிந்திரனார்
மெத்தவேமையலாய் மெய்சோர்ந்தறிவழிந்து
தேர்மேலேதான்விழுந்தார் தேவர்கள்சென்றெடுத்தார்
பாராமல்தடந்து பகற்பூண்டஆசையினல்
காதல்கொண்டஇந்திரனார் காமவினையால்
ஆதரவுபேசி அகலிகையைச்சேரவெண்ணித்
தேரைமிகநிறுத்தித் தேவர்களைத்தானிறுத்தி
மாயயாய்ச்சென்று மருத்துமாமலையிலுள்ள
காய்கனிகள்கொண்டுடனே காரிருளாமந்நேரம்
மாயாபாசத்தால் மகிமைதனையிழந்து
ஆசைத்துயரமதால் அகலிகைவீட்டினிலே
சென்றாரேயிந்திரனார் தெய்வவுருமாறி
அன்றிரவுநல்லுறக்க மறிந்துநடுச்சாமத்தில்
வேளையிதுவெனவே விடியற்காலங்கூவும்
கோழியாய்நின்று கூவினாரிந்திரரும்
அப்போதுகௌதம ரானரிஷிதானும்
எப்போதும்போலே விடிந்ததேயென்றெழுந்து
தண்டுகமண்டலமுந் திருநீற்றுப்பையுடனே
கங்கைக்கரையில்வந்து நின்றார்மகரிஷியும்
கங்கையுறக்கமதைக் கண்டார்மகரிஷியும்
மாயன்விதியோ மாயமோதெரியாது
நந்தவனஞ்சென்று நாமறிவோமென்றுவர
அந்தமலரும் அரும்பாயிருந்ததுகாண்
இதுவென்னசோதனையோ ஈஸ்வரரேதஞ்சமென்று
அர்த்தசாமநேர மறியாமல்வந்தோமென்று
மனக்கவலையாகிரிஷி மனையிடத்தேமீண்டுவந்தார்
சென்றறிந்தோமென்று திரும்பிவருமந்நேரம்
இந்திரனுமவ்விருளில்ரிஷிரூபந்தானெடுத்து
வந்துஅகலிகையின் வாய்த்தமுகம்நோக்கி
மனக்கவலையோடுவந்தவரலாறெல்லாம்
கேளுமென்றுசொல்லிக்கருணைகொள்ளவேண்டுமென்று
பாவிகெடுவாய் பக்திமார்தன்னிடத்தில் (ன்
தீவினையால்வந்தாயே சீசீமகனின்றி
நீயுமழிந்திடுவாய் நிச்சயமேதப்பாதென்
றாசையில்லாமல் அகலிகைசொல்லிநிற்க

வாசவனுமந்நேரம் மயக்கத்தால்வீழ்த்திறைஞ்சி
ஆசைத்துயர்தீர்ப்பாய் அகலிகையேயென்றிருந்தான்
அப்போதுமகரிஷியு மதிவேகமாகவந்தார்
மெய்யாகப்போனவரும் மீண்டுவந்தாரந்நேரம்
கண்டார்தம்ஞானத்தால் காரணமானதெல்லாம்
அண்டர்பதிக்கோனை ஆரடாவென்றதட்டப்
பூனையுருவங்கொண்டு போனானேயிந்திரனும்
ஆரடாயிந்நேர மறிவுகெட்டுவந்ததென்ன
பேரும்பிறப்பும் பிசகாமற்சொல்லெனவே
இந்திரனேநான்காண் ரிஷியேநானும்மிடத்தில்
வந்ததுவேறில்லை வருஷப்பலனுள்ளதெல்லாம்
சாஸ்திரங்கேட்கத் தான்வந்தேனென்றுரைத்தான்
இந்நேரம்நீயிங் கிடும்புசெய்யவந்தவன்காண்
அகலிகையையிச்சித்தே யடைந்தாய்நீயென்றுசொல்லி
ரிஷிக்குத்தன்கண்சிவந்து நெருப்புப்பொறிபறக்க
இன்றெரித்தோமாகி லிந்திரலோகமழியும்
இச்சாபமிந்திரனை யிருந்தழிக்கவேண்டுமென்று
துர்ச்சாபம்வேறு சொல்லுவாரப்போது
தன்தாரம்விட்டுப் பரதாரம்வேண்டினதால்
இந்திரன்சரீரமெல்லாம் யோனியாகப்போகவெண்ணி
ஆயிரம்யோனி அங்கமெல்லாந்தான்வெடிக்க
என்றுமகரிஷியும் ஏற்றதொருசாபமிடத்
தப்பாமலந்நேரம் குறியும்தோன்றியதேதான்
கண்டானேயிந்திரனும் கண்கலக்கமுண்டாகித்
தொழுவான்ரிஷியடியைத் தோற்றமுடனந்நேரம் [ன்
பெரியோரேநீர்பொறுப்பீர் பிழைசெய்தேனுன்சிறியே
அரியவினைக்காளானேன் ஆசையாகத்தான்விரும்பி
வஞ்சகனுமானேன் மாபாவிநானானேன்
வஞ்சகமாய்செய்தகுற்றம் மகரிஷியேநீர்பொறுப்பீர்
என்றுசொல்லியிந்திரனும் ரிஷியையடிபணிந்து
இந்திரலோகமிழந்துநான்போகாமல்
இச்சாபந்தீர்த்தே இரட்சிக்கவேணுமென்று
அச்சாபத்தோடே யவரருகில்நின்றழுதான்
இந்திரனைப்பார்த்து ரிஷியுமவரேதுரைப்பார்
இருடிகள்சாப மிந்திரனேதீராது
ஆணவமாயையினா லழியவந்தவிந்திரனே

தானுமாலயனுரைத் தரணியிலேபூசைசெய்தால்
ஆயிரம்யோனியு மாயிரங்கண்ணுகுமென்றூர்
ஆயிரங்கண்ணுகுமென்ற அம்முனியைதெண்டனிட்டுப்
பூசைசெய்தேயிந்திரனும் போனுன்காணநேரம்
அப்போதுமகரிஷியும் அகலிகையைப்பார்த்தவுடன்
கருங்கல்லாய்ப்போகவென்று கடுஞ்சாபமிட்டனரே
அப்போதேயகலிகை யடிதொழுதுதெண்டனிட்டு
வேர்த்துவிரைத்து மெய்கலங்கியுள்நடுங்கி
இச்சாபந்தானும் எனக்கோவரவேண்டும்
ஈதென்னமாயமோ எம்பெருமான்சோதனையோ
சாபநிவர்த்தி தானருளவேண்டுமென்று
அகலிகைதான்பணிந்துஅடிதொழுதுதெண்டனிட்டுக்
கேட்குமளவில் கிருபையுடன்மகரிஷியும்
அரக்கர்குலமறுக்க அன்பாகமாயவனூர்
ரவிகுலத்தில்வந்து தசரதன்பாலனுய்ப்பிறப்பார்
நாலுபேராகவந்து பிறந்துவளரும்நாளையிலே
விஸ்வாமித்திரர்செய்யும் வேள்விகெடும்படிக்குத்
தாடகைசிறுநீரால் தானழிப்பான்அம்முனியும்
தாடகையைச்சங்கரித்துத் தனிவேள்விமுடிப்பதற்கு
தசரதன்தன்னிடத்தில் சார்ந்துவிஸ்வாமித்திரரும்
இராமலட்சுமண ரிருவரையுந்தானழைத்து
சங்காரஞ்செய்துதனி வேள்வியைமுடித்து
மிதுலையைநோக்கி விசைந்துவருகையிலே
கலியாணம்பண்ணவென்று கனமாய்வருகையிலே
ஸ்ரீராமர்தன்பாதஞ் சிறப்பாகப்பட்டவுடன்
பெண்ணுகநீவருவாய் பேர்ந்துவிடுமுன்சாபம்
அப்போதுநானுன்னை யழைத்துக்கொள்வோமென்ன
கருங்கல்லின்பாறையாய்ப் போனுளேகன்னிகைதான்

விருத்தம்.

இந்திரலோகம்விட்டே யெழிலுறுபுவனஞ்சுற்றித்
தந்திரவானமெல்லாந் தயவுடன்வரும்போதந்த
மந்திரப்பெண்ணும்வந்து மலர்கொய்யும்போதுகண்டு
இந்திரன்மயங்கிவாடி யேகினுனிருப்பிடத்தில்
இருப்பிடந்தேடிப்பார்த்து இரவினிற்கோழியைப்போ
உருக்கொண்டுகூவியந்த ரிஷியினைக்கங்கைபோக்கி (ல்
யுருக்கினவகலிகையில் உணர்விலான்செல்லும்போது

செருக்கிலாரிஷியுங்கண்டு சினந்துதான்சாபமிட்டார். 2
செய்ததோர்சாபங்காமத் திருடனாய்வந்ததாலே
வெய்யனேபெண்மேல்மோக விருப்பமுமில்லையாகத்
துய்யதோர்மேனியெல்லாந் துயருடன்யோனியாகும்
பொய்யல்லவென்றுசொல்லிப் போவெனவிடைகொடு
இந்தநற்சாபத்தாலே யிந்திரன்தலைகவிழ்ந்து (த்தார்
அந்தநல்ரிஷியைத்தானு படிபணிந்தவனேகேட்கத்
தந்திரவீசனாரைத் தானுமேபூசைசெய்தால்
சுந்தரமேனியெல்லாம் துலங்குமாயிரங்கண்ணுமே. 4

வசனம்

இதனுடையவிபரம் எப்படியென்றால்தேவேந்திரன் மகவாசையால் தவசுசெய்யப்புறப்பட்டு வருகிறவழியில்மருத்துமாமலைக்கருகில் ரிஷிபத்தினி அகலிகைப்பெண்ரிஷிக்கு மலர்கொய்யவந்தவிடத்தில்இந்திரன் அப்பெண்ணினுடைய அழகுசவுந்தரியங்களைக்கண்டுதவம் மறந்து புத்திரநினைவும்விட்டுமையல்கொண்டு அப்பெண்வாழுகிறவிடம்போய்க் கோழியாய்நின்றுகூவி ரிஷியைவெளியிற்புறப்பட்டு ஸ்நானஞ்செய்யப்போகப்பண்ணுவித்து தான்சேரலாமென்றுயோசித்துச்செய்தான் அப்படியே ரிஷியும் பொழுதுவிடிந்ததென்று கங்கைக் கரையில்வந்து கங்கை நித்திரைசெய்கிறதைப்பார்த்து நந்தவனஞ்சென்று புஷ்பவிரிவுபார்ப்போமென்றுபார்க்கும்போது புஷ்பங்களெல்லா மரும்புமயமாயிருக்கிறதைக்கண்டு, அது ஓர் காரணமாயிருக்கிறதென தன்னுடைய இல்லிடமாகிய ஆசிரமத்திற்சென்றுபார்த்ததில் விரகதாபத்தைக்கேட்ட அவள்மனம்நொந்து சிலகொடுமையான வார்த்தைகளைச்சொல்லுகிறநேரத்தில்ரிஷி வருகிறசாடையைஇந்திரன்தெரிந்துபூனைவேஷம்போட்டதை ரிஷி ஞானதிருஷ்டியினாற் பார்த்து ஆரடா நீ உன்னுடைய பேருமூரும் வந்தவிதமுஞ் சொல்லென்றுகேட்க அடியேன் தேவேந்திரனென்றுபெயரைச் சொல்லி இந்தவருஷத்தியபஞ்சாங்கப்பலன்கேட்கவந்தேனென்று திருட்டுத்தனமாய்ச் சொன்னதைத் தெரிந்துஇவன் அகலிகையைக் கெடுக்க வந்தவனாய்க்காண்கிறதென்று மகாகோபத்துடனேரிஷியானவர் கண்களி

ரண்டும் நெருப்புப்பொறிபறக்கும்படி பார்த்து, தன் தாரமிருக்கஅயல்தாரத்துக்கு ஆசைப்பட்டதினால்உன் சரீரமெல்லாம் ஆயிரம் யோனிகளாக வெடிக்கக் கடவதென்று சாபமிட்டார். உடனே இந்திரனும் பயந்து நடுநடுங்கி மகாரிஷியைத் தெண்டனிட்டு நமஸ்கரித்து எளியேன் செய்த குற்றம்பொறுக்க வேணுமென்று வேண்டி நமஸ்காரம் செய்ததின் பேரில் ரிஷிக்குக் கொஞ்சந்தயவுவந்து சுவாமி கயிலையங்கிரி வாசரைப் பூசைசெய்தால் இந்தச்சாபம் அவராலே தீர்ந்து ஆயிரம்யோனியும் ஆயிரங் கண்ணாகு மென்று விடைகொடுக்க, அப்படியே தேவேந்திரன் தன்னுடையபட்டணத்திற்குவந்து சுவாமி கயிலையங்கிரிவாசனைப் பூசைசெய்துவர முன்சொன்னபடியே ஆயிரங்கண்ணைப் பெற்றுக்கொண்டான். அப்பாலே நடக்கிற அதிசயங்களை இனிமேல் வெகு விஸ்தாரமாகச் சொல்லுகிறோம் அகலிகை பெண்ணுக்கு நடக்கிற விவரத்தைக் கேட்பீர்களாக.

விருத்தம்.

கவுதமரிஷியும்பெண்ணைக் கண்டகலிகையேயுன்னைச்
சவுமியமாகக்கண்டு இந்திரன்சார்ந்ததாலே (று
புவிதனிற்கருங்கல்லாகிப் பொற்பெலாங்குறைவாயென்
தவமுனிமுனிந்துநின்று சாற்றினார்சாபத்தானே. 1
எந்தனுக்கிட்டசாப மெந்தநாட்போமென்றேங்க
அந்தநற்சாபந்தீர வானதோர்வகையுஞ்சொல்வார்
சுந்தரதசரதற்குத் தோன்றியராமன்பாதம்
உந்தன்மேற்பட்டபோதேயொழிந்திடுஞ்சாபமென்றார்.

அஃதெப்படியென்றால் அகலிகையானபெண் மற்றொருபுருஷாள்வாடை படாதபெண்ணானதால்இந்திரன்கண்டுமோகித்ததினால் இந்தத்தேகமவிட்டுமறுதேகமாறவேண்டியதற்குக் கருங்கல்லாய்ப் போகக் கடவதென்றுசபித்ததாலே அகலிகையானவள்ரிஷியானவரைத் தோத்திரஞ்செய்து எனக்கிட்ட சாபம் எப்போது நீங்கும்என்றுகேட்க, மகாவிஷ்ணுவானவர் அரக்கர் குலமறுக்கவேண்டியதற்காகதசரதர்புத்திரனாகச்செனித்து இராமனென்று நாமத்துட னிருக்குங்காலத்தில் விஸ்

வாமித்திரரானவர் வேள்விசெய்கிறதைதாடகைசிறுநீ ராலழிக்கிறவேதனையை நீக்கவேண்டித் தசரதரிடத்திற் கேட்டு ஸ்ரீராமனை அழைத்துக்கொண்டுபோய்தாடகை சம்மாரஞ்செய்து மிதுலையிற்சீதைக்கு கலியாணஞ்செய் யவரும்போது அந்தராமனுடைய திருப்பாதம் உன் பேரில் பட்டவுடனேபெண்ணுருவாகி என்னிடம்வரு வாய் அப்போது உன்னைச் சேர்த்துக் கொள்ளுகிறே னென்றுவிடைகொடுத்தபடியேசிலநாட் சென்றுஸ்ரீரா மர்வந்து தாடகையைக்கொன்றுவிஸ்வாமித்திரருக்குச் சந்தோஷஞ்செய்வித்து மிதுலையிற் சீதையைக் கலியா ணஞ்செய்ய வரும்வழியில் ஸ்ரீராமருடையபாதம் அக லிகைப்பெண்பேரில் பட்டுத் தன் சொரூபமானதை ஸ்ரீராமர்பார்த்து இதுவென்ன விபரமென்றுவிஸ்வா மித்திரைக்கேட்க அகலிகையானவள் நடந்த விருத் தாந்தமெல்லா மவரிடஞ்சொல்லஅப்பால் ஸ்ரீராமமூர் த்திரிஷியிடத்திற்குப்போகும்படியுத்தரவுகொடுக்க அப் படியே ரிஷியிடம் அகலிகைப்பெண்வந்துசேர்ந்துவா ழ்ந்துகொண்டிருந்தாள். அப்பால்தேவேந்திரன் நடக் கிறவிருத்தாந்தமும் அதின்மேல்நடக்கிறதையுஞ்சொ ல்லுகிறோம் கேட்பீர்களாக.

நடை.

இந்திரனார்தன்கதையை யியம்புகிறேன்கேளுமினி
ஆயிரம்யோனியுங் கண்ணாகுமென்றமாமுனியைத்
தெண்டனிட்டுக்கொண்டு திருப்பினார்பூசைசெய்யத்
தாணுவைமாலயனைத் தானேமனதிலெண்ணி
ஆணவமாயைதனை யகலவிட்டுயோகமதாய்த்
தான்செய்தகுற்றமெல்லாந் தாணுவேதீருமென்று
வனத்துரிஷிசாபமதை மாலயனேதீருமென்று
மெத்தவேபூஜை விரும்பியேசெய்யலுற்றார்
பூஜைதனைச்செய்த புதுமைகளைக்கண்டுமிக
தாணுவுமாலயனும் தயவுடனேவந்துதித்து
ஆயிரம்யோனியுனக் காயிரங்கண்ணாகுமென்றார்
ஆயிரங்கண்ணாக அயிராவதத்தோனும்
வரமதிகப்பெற்று வாழுகிறநாளையிலே
அகலிகைசாபம் பிடித்ததேயந்நேரம்

தெய்வலோகபட்டணத்தில் வாழ்கின்றதேவருக்கும்
எல்லார்க்குமாகப் பிடித்ததேசாபமது
வானுலகெல்லா மலடாகப்போனதுகாண்
தான்மலடுமல்லாமல் தரணியெல்லாம்தான்மலடாய்ப்
பூமிவினையால் பொன்மாரிபெய்யாமல்
காமனெரிந்ததுபோல் காடுகளெல்லாமெரிய
காய்க்குமரங்களெல்லாம் காயுதிர்ந்துபோனதுவே
பால்பசுக்களெல்லாம் பால்வற்றிநின்றதுகாண்
பட்சிபறவையெல்லாம் பாழ்மலடுதானாக
கரடிமிருகமெல்லாம் கடுமலடாய்ப்போனதுவே
புல்லுங்கருகிமிகப் பூக்களுமேயில்லாமல்
இந்திரலோகமெல்லா மீடழிந்துபோனதுவே
இந்திரனார்தேவி இதுவெல்லாந்தான்தெரிந்து
இந்திராணியென்று இளங்கோதை நானிருக்க
அனர்த்தம்விளைத்தீரே ஆனதொருஇந்திரனே
ரிஷியினதுசாபம் பலித்ததேயிப்போது
பத்தினிசாபம் பலித்ததுவுங்கண்டீரே
அவர்களதுசாபம் அவனியெல்லாஞ்சூழ்ந்ததுவே
மதிகொண்டுவாழ்கையிலே மதிமயங்கிப்போனீரே
தபசுமறந்து தட்டழிந்தகாரணத்தால்
மனத்திற்றுயரமதாய் மலடாயிருந்தோமே
இடுவார்கள்பிச்சைதனைக்கெடுவார்தடுத்தாற்போல்
படுவார்கள்பாடெல்லாம் பட்டோமேயிந்திரரே
அம்பலத்தில்நின்றலையும் அனியாயஞ்செய்தவர்போல்
ஊராருடைமைக்குப் பேராசைகொண்டவர்போல்
தேவர்களெல்லாருஞ் சேரமலடானோம்
இந்தப்படிசொல்லி இந்திராணிதான்புலம்ப
இந்திரனுங்கேட்டு லச்சையுற்றுதான்வாடி
எந்தவிதியாலே எனக்குமேயிந்தவினை
வந்ததேயென்று மனக்கவலைதான்கொண்டு
மானேகுயிலே மரகதமேநீகேளாய்
தேனேகனியே தெவிட்டாததெள்ளமுதே
அந்தரம்பைமாதை அடிமைகொள்ளும்பெண்ணேநீ
புத்திரனில்லாமல் பூதலத்திற்வாழ்வென்ன
சேனைபலதாழச் சிறுவனொருவனில்லை
மைந்தனில்லாவீட்டில் மறையோர்புசிப்பதில்லை

மகனில்லாவீட்டில் மற்றொருவர்போகார்காண்
வடிவுள்ளமாமயிலே வகையொன்றுசொல்லுகிறேன்
அரனாரைநோக்கி யதிகதவஞ்செய்தக்கால்
அம்மையுமைபார்வதிபால் அதிகதவஞ்செய்தாக்கால்
எல்லாப்பதமும் இயல்புமிகவுண்டாகும்
என்றுமனையாட்கு இப்படியேசொல்லியபின்
துய்யமதியுடையாள் சுந்தரியுமேதுசொல்வாள்
மைந்தனில்லாது மழைகாணுவான்பயிர்போல்
வாடிமிகத்தளர்ந்து மயங்கிமுகம்வாடி
என்றுரைத்தசுந்தரிக்கு இந்திரனாரேதுசொல்வார்

விருத்தம்.

மங்கையேசொல்லக்கேளாய் மைந்தனில்லாமையாலே
தங்கியேவாழ்ந்திருந்துந் தரணியில்வசையும்ஆச்சு
கங்கைவேணியர்தன்பாதங் கண்டுமேவரத்தைப்பெற்று
இங்குநாம்வருவோமென்றே யேகினார்கைலைமீதில்.

நடை.

சென்றுசிவன்கயிலை சேர்ந்தேயிருவருந்தான்
சத்தியைவேண்டி தவம்பெறவேவேண்டுமென்று
சங்கரனாரஞ்செழுத்தைத் தங்கள்மனதில்வைத்து
சிவனோடுமையாளைச் சிந்தையிலேதானினைந்து
இந்திரனுந்தேவியுமாய் ஈசுரர்பாலேகலுற்றார்
இந்தப்படியே இருவரும்ஒற்றுமையாய்
கயிலைதனைநோக்கிக் கடுகவேதானடந்தார்
கடிதாய்வழிநடந்து கைலைக்குப்போனார்காண்
தென்கயிலைசேர்ந்து சிந்தனையாயிருபேரும்
நந்திதனைக்கண்டு நமஸ்கரித்தாரந்நேரம்
நின்றுகைகூப்பி நெடுமூச்செறிந்துநின்றார்
நெடுமூச்செறிந்துநொந்து நின்றவரைத்தான்பார்த்து
தடுமாற்றம்நீக்கித் தயவாகவார்த்தைசொல்லித்
தேவியுநீயுந் தேடிவந்தகாரியமேன்
தேடிவந்தகாரியத்தைச் செப்புமெனவுரைத்தார்
அவ்வார்த்தைகேட்டு அமரர்கோனேதுரைப்பார்
எவ்வார்த்தையென்று இயம்புவேன்னடியேன்
சீராயுரைசெய்தார் சிரிப்பார்களெல்லோரும்
மகனாசையாலே வருந்திநடந்துவந்தோம்
புத்திரனுமில்லாமல் பொன்னுலகையாண்டிருந்தோம்

பொன்னுலகையாளப் புத்திரனுந்தானுமில்லை
சந்ததிக்காகத் தவம்பெறவேவந்தோங்காண்
எம்மைக்காத்து ரட்சிக்கவேணுமென்றார்
அந்தமொழிகேட்டு அருள்நந்தியேதுரைப்பார்
வந்தது நன்றுநன்று மகவுயங்குண்டாகும்
சிவனோடுமையாளைச் சிந்தையிலேதானினைந்து
தவமாயிருந்து தரையில்மிகஊசிவைத்து
ஊசிமேல்நின்று உற்றதவஞ்செய்வீரானால்
சிவனோடுமையாளுஞ் சிந்தைமகிழ்ந்து
சந்ததிப்பாக்கியமுந் தந்தேயருள்புரிவார்
இந்தப்படி நந்தி யெடுத்துரைக்கவப்போது
நன்றெனவேயிந்திரனும் நாயகியுமப்போது
ஆற்றில்முழுகி யஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து
ஊசிநிறுத்தியதில் ஒருகாலேதானூன்றி
நின்றார்தவத்தில் நிர்மலனைத்தானினைந்து
இந்திராணிதானும் இருந்தார்நெடுந்தவத்தில்
ஈசனேபிள்ளை யருள்கவென்றுமனதில்வைத்து
இருவரும்ஒன்றாய் இருந்தார்நெடுந்தவத்தில்
உள்ளங்காலுச்சி யொன்றுந்தெரியாமல்
இல்லாதபுற்றும் தானேவளர்ந்ததுகாண்
வேருகளோடி வியன்மரங்களுண்டாகி
பாருக்குள்வேரோடிப் படரத்தபசுசெய்தார்
அந்தத்தவத்தருமை யாரறியவில்லை
ஆனபொழுதிந்திரனும் அவன்மனைவிதன்னுடனே
எந்தப்படிதவங்கள் செய்வோமென நினைத்து
சுந்தரியாள்தன்னுடனே சொல்லிவிசாரமுற்று
பாதாளம்தோன்றவெட்டிப் பாங்காயனல்வளர்த்தி
வேதாள அக்கினிப்போல் மேலேபடர்ந்தெரிய
ஈசனேபிள்ளையரு ளென்றேதவமிருந்தார்
தண்ணீர் அருந்தாமல் சருகுபுசியாமல்
இந்தப்படியிருந்தார் இரண்டாயிரவருஷம்
அந்தத்தபசு அருமை யாரறுந்தானறிந்து
பார்வதிக்குமப்போ பரமனருள்செய்தாரே
பெண்ணேயவரருகே போவோமெனவுரைத்துக்
கண்டார்சிவனுங் கனிவாயுமையவளும்
முப்பத்துமுக்கோடி தேவர்கள்போற்றிநிற்க

நாற்பத்துநாற்கோடி ரிஷிகளும்நயந்துதொழ
தவத்தருமைபார்த்துச் சந்தோஷமுண்டாக
உமையாளும்அங்கே யுத்தரங்கள்சொல்லுகிறாள்
பொன்னுலகையாண்டுமிகப் போகம்படைத்தருளி
மன்னுமுடிதேவரெல்லாம் வந்துதொழுதேத்த
இந்தப்படிக்குத்தவத்தையேதுக்குத்தான்கொடுத்தீரே
புத்திரனில்லாச்செல்வ போதக்கொடுத்தீரே
புற்றுவளர்ந்து போதமரமுண்டாக்கி
கண்ணீரொழுகுவதைக் கண்ணினாற்காணுமென்று
சிவனாரிடத்தில் செப்பினாள்பார்வதியும்
உள்ளபடிசொன்னா யுமையவளேயென்றுரைத்தார்
கள்ளனிவனிந்திரனுங் கடுங்குற்றஞ்செய்ததுண்டு
மானேயவன்றன் மனதின்படிசெய்வோம்
தேனேயவன்செய்த தீவினைகள்மெத்தவுண்டு
ஒன்றுமறியாமல் உபாயமாய்ச்சொன்னதென்ன
ஆனால்உனக்காக வருள்செய்வோங்கண்டாயே
என்றுசிவனார் இரங்கிவுரைத்தார்காண்
உமையாளுமங்கே யேதுரைப்பாள்மனம்நடுங்கி
ஈசரேயும்மடியார் ஏதுபிழைசெய்தாலும்
நேயமுடனதனை நீர்பொறுக்கவேண்டாமோ
என்றுமையாள்சொல்ல இறையோன்மனமகிழ்ந்து
மன்றல்செறிவெள்ளி மலைதனிலேவீற்றிருந்த
நந்திதனையழைத்து நல்லதொருஇந்திரனைக்
கூட்டிவரச்சொல்லிக் கொடுத்தார்காண்உத்தரவு
வெற்றிபுனைநந்தி விரைந்தோடியேயழைக்க
இந்திரனும்தேவியுமாய் இன்பமுடன்தானெழுந்து
நந்திசர்பின்னே நன்றாய்நடந்தனரே
கந்தமலர்க்குழலுங் கடுகெனவேதானடந்தார்
கூட்டியேதானும் கோமானைத்தேவியுடன்
தேடுபுகழ்நந்தி திருவாசலில்நிறுத்தி
எண்ணத்தொலையாத இடியேறுதான்முழங்க
வண்ணக்கடல்முரசு வகைவகையாய்த்தான்முழங்க
சிந்தைமகிழ்ந்து திருநந்தித்தான்கொலுவில்
வந்துபடிந்து ஃலக்கைப்பிரம்பதனால்
இதங்கள்அறியாமல் எதிர்த்துநின்றதேவர்தம்மை
ஒதுக்கிவிலக்கி யொருபால்நிறுத்தினரே

நேரேவிலக்கி நிறுத்தினார்விஞ்சையரை
யுற்றபிரம்மால் ஒதுக்கியொருபுறமாய்ச்
சென்னிவணங்கித் திரண்டுதொழுந்தேவர்களை
யுன்னியடித்தங் கொருபால்நிறுத்தியபின்
காலவெமதூதரையுங் கடக்கநிறுத்தினரே
வருணன்முதல்மற்றவரை வாகாய்நிறுத்தியபின்
ஈசனுக்குத்தோழனை யேற்றகுபேரனையும்
உத்திரரையிம்பக்கத் துண்மையாய்த்தானிறுத்தி
ஆனைமுகத்தானுடனே ஆறுமுகத்தனையும்
சேனைநடுமத்தியிலே சிறக்கஇருத்தியவர்
பக்கத்தில்வீர பத்திரனைத்தானிறுத்தி
மேனகையினோடு விளங்குமரம்பையுடன்
ஆனஊர்வசியும் அந்தமுள்ள திலோத்தமையும்
நாடகங்களாடுமந்த நாதன்சிவசபையில்
தேடுபுகழ்நந்தி சேர்ந்தபலநாதர்களை
மிஞ்சுநவக்கிரக வேடிக்கையுள்ளவரை
அஞ்சாமற்சொல்லி அடைவாய்நிறுத்தினர்காண்
காளிகளைஎல்லாம் கடுகநிறுத்தியபின்
சத்தமகாரிஷிகளையுஞ் சங்கையுடனேநிறுத்தி
மற்றுமுள்ளபேர்களையும் வகையாகத்தானிறுத்தி
விருப்பமுடன்நந்தி விண்ணவர்கோன்கிட்டவந்து
வந்தரனார்பாதம் வணங்குவாயென்றுசொல்ல
அந்தப்படியே யரனார்திருமுன்பு
சென்றுபுகுமிந்திரனுந் தேவிருந்திராணியுமாய்
மன்றில்விழுந்து மலரடியைப்போற்றிசெய்யச்
சிந்தைமகிழ்ந்து சிவனாரெழுந்திரென்றார்
திருவாய்மொழிகேட்டுத் தேவியுடனிந்திரனும்
எழுந்துநின்றுகைகட்டி யெதிராகவேநிற்க
வந்தகருமத்தை வகையாகச்சொல்லுமென
இந்திரனுமப்போது இயல்பாகச்சொல்லுகிறான்
புத்திரனில்லாமற் பொன்னுலகையாண்டிருந்தேன்
புத்திரனில்லாதார் பொசிப்புப்புழுவலவோ
எத்தனைதான்வாழ்வு இயல்பாய்ப்பெற்றாலும்
புத்திரனையில்லாமல் புலைநரகில்போவேனோ
சந்ததிதான்தாருமெனத் தார்வேந்தன்கேட்டதின்பின்
இந்திரனேசந்ததிதான் தந்தோமெனவுரைத்தார்

சந்ததிதந்த சங்கரனூர்சொற்படியே
இந்திரனுந்தேவியுமா யின்பமுற்றுமீண்டனரே
மீண்டுமேயவர்கள் விரைந்துவரும்வழியில்
ஊர்பதியைநோக்கி யுலாவிவந்தாரப்போது
காமதேனுநற்பசுவைக் கயிலையிலேவரவழைத்து
பசுவின்முகம்பார்த்துப் பரமனருள்புரிவார்
சந்ததியில்லாமற் தவம்செய்த இந்திரற்காய்
உன்னையவர்களுட னனுப்புகிறோமொன்றுசெய்வாய்
அன்புடனே நீபோய் அருகிருந்துதான்வளர்ந்து
பாலகனையீன்ற பாங்குடனேதான்கொடுத்து
வந்துவிடும்நீயும் மாதேயிளப்பசுவே
என்றுசிவனூர் இவ்வார்த்தைசொல்லியபின்
நிமலன்றனைப்பார்த்து நெடுமூச்சுத்தானெறிந்து
தோத்திரங்கள்செய்து சொல்லுகின்றதப்பசுவும்
பூலோகம்போயிருக்கப் பொறுக்குமோஎன்னுடல்தான்
பூலோகம்போயிருந்து புத்திரனையீன்றபின்பு
எனக்குமேமோட்சகதி யெப்போவெனக்கேட்க
அப்போசிவபெருமான் அன்புமிகப்பெருகி
வாராய்பசுவே வருந்திமெலியாதே
புத்திரனையீன்றவுடன் பூந்தேர்அனுப்புகிறோம்
உன்னுணை நாமும் உடனழைத்துக்கொள்ளுகிறோம்
என்றுசிவனூர் எளிதாயுரைத்தபின்பு
அந்நேரமேசிவனூர் அன்புவிடைதான்கொடுத்தார்
பசுவுமேயப்போது பரமனருட்படியே
இடியும்கடலும்போ லெங்குமேதான்முழங்க
அவரடியின்பின்னே யலறித்தொடர்ந்ததுவே

விருத்தம்.

அந்தநற்கயிலைவாசன் அருட்படிகாமதேனு,இத்திரன்பின்னே நல்ல விளங்கன்றாய்வேடங்கொண்டு, பந்துபோற்குதித்துமெள்ளப்பாரினில்வந்துமேவ,வந்ததோர்பசுவையிந்திரன் வரிசையாய்த் துதிகொள்வானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் கயிலையங்கிரி வாசரான பரமேஸ்வரர் காமதேனுவாகிய பசுவை வரவழைத்து தவஞ்செய்கிற இந்திரனிந்திராணிக்கு நீ போயிருந்து ஒருபுத்திரனையீன்று கொடுத்துவாவென்று விடைகொ

டுக்க அப்போ பசுவானது எனக்கு மோட்சகதி எப்பொழுதென்றுகேட்க பரமேஸ்வரர் புத்திரனைப் பெற்றுக்கொடுத்தவுடனே பூந்தோரணுப்பிஉன்னைஇவ்விடம் வரவழைத்துக்கொள்வோமென்றுசொல்லி விடைகொடுக்க அப்படியே இளங்கன்றாகி வேடங்கொண்டுஅண்டபுவனங்களெல்லாம்இடிபோல்முழங்கத்தக்கதாகஇந்திரனிந்திராணிபோனவழித் தடம்நோக்கி அவர்களிருவரையுங் கண்டவுடனே அவர்களிருவரும் பசுவாகிய கன்றைக்கண்டு இதுகாரணமாயிருக்குதென்றுயோசனை செய்துஇதைப் பார்வதிசமேதராகியகடவுள் அனுப்பினதாய்த் தெரிகிறதென்று இருவரும்ஆனந்தங்கொண்டு பசுவைக் கட்டிமுத்தமிட்டு தங்கள் கூடவே கூட்டிவருகிறார்கள் எ-று.

நடை.

வந்ததொருகன்றை வாரியெடுத்தணைத்து
அவாவியெடுத்து அங்கமெல்லாந்தான்குளிர்ந்து
இன்று நமக்கீசர் ஈந்தருளுஞ்செல்வமென்று
கன்றையெடுத்துக் கடுகவழிநடந்தார்
பூபாலரெல்லாம் பூமலர்பொய்தனர்காண்
மற்றுமுள்ளவரெல்லா மனமகிழ்ந்துகொண்டாட
பிரமாமுதலானோர் பிரியமுடன்பார்த்துநிற்க
நடந்தாரர்களிருவருமே நல்லுலகந்தானோக்கி
ஒருவர்க்கொருவர் உவந்துதான்பேசி
சந்தியாய்வந்தகன்றைத் தான்கொண்டுசென்றார்கள்
பட்டணத்திலுள்ள பரிஜனங்களெல்லோரும்
இந்திரனிந்திராணி யிவர்கள்வரவுகண்டு
சந்திபாக்கியமுந் தான்பெற்றுவாரார்கள்
என்றுசொல்லியப்போ இயல்பாய்ப்பறையறைந்தார்
பறையோசைகேட்டவர்கள் பாக்யம்பெற்றோமெனவே
பட்டணஞ்சென்றமாதர் பதியுமிந்திராணியுமாய்
சிங்காதனத்திலே சிறக்கவேதானிருக்க
செம்பொற்பதியில் சிறப்புடனே தானிருக்க
நல்லதொருசுந்தரியும் நன்றாய்மனமகிழ்ந்து
சங்கரனாரெங்களுக்குத் தயவாகக்கொடுத்தகன்றை
அழகான நற்கன்றை வளர்த்தெடுக்கவேணுமென்று
தாதியரையழைத்து தயவாயுரைத்தனர்காண்

மாமனையீர் நீங்கள் மகிழ்ந்துமேகொண்டாடி
கானகத்திலோட்டாமல் கனமாய்வளர்க்கவென்று
சாற்றுமந்தவார்த்தைதன்னைத் தான்கேட்டுதாதியர்கள்
போற்றியெடுத்தணைத்துப்பொன்போல்வளர்க்கலுற்றார்
சீருடனேபோற்றிந் திரமாய்வளர்க்கலுற்றார்
ஒருநாளுக்கொருநாள் ஓங்கிவளர்சந்திரன்போல்
அருமையாய்க்கன்றுதனை அன்பாய்வளர்த்தனர்காண்
பேரிடவேணுமென்று பேர்முகூர்த்தம்தான்பார்த்து
பஞ்சாங்கக்காரரையும் பாங்காயழையுமென்றார்
வேதப்பிராமணரை விரைந்தேயழையுமென்றார்
சாத்திரவாதியெல்லாத் தாமேயழையுமென்றார்
தபோதனரையெல்லாந் தாமேயழையுமென்றார்
கட்டியக்காரர்சென்று கடிந்துமிகவாடிப்
பார்ப்பாரையெல்லாம் பாங்காயழைத்துவந்தார்
தபோதனர்கேட்டவுடனே சந்தோஷமாகவந்தார்
சாத்திரவாதியெல்லாந் தானேதான்வந்தனர்காண்
நாளுமுகூர்த்தம் நல்லதினம்பார்த்திருந்தார்
ஆர்பேரிடுவமென்று ஆலோசனைசெய்தார்
அப்பொழுதுவியாச பகவான் அருளொடு
இந்திரன்தாயார் இளங்கொடியாள்தன்பெயரை
இடுமென்றுசொன்னபடி எல்லோருஞ்சொன்னார்காண்
அந்தப்படிபெயரை அழைக்கவேணுமென்று
வைகாசிமாதம் வளர்ந்தஇருபத்தொன்றில்
சுக்கிரவாரமது சூழ்ந்ததிருவாதிரையில்
அமுர்தகணயோகம் அன்பாயிருக்குதென்றார்
அந்தப்படியே அவர்கள்மொழிதப்பாமல்
பட்டணமெல்லாம் பதிவாயலங்கரித்து
சோடித்தெல்லோர்க்குங் கொடுத்தாரேதட்சணைகள்
தட்சணைகொடுத்தவுடன் திருப்பெயரைத்தானழைத்தார்
மாவேந்திரியென்று வரவழைத்தாரப்பசுவை
அழைத்தவுடனே மனைவருந்தானமிட்டார
மாதானங்கோதானம் வஸ்திரதானமுதல்
வாத்தியங்களெல்லாம் வரிசையாய்த்தான்முழங்கப்
பதினெட்டுவாத்தியமும் பாங்காய்முழங்கிடவே
நாடகசாலைப்பெண்கள் நாட்டியங்கள்தானுட
ஓமங்கள்பூசைகள் ஒன்றுந்தவறுதபடி

அன்னதானங்கள்முதல் அன்பாய்க்கொடுத்தனர்காண்
பட்டுபட்டாவளியும் பாங்காய்கொடுத்தனரே
இந்தப்படியே இருபதுநாள்வரைக்கும்
மைதவபூங்கன்றுக்கு மெய்யாகப்பணிபூண
பொன்னாலேதும்பும் புரிகயறும்போட்டார்காண்
நாலுகாலிற்குளம்பும் நல்லதொருதங்கமதாய்
மேனியெல்லாம்தங்கமதாய் மின்னும்படிசெய்து
நவரத்தினவகைகளெல்லாம் நன்றாகத்தானழுத்தி
ஆபரணதியெல்லாம் ஆணிமுத்துவயிரமதாய்
கொம்புக்குநல்ல கோமேதகமழுத்தி
நாலுகாலிற்சிலம்பு நல்லதொருவயிரத்தால்
வாரியேபூட்டி வளர்த்தார்கள் நற்பசுவை
பாலமுதமூட்டிப் பரிவாய்வளர்க்கையிலே
பூம்பந்தற்குள்ளே போற்றிவளர்க்கையிலே
இந்தவரிசையா யிதமாய்வளர்க்கையிலே
நாலிரண்டுநாளையிலே நற்பசுவுந்தான்வளர
திங்கட்பிறைபோலச் சீர்பெற்றுத்தான்வளர [தார்
பிள்ளையென்றுசொல்லிப் பெருமையுடன்தான்வளர்த்
இந்திராணிசெய்யும்வகை யேதென்றுதான்கேட்கில்
நித்தப்படிநடக்கும் நியமநிஷ்டைசொல்லுகிறேன்
பொய்கையதனிற்சென்று போதவேநீராடி
சிவபூசைதவபூசை செப்பமுடன்செய்தபின்பு
தங்கநற்செம்புதன்னிற் றானேசலங்கொண்டு
புட்பாதிகளெல்லாம் போதவேகொண்டுவந்து
பசுவினிடபாதமதைப் பாங்குடனேசுத்திசெய்து
பத்திரபுட்பமதைப் பாங்குடனேதான்சாத்தி
சிவனைநினைத்துத் தோத்திரங்கள்செய்துவந்தாள்
இந்தப்படியே யிருக்குமந்தநாளையிலே
பசவின்முகத்தைப் பார்த்துமனஞ்சலித்து
நெடுநாளுந்தானுச்சே நீயுமெனைப்போலே
நிற்கும்வகையேதென்று நிமலனைத்தான்தொழுவாள்

விருத்தம். [யுண்டோ

ஐயையோசிவனே நான்செய்யறத்தினுங்கொடுமை
வையகந்தன்னிலே மலடியேன்றென்னைவைத்துந்
துய்யநற்பசுவுங்கூடச் சுரப்பிலாமலடாய்நிற்கச்[வாள்
செய்யுமாறேதோவென்று சிந்தையும்நொந்துசொல்

வசனம்

அதெப்படியென்றல் தேவேந்திரனும் இந்திராணியும் அதிகதவசுசெய்து வரம்பெற்றுத் தங்கள் பதியைநோக்கிவரும்போது சுவாமிஉத்திரவு கொடுத்தனுப்பிய காமதேனுவாகிய பசுவானது தங்களிடஞ்சேர்ந்ததைக்கண்டு சுவாமியும் உமையாளும் அனுப்பினரென்று மகாசந்தோஷத்துடன் அவர்களும்போற்றிவளர்க்கநெடுநாட்சென்றும்நம்மைப்போலேநாம்வளர்த்த பசுவானதும் மலடாய் நிற்கிறகாரணம் என்னமோவென்றுவையகத்திற் பேரெடுத்ததுமல்லாமல் தபசுசெய்துகிடைத்தபசுவும் இப்படிநிற்கிறதென்று இந்திரனிடத்தில் இந்திராணி நெடுமூச்செறிந்து அவர்களிருவரும்புலப்பித்தவிக்கிரூர்கள் என்றவாறு. அப்பால்நடக்கும் அதிசயத்தை விவரமாகச் சொல்லுகிறேம்.

நடை

நாம்தாமலடிருந்தோம் நாம்வளர்த்தநற்பசுவும்
தவத்தருமையால்வந்த காமதேனுதான்மலடாம்
மலடாகிநின்ற மயக்கத்தைநான்பார்க்க
விதியோயிதுவும் விளம்பீரோவென்றுசொல்லி
இந்திரருங்கேட்டு யேங்கிமுகம்வாடி
நாகமடந்தையரே நானென்றுசொல்லுகிறேன்
இதுவரையும்பாலன் எமக்குவரக்காணேமே
இன்னமும்நான்போய் எங்கள்பரமேஸ்வரன்பால்
தபசுசெய்யநான்போவேன் தப்பாதிளங்கொடியே
சக்கரனேநோக்கித் தபசுமிகச்செய்து
வண்மையுள்ளகானகத்தில் மகாதவமாய்நானிருக்கப்
பூங்காவனந்தேடிப் போகிறேனென்றுசொல்லிக்
கமண்டலமும்புலித்தோலும் கையிற்பிரம்புடனே
கப்பறையும்புத்தகமும் கையில்மழுவாளுடனே
பத்தினிஅக்கினியைப் பாங்காகத்தான்வளர்த்தி
இந்திராணிதன்னிடத்தில்இயல்பாயனுப்பினன்காண்
வந்துமேகானகத்தில் வாய்த்ததவசுசெய்ய
சிவனைரநோக்கித் தெண்டனிட்டுதவசிருந்தான்
இந்திரனுங்கானகத்தி லிசைவாய்த்தவசிருந்தான்
அஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து அரனைமிகநினைத்து
ஆராலுமுடியாத அதிகதவஞ்செய்யலுற்றன்

சற்றுமசையாமல் தவஞ்செய்தானப்போது
முப்பத்துமுக்கோடி தேவர்களுமூத்தோரும்
நிருபன்குபேர நிருதிதிசைபாலகரும்
சந்திரருஞ்சூரியரும் சத்தமகாமுனியும்
தேவர்களெல்லோருஞ் சேரவேதான்கூடி
மூவரையுந்தெண்டனிட்டு முறைமையாய்ச் சொல்லுகி
சித்தமிரங்குமையா தேவேந்திரனாரும் [றார்
புத்திரவாஞ்சையினால் பூமிமறந்துவிட்டார்
மைந்தனைவேண்டி மகாதவசுசெய்கிறார்
அப்போதரனார் அகமகிழ்ந்துசொல்லுகிறார்
நந்தீசர்தன்னை நலமாகத்தானழைத்து
வள்ளுவனையிங்கே வரவழையுமென்றுரைத்தார்
செய்யசிவனாருந் திருவாய்மலர்ந்தருளி
சித்திரபுத்திரனை தேடியழையுமென்றார்
சித்திரபுத்திரரைச் சிரப்பாகக்கண்டான்காண்
அத்தனாரும்மை யழைத்துவரச்சொன்னார்காண்
சித்திரபுத்திருஞ் சிந்தைக்கமழ்ந்து
பாதமதில்வீழ்ந்து பணிந்துகொண்டார்புத்திரரும்
தேசம்விளையாடிவந்த சித்திரபுத்திரனே
கணக்காற்பெரியவனே காரியத்தில்வல்லவனே
தேவேந்திரனுமங்கே திகைக்கிறான்பிள்ளையின்றி
மைந்தனைவேண்டி வருந்திகிறானென்றுசொல்ல
சித்திரபுத்திரருஞ் செய்தியொன்றுசொல்லுகிறார்
அரியதவம்பண்ணினாலும் ஆவதுண்டோயிந்திரற்கு
மைந்தன்பிறக்க வழக்கில்லைநாயகரே
என்றருளிச்செய்ய இருந்தவர்களெல்லாம்
சத்தியருள்கொண்டு தவஞ்செய்தயிந்திரற்குப்
புத்திரனைத்தான்கொடுப்பாய் பூதநாதாவென்ன
சிவனாருமங்கே திருவாய்மலர்ந்தருளி
பூமிவிளையாடிவந்த புண்ணியரேநீருமொரு
தீமையைநீக்குமென்று திருவாய்மலரந்தொருளி
பாலகராய்ப்போய்ப்பிறக்கப் பாமன்விடைகொடுக்க
புத்திரராய்ப்போய்ப்பிறக்க சிவனார்விடைகொடுக்க
தேவேந்திரன்வயிற்றில் சென்மிக்கைதர்மமல்ல
இந்திரற்குப்பிள்ளை யெழுதவில்லைகணக்கிலெனை
அந்தமொழிகேட்டு அரனாருந்தான்மகிழ்ந்து

எந்தவகையானாலும் இந்திரற்குஅன்புடனே
செந்தாமரைப்பூ தினம்பூக்கும்பொய்கையிலே
இந்திராணிதான்வளர்ந்த இளம்பசுவுமப்போது
தண்ணீர்குடிக்கத்தான்வருமேயந்நேரம்
தாமரைப்பூவாகத் தண்ணீருடன்கலந்து
ஆவின்வயிற்றில் அவதரித்தேஅற்புதமாய்
வளர்த்தபசுவயிற்றில் வருவாயெனவுரைத்தார்
ஆகிலடியேன் அருள்பெற்றேனென்றுசொல்லி
சுகம்பெற்றேனென்று சொல்லிக்கும்பிட்டெழுந்திருந்
தேவர்முனிவரையுஞ் சிரப்பாகவேயனுப்பி [து
வாய்புதைத்துநின்று மகவைமிகநோக்கி
செப்புகின்றாரீசுரரும் சித்திரபுத்திரற்கு

விருத்தம்

அரனுடன்வாழுந்தேவரான தோருயிர்கட்கெல்லாம்
பரமனுடன்பாவபுண்ணிய பத்திரமெழுதவேண்டிக்
கரமிசையுதித்த புத்திரசிகாமணியேயென்
றருமையாயவனயீசன் வரவழைத்தருள்செய்வாரே. 1
சித்திரபுத்திரரைச் சிவனிமேவரவழைத்து
பத்திரவாவிதன்னிற் பாங்குளன்பூவாய்சென்று
வச்சிரன்வளர்த்தஆவின் வயிற்றினில்சென்றுபுக்குப்
புத்திரனைப்பிறக்கபோமெனவிடைகொடுத்தார். 2
எழுதியகணக்கைநீயும் இறைவள்மால்வசத்திலாக்ப்
பழுதில்லாப்பூமிதன்னிற் பகுத்துரைதெரியவப்பால்
வழுவில்லாதொழுகநாமும் வாழுனக்கருளிச்செய்தோ
எழுமெனப்பூமிபாரக் கணக்கையுமாலுக்கீந்தான். [ம்

வசனம்

அதெப்படியென்றால் மூன்கயிலாச பருவத்திலும் வைகுண்டத்திலும் பிர்மலோகத்திலுமுண்டான தேவர்கள் ரிஷிகள் தபோதனர்கள் முதலானவர்கள் செய்கின்றபாவபுண்ணிய கணக்குங் கருவும் பார்த்து சிருட்டி செய்த சித்திரபுத்திரரை ஈஸ்வரர் வரவழைத்துத் தேவேந்திரன் மகாகொரேமாய் அந்தரமான தவசுசெய்கிறதைப் பாருமென்றுசொல்ல அப்போ சித்திரபுத்திரர் அவருக்குச்சந்தானமில்லையே அவர் எப்படித்தவசு செய்தாலுமில்லையென்று சொல்ல அப்போது சிவன் எந்தவிதமாரிலும் நீயேபோய்ப் பிறந்து புத்திர வாஞ்

சையைத் தீர்க்கவேணுமென்று சொல்ல இந்திரன் வயிற்றிற் பிறக்கக்காரணமில்லை என்று சித்திரபுத்திரர் சொல்ல இந்திராணிக்கு நாம் அனுப்பிய காமதேனு வாகிய பசுவின் வயிற்றிற் செனித்தாற் குற்றமில்லை அதற்குச் சம்புமகாப் பொய்கையாகிய தடாகத்திற்றாம ரைப் புஷ்பமாய் அவதரித்தால் அப்பொழுது அந்தப் பசுவானது தண்ணீர் குடிக்கவரும் தண்ணீருடனே போய் செனித்து, பிறப்பாய் உடனே மகவாசை தீரும் பூமியிலுண்டாகிய முன் பாவபுண்ணிய கணக்கெடுத் தெழுதிக்கொடுத்துஎழுத்தாணியுங்கொடுத்து அவ்விட த்திலுண்டானகணக்குங்கருவூலமும்மகாவிஷ்ணுவசம் ஒப்புவிக்கச்சொல்லி யுத்தரவளித்தபடி ஒப்புவித்துப் பின்பு சித்திரபுத்திரர் அவ்விடத்திலுள்ள பெரியோர் களையெல்லாம் அழைத்துக்கொண்டு சம்புமகாப் பொய் கையில் வந்துஅவதரிக்கிறதை இனிச்சொல்லுகிறோம் என்றவாறு.

நடை

எந்தெந்தபுத்தகத்தை யெடுப்பேனென்கோவே
ஈசுவரரும்ஈசுவரியும் இன்பத்துடன்மகிழ்ந்து
ஆயிரம்பேராலும் அசைக்கவொண்ணாப்புத்தகத்தை
ஞானநெறிநீதிமறை நன்னூலின் நீடுபுகழ்
பூண்டவர்கள்புத்தகத்தைப் போயெடுத்துவாருமெனப்
போயெடுத்துவந்து பொற்பலகைதன்னில்வைத்தார்
பொன்னினெழுத்தாணியுடன் புத்தகமுங்கொடுத்தார்
முற்கணக்கும்பிற்கணக்கும்முன்னேட்டனுப்படியும்
எக்கணக்கும்பார்த்து எழுதுமென்றார்புத்திரரை
எழுதியநாள்வரையில் எடுத்துக்கொடுத்தனர்காண்
ஏழுலோகக்கணக்கு மெழுதிமிகக்கொடுத்து
பாவிகணக்கும் பஞ்சபாதகர்கணக்கும்
நாகலோகத்திலுள்ள நன்மையுள்ளதன்கணக்கும்
பூமிதனில்மாயவனார் புண்ணியபாவக்கணக்கும்
எல்லாக்கணக்கு மெழுதிமிகக்கொடுத்து
ஆதிபரமசிவன் அண்டரண்டந்தான்வகித்து
மூத்தகணபதியும் முதுகுவலமிருக்க
இளையகுமாரன் இடதுபக்கந்தானிருக்க
தேவாதிகளெல்லாஞ் சேரவேதானிருக்க

இருடிமுனிவர்கள் எல்லாருந்தானிருக்க
சாதிபதினெட்டுந் தப்பாமல்தான்வகித்து
எமதர்மராசன் இயல்காலதூதருடன்
பல்லாயிரங்கோடி பகிரண்டந்தான்வகுத்து
புண்ணியபாவம் புதுமையாய்த்தான்வகுத்து
இந்தவரைக்கணக்கை இயல்பாகத்தானெழுதும்
வச்சிரகாயமாய் வரைந்துகணக்கெழுதும்
பத்திரமாயதிகாரம் பலகாலும் பாங்குடனே
தப்பாமல்உன்தனக்குத் தந்தோமெனவுரைத்தார்
சந்திரசூரியர்கள் தங்களொளிபோலெனவே
குண்டலமுங்காதிலிட்டுக் கூந்தல்முடிசூட்டி
ஆபரணதியெல்லாம் அழகழகாய்த்தான்பூட்டி
சிவனாரிடத்தில் தீர்க்கவிடைவாங்கி
அம்மையுமையாளிடத்தில் அன்பாய்விடைவாங்கி
எண்ணாயிரம்பூதம் எடுக்கவொண்ணாப்பட்டோலை
கூட்டிச்சமைத்துக் கொடுத்தார்களந்நேரம்
கட்டிச்சுருட்டிக் கக்கத்திற்றானிடுக்கித்
தாங்குவாயென்று தானேவரங்கொடுத்தார்
தாமரைப்பூவாக வ்ஸ்தாபித் தாருத்தமரை
சித்திரைக்குட்சித்திரையிற் சிறந்தபௌர்ணமியில்
அந்தத்தலைக்கிழமை யாதித்தவாரமதில்
புத்தகமுமுந்நூலும் கூடப்பிறக்குமென்றார்
சிவனாருள்படிக்குச் சிறந்தவிடைவாங்கி
அயிராவதங்களென்னும் ஆனைகளைத்தான்பூட்டும்
ஆகாசத்தேரும் அப்போதுதான்கொடுத்தார்
ஆகாசத்தேரில் அப்போதுதானேரி
வாராரேயுத்தமனார் வாவிதனைநோக்கி
செண்பகங்களாடுமந்தச் சிறந்ததொருபொய்கையிலே
ஆணிப்பவளமும் அடுக்கடுக்காய்த்தான்விளையும்
வயிரவயிடூரியமும் வச்சிரகோமேதகமும்
புஷ்பராகங்களும் புகழுமந்தப்பொய்கைதனில்
முத்துக்கள்வந்து முழங்குமந்தவாவிதனில்
சங்குகள்சூல்கொண்டு தவழுமந்தப்பொய்கையிலே
கருடனுந்தன்னுடையகிளைக்கூடிக் கொண்டாடும்
மயிலினங்களெல்லாம் மகிழ்ந்துவிளையாடும்
அன்னங்கள்தாராக்கள் அமர்ந்தாடும்பொய்கையிலே

வானரங்கள்பாடி மகிழ்ந்துவிளையாடும்
மாடப்புருக்களெல்லாம் வரிசையாய்தானிருக்கும்
புனுகுடன்பிள்ளை பொருந்திமிகவாழும்
சவ்வாதுடன்பிள்ளை தானுமிகவாழும்
கஸ்தூரிபிள்ளை கவியுமந்தப்பொய்கைதனில்
கவரிமான்வந்து கலந்துவிளையாடும்
காண்டாமிருகங் கதித்தாடும்வாவிதனில்
புட்பாதிகளெல்லாம் பொலியுமந்தநீரதனில்
கனிவகைகளெல்லாங் காய்க்குமந்தப்பொய்கையிலே
செந்நெல்விளைந்து சிறந்திருக்கும்நீர்வாவி
மல்லிகைமுல்லை வாய்த்தசிறுபிச்சிகளும்
இருவாட்சிபிச்சி இருந்துமிகவீசும்
மருவும்மருக்கொழுந்தும் மணம்வீசும்பொய்கைதனில்
ஏலங்கிராம்பும் இலக்குமந்தநீர்வாவி
சாதிக்காய்பத்திரியும் தான்விளங்கும்பொய்கையிலே
மரங்களிற்றேனருவி வந்துமிகப்பாயும்
வண்டுகள்தும்பிமுதல் வந்துநுகர்பொய்கைதனில்
மந்திகள்பாய்ந்து மதுவுண்ணும்பொய்கைதனில்
செந்தாமரைபூத்துச் சிறப்பிக்கும்வாவிதனில்
அல்லிமலரும் அப்படியேதான்பூக்கும்
சந்திரசூரியர்கள் தானுதிக்கும்பொய்கைதனில்
ஆதிப்பிரமாவும் அமர்ந்தாடுநீர்வாவி
நாராயணர்முதலாய் நல்லரிஷிகளுமே
முனிவர்முதலானோர் முழுகுமந்தப்பொய்கையிலே
கன்னியர்களெல்லாங் கலந்துவிளையாடிடுவார்
பழவினைகளெல்லாம் பறந்தோடுங்கண்டீரே
தீவினைகளெல்லாந் திடுக்கிட்டுதானோடும்
பிணிகள்முதலாகப் பிறக்கிட்டுத்தானோடும்
கிழவர்முழுகினல் குமரராகிப்பிறப்பார்
இந்தவிதமா யிருக்குமந்தப்பொய்கையிலே
சித்திரபுத்திரருஞ் சீராகவந்துதித்தார்
தாமரைப்பூவாகத் தான்வந்தவதரித்தார்
இனிமேல்நடக்கும் இக்கதையைகேளுமென்றார்
ஏலக்கருங்குழலாள் இந்திராணிஅவள்தனக்கு
நித்திராதேவி நிறையவேதான்பிடித்துப்
பஞ்சணைமெத்தையினில் சயனித்தாள்பைங்கொடியும்

அப்போதுசொப்பனங்கள் அழகாகக்கண்டனளே
கண்டுமகிழ்ந்து கடுகியெழுந்திருந்து [ள்
தாதியரைத்தானழைத்துத் தானுமேயெடுத்துரைப்பா
இந்திரரைப்போல யெந்தன்மடிமீதில்
சந்திரர்கள்சூரியர்கள் தங்கள்ஒளிபோலப்
பதினாலுலோகமுதல் பண்பாய்கணக்கெழுதச்
செம்பொன்னெழுத்தாணியுடன்சேர்ந்தபிள்ளை தானிரு
பச்சுடம்புநல்ல பால்சுரக்கக்கண்டேனே [க்க
காயாதவாழை காய்க்கவுங்கண்டேனே
இன்பம்பெருகி யிருதோளும்பூரித்தேன்
கொட்டைப்பலாமரமும் கொழுந்துவிடக்கண்டேனே
கண்டகனவுங் கைமேற்பலிக்கவென்று
வேழமுகத்து விநாயகனைத்தெண்டனிட்டு
மயிலேறும்பெருமானை மனமகிழ்ந்துகொண்டாடி
மூவரையுமங்கே முழுதுமேதெண்டனிட்டாள்
சூரியபகவானை தோத்திரங்கள்செய்யலுற்றாள்
கண்டகனாப்படியே காசினியிற்கொண்டாடி
குண்டலங்கள்மின்னக் குமாரன்வந்துதோன்றுவதற்கு
பொற்கனகமாறி பொழிந்திடுங்களெல்லோரும்
என்றரனார்பாதம் ஏத்திப்பணிந்துநின்று
இந்திராணிதான்வளர்த்த இளம்பசுவையந்நேரம்
தும்புதரித்துவிட்டார் சூரியனுமப்போது
கட்டவிழ்த்துக்கொண்டு கடுகப்புறப்படுதே
இந்திராணியம்மை யிளங்கோதையோடிவந்து
முத்திமுகந்து முகத்தைமிகத்தடவி
நான்மலடியென்று நாடெல்லாந்தானறியும்
என்னோடேகூட நீமலடாகாமல்
இனத்துடனேகூடி யின்பமுறமேய்ந்திடுவாய்
வனங்கள்தனிலே வளர்மிருகமெத்தவுண்டு
இனத்தாரைவிட்டு இனம்பிரிந்துமேயாமல்
எல்லைகடவாமல் இளம்பயிரைத்தின்னாமல்
ஈனுதசாலி யிளஞ்சாலிதின்னாமல்
சூலையோடேஆமணக்கைகொழுந்தோடறுக்காதே
சோளக்கதிரைக்கண்டால் சுற்றியேமேயாமல்
இளங்கடுகுநாய்க்கடுகு ஏறிட்டுப்பாராமல்
கள்ளிகளைத்தின்னாமல் கண்டபுல்லுமேயாமல்

இத்தனையும் நீக்கி யிதமாகத்தான்மேய்ந்து
மாலைகறுகறுத்து மையிருளாகுமுன்னே
எல்லைக்குவந்துவிடு என்மகளேயென்றுசொல்லி
இந்தப்படியே யிசைந்தபுத்திதான்சொல்லி.
மேய்ந்துவாவென்றுசொல்லி விட்டாளேயப்பசுவை
மேய்ந்துவருவதற்கு மெய்குளிர்ந்தவப்பசுவும்
சிலம்புகலகலென செஞ்சதங்கையோசையிட
ஆபரணத்தோடே அசைந்தேவிளையாடி
அடிமேலடிவைத்து அன்னம்போல்தானடந்து
காட்டோடேசென்று கடுகவேதான்மேய்ந்து
பொற்புல்லுந்தின்று புனப்புல்லுந்தானருந்தி
தண்ணீர்தாகத்தைத் தான்பொறுக்கமாட்டாமல்
கண்ணாயிரமுடைய காவலனார்சோலையிலே
இந்தப்படியே யிருக்கிறநேரமதில்
சிவனாருமங்கே சித்தமகிழ்ந்தந்நேரம்
அலைகடலிலேயுதிக்கும் ஆதித்தபகவானை
விரையவேதானழைத்து விடைதந்தாரென்னவெனில்
தேசமதையாளும் தேவேந்திரன்தேவி
பிள்ளையாய்த்தான்வளர்த்த பெரியதொருபசுவும்
சம்புதலத்திற் ருனிருக்கும்சோலையிலே
திக்குதிசைகள் தெரியாமல்நிற்குதுகாண்
வழிதடங்காட்டி வரும்போதுவாவியிலே
தண்ணீர்குடிக்குந் தருவாயில்நீதானும்
செந்தாமரைபூவைச் சிறப்பாகமுன்னிடுவாய்
என்றரனார்சொல்ல எற்றபகவானும்
திகைத்தபசுவுக்கு தெரியவழிகாட்டிடவே
வழியின்படியே வந்ததுவேநற்பசுவும்
சம்புமகாப்பொய்கை தன்னருகேவந்துநின்று
பொய்கைதனைக்கண்டு பூரித்துதேகமெல்லாம்
சுற்றிவலம்வந்து துய்யதிருநற்பசுவும்
தங்கப்படித்துறையைத் தான்கண்டேயங்குள்ள
புதுமைகளெல்லாம்பார்த்துப் பூரித்திருதோளும்
ஆவலுடன்தண்ணீ ரருந்துமந்தவேளையிலே
தப்பாமல்சூரியனும் தாமறையின்பூப்பறித்து
போடவேதான்தின்று பொறிகலங்கச்சூலாகி
வால்வீசிக்கறையேறி மயங்கியேசூலாகி

முட்டுகளுந்தானசைத்து முகமிகக்குழைந்து
வாயில்நுரைதிரண்டு மயிர்குச்சிதானெறிந்து
முட்டிமுணங்கி முன்வயறுதான் தள்ளி
நாலுதிக்கும்பார்த்து நடுநடுங்கிவழிநடந்து
காதுமடைத்துக் கண்ணுமிருளாகிச்
சிவனரையங்கே தோத்திரங்கள்செய்துமெள்ள
எல்லைதனில்வரவும் ஏங்கிமிகத்தளர்ந்து
செட்டியார்வீதியிலே சென்றுமேகால்மடித்துப்
படுத்தேயப்போ பலபேருமோடிவந்து
நாடாளுமிந்திரற்கும் நாகமடந்தையர்க்கும்
தேடாத்திரவியமே சிறந்தமகாதேவியம்மா
மயிலேநீபோமிடத்தில் மலைநாகந்தீண்டியதோ
மாயமிருகம் வளைந்துமுட்டினதோ
நச்சுப்புல்லுந்தின்றதுவோ நாகங்கடித்ததுண்டோ
என்றுபுலம்பி எல்லோருமோடிவந்து
விஷத்துக்குப்பார்த்து மேல்தடவிநீறுமிட்டு
செட்டிச்சிகளெல்லோரும் சிறக்கவேயோடிவந்து
சந்தணகுங்கமந் தானுமிகக்கொண்டுவந்து
ஆவின்மேலெல்லாம் அடைவாகத்தான்பூச
அப்போவொருதாதியானதொருவார்த்தைசொல்வாள்
பசுவின்வடிவல்ல பாலன்வடிவென்றுசொல்லி
கழுநீரும்புல்லுங் கலந்துகுடிக்கவைத்து
சந்தனமும்பன்னீரும் தானுமிகப்பூசி
ஆலவட்டங்கொண்டு அருகிருந்துதான்வீச
சுற்றித்திரைகட்டிச் சூழவேகாத்திருக்க
தாகந்தெளிந்து தான்விழித்துப்பார்த்தவுடன்
பசுவின்வயிற்றில் இருக்குமந்தப்பாலகனும்
சிறப்பாய்வந்திருக்கவேணுமென்றார் செட்டிச்சிகள்
என்றபொழுதே எழுந்ததேநற்பசுவும் [று
செம்பொன்மணிமண்டபத்திற் சேரவேவேணுமென்
ஆசாரமேறி அசையாமணியடித்துத்
தங்கமணித்தூணோடே சாய்ந்ததுகாண் அந்நேரம்
இந்திரனார்தேவி யிளங்கோதைதான்கேட்டு
அசையாமணியை யசைக்கவந்தகாரியமேன்
இந்திரரும்போனார் தவத்துக்கேயென்றுசொல்லி
எந்தவிதமோ தெரியவுமாட்டுதில்லை



பாருங்களென்றுசில தாதியரைவிட்டாள்காண்
போனார்கள்தாதியர்கள் பொற்கொடியாள்சொற்கேட்டு
வந்துமேபார்த்து மறுபடிதான் சொல்லலுற்றார்
நாகமடந்தையரே நல்லதொருதேவியரே
வளர்த்தபசுவந்து மயங்கிக்கிடக்குதென்ன
எண்ணத்தொலையாத ஏற்றபசுக்களுண்டு
எந்தப்பசுவென்றுகண்டீர்ஏந்திழையீர்சொல்லுமென
கண்கள்பவளமுமாய் கண்டவர்க்குநல்லுறவாய் [மாய்
நெற்றியிலேவெள்ளையுமாய் நிறமெல்லாம்பொன்னிற
என்றமொழிகேட்டு ஏங்கியேயோடிவந்து
சிங்காதனத்தைவிட்டுத் திரும்பியேயோடிவந்து
கராவினண்டையிலே கதறியேயோடிவந்து
தேனேமரகதமே தியக்கம்வந்தகாரியமேன்
மானேமரகதமே மயங்கிடுவதென்னவென்று
துயரத்துடனே சொல்லுவாளிந்திராணி

விருத்தம்

அந்தியினடந்ததுண்டோ வரனுரைதவிர்த்ததுண்டோ, நிந்தையாய்ப் பெரியோர் மூந்நூல் நெடுமுறைதவறினேமோ,கந்தன்மாலயன்வேறென்றுகருத்தினில் நினைத்ததுண்டோ,உன்தன் முன்னோர்கள் செய்த ஊழ்வினை முடிந்தவாறே.

நடை

மானேயுனக்கு வஞ்சனைகள்செய்ததுண்டோ
கொள்ளிக்கண்ணியான கொடும்பாவிபார்த்தாளோ
மலைமீதிலேறி மலைப்புல்லுத்தின்கையிலே
விஷங்கள்கடித்ததுண்டோ விள்ளுவாயெந்தனிடம்
உந்தன்றிருமேனி யுள்ளுடைந்துவாடுவதேன்
இந்தவிதிவருமோ அறியேனேயென்றுசொல்லி
குங்குமச்சந்தன்மூங் கூட்டிக்குழம்புசெய்து
செங்கையால்வாரித் திமிர்ந்தாளேயுத்தமியாள்
அப்போதுகூடத் தீரவில்லையம்மயக்கம்
காடிக்கழுநீருங் கஞ்சியுந்தான்கலந்து
விட்டபொழுதே குடித்ததுவேநற்பசுவும்
பாரக்களைதீர்ந்து பார்த்துமேய்ந்நேரம்
கண்கள்பொரிபறக்குங் காலசைந்துவால்சுற்றும்
வானத்தைப்பார்த்து மனத்தையருவருக்கும்

பூமியைப்பார்த்துப் பொறிகலங்கிச்சீறிநிற்கும்
ஆனந்தமாகிய யதிரநடனமிடும்
சிவசிவாவென்று திகைத்துநெடுமூச்செறியும்
அரகராவென்று அலறுவதைத்தான்கண்டு
தேவியுமங்கே திகைத்துமொழிசொல்லுவாள்காண்
பசுவுக்குவந்தநோய் பார்த்தறிந்துசொல்வோரை
கூட்டிவாவென்றாள் கோதைமயிலாளும்
ஆயர்இடையர்தம்மை யழைத்தோடிவந்தார்கள்
வந்தவர்களப்பசுவை மதியோடேதான்பார்த்துச்
சொல்லுவாரந்தத் தோகைமயிலாட்கு
ஆரமூலைப்பசுவு மடக்கிமிகச்சூலாச்சே
இன்றுநாளையீனு மீற்றுமயக்கமிது
என்றுதான்சொல்லி யேகினாரப்போது
பசுவின்மயக்கத்தைப் பார்க்கமுடியாமல்
கோவிற்கால்தன்னிற் கொண்டுவாவென்றுரைத்தாள்
தாதியர்கள்கூடித் தானெடுத்தாரப்போது
கொண்டுவந்துவிட்டார்கள் கோவின்கால்முன்பாக
சூழநிறைந்து தூயவிடம்பண்ணுவித்து
வாய்த்தபரிகாரிகளை வரவழையுமென்றுரைத்தாள்
பரிகாரிகள்வந்து பணிந்துமேதெண்டனிட்டார்
கோவைப்பிழைக்கவைத்தால்கோடிதனங்கொடுப்பேன்
என்றமொழிகேட்டு ஏற்றபரிகாரிகளும்
காட்டுமருந்துங் கடுமருந்துமொருகோடி
சிவனைநினைத்துத் தோத்திரங்கள்செய்கின்றாள்
அபயமபயமென்றாள் அல்லலொழிப்பாயென்றாள்
செங்கைசிவப்பத் திருவயிற்றிலேயறைந்தாள்
அய்யகோவென்று அடித்துவிழுந்தழுதாள்
அப்போதுசிவனும் அங்குள்ளதேவர்களும்
கயிலாசமீதிருந்து கண்டார்களந்நேரம்
வானுலகந்தன்னை வழிதிறந்துபார்க்கலுற்றார்
வைகுண்டலோகம் வழிதிறந்துபார்த்தார்கள்
அநியாயமோவென்று அலறியழுதகுரல்
மகாதேவர்தாமும் மனதாரக்கேட்டதன்பின்
சிவபெருமானீசுவரியைத் திரும்பிமுகம்நோக்கி
போய்நீயுமையே புகழ்ந்துகுறிசொல்லென்றார்
பத்தினியாய்ச்சென்று பகுத்துரைப்பாயென்றருள

அந்தவுமையாளும் அரனுருட்படியே
கொக்கிறகுசூடிக் குறமாதுதன்னைப்போல்
பொற்கூடைபொற்பிறம்பு பொற்குடுக்கைதானெடுத்து
பாடிநடந்துவந்தாள் பார்வதியாள் நற்குறத்தி
பாடியிருந்து பரமனிருதாள்பணிந்து
இருந்தவளைப்பார்த்து இறைசிவனுர்சொல்லுகிருர்
குன்றுமலைச்சி கொடிச்சிகொடியிடைச்சி
வள்ளிக்குறமாமி மலையரசன்மாமிகளே
என்றனதுகைபார்த்து ஏற்றகுறிசொல்லுமென்ருர்
குறிகளுமப்போது குறமாதுசொல்லுகிருள்
மண்ணுஞ்சுமந்ததுண்டு மரத்தாலடியுமுண்டு
சிறுதொண்டர்பிள்ளை கறியுண்ணப்போனதுண்டு
வண்டோதறியுடனே வாளறக்கன்மாளிகையிலே
கூடியேவந்து குழந்தையாய்ப்போனதுண்டு
ஆரூரில்சோழன் அருமைமகனையன்று
தேரூர்ந்துகொன்றெழுப்பச் செய்ததுந்தானுண்டு
பின்னையொருமைந்தன் பெருவயிறன்தானுமவன்
அன்னைபிதாவுக்கு முன்னேயவன்பிறந்தான்
இப்படியுநல்லகுறி இசைவாகத்தோணுதென்ருள்
அப்போதுசிவனு மருளுவாழுத்தமிக்குக்
கொச்சைக்குறத்தி குறிபார்க்குஞ்சிற்றிடைச்சி
கழுவிலிருந்து கைகாட்டினர்தங்கையரே
உழுதுதிரிந்தபன்றி யுங்களண்ணன்தானலவோ
ஆய்ச்சியர்கள்வீட்டில் அடியுண்டுகட்டுண்டு
வெண்ணெய்திருடியுண்ட வெறியன்றங்கையல்லோ
புன்னைமரத்திற் போயொளித்தார்தங்கையல்லோ
என்றேயிருபேரும் ஏற்றபடிகொண்டாடி
சந்தோஷமாகித் தாமேவிடைகொடுத்தார்
திருவாபரணமெல்லாம் பூட்டிச்சிவனுரே
போய்வாரேனென்று புனிதர்விடைபெற்று
மாதாவுமந்நேரம் வானுலகுவிட்டிறங்கித்
தேவேந்திரலோகஞ் சென்ருள்குறமாது
மைவாழ்குறத்தி வானவர்தம்கோவில்வந்தாள்
இந்திராணியம்மை யெங்கிருக்கிருளென்ருள்
இந்திராணிகண்டெழுந்துமேயோடிவந்து
வாராய்குறமாதெனவே வந்தேனெனவுரைத்தாள்

பாராய்குறத்தியம்மா பசுவைப்பிழைப்பித்தால்
வேண்டியதெல்லாந்தருவேன் விதவிதமாக்கொடுப்பே
சொன்னவுடனே சொல்லுவாள்குறமாது [னென்னச்
குறமாதுதானுங் குறிசொல்லஇந்திராணி
ஆசனங்கள்போட்டுஅடிபணிந்துகேட்கலுற்ருள்
குறமாதுதானும் புஞ்சிரிப்புக்கொண்டருளி
விநாயகபூசைசெய்ய வேணுமென்றுதான்சொல்லி
வேண்டியதெல்லாம் வேணபடித்தான்குவித்து
விநாயகனைத்தானினைந்தாள் வெள்ளிமலைக்குறத்தி
கணபதியுமங்குவரக் கனமாய்ப்படைத்ததனை
உருட்டித்திரட்டியொருஉருண்டையாய்ப்பிடித்துக்
கவளங்கொடுக்கக் கணபதியும்வாங்கியுண்டார்
சிங்கியடித்துச் சிரித்தாள்குறமாது
கேளாயோவென்குறியும் கேவலமென்றெண்ணுதே
எந்தன்குறிதானும் எள்ளளவுந்தப்பாது
செங்கைவடிவேலனென் சிறுமைந்தன்கண்டாயே
மூத்தமகனுமந்த மூர்த்திவிநாயகன்காண்
கந்தன்மருமகள்வள்ளி நானுமவள்மாமி
ஆரூர்சடையீசர் அவருடையபத்தினியாள்
பரமேஸ்வரருடைய பத்தினியும்நான்தாண்டி
நின்னுடையசிந்தையிலே நினைத்தபடிசொல்லுகிறேன்
வானுலகமாள மகன்வருவானுந்தனுக்கு
அன்புடனேகேளாய் ஆனகுறிதானும்
இம்மையிலுமறுமையிலு மென்குறிகள்தப்பாது
ரத்னமுடிசூடி நல்லமைந்தனுய்வருவான்
பெற்றிடுவீரிப்போது பெருமாள்திருவருளால்
கண்ணிறைந்தபாலகனுர் கணக்கெழுதத்தோன்றுகிருர்
நீலகண்டர்தம்மருளால் நினைத்தபடிகிடைக்கும்
வளர்த்தபசுவயிற்றில் மைந்தர்வந்துதோன்றுகிருர்
கோவின்வயிற்றிற் குமரன்வந்துதோன்றுகிருர்
சித்திரைக்குச்சித்திரையிற் சிறந்தபவுரணையில்
அத்தன்தலைக்கிழமை யாதித்தவாரமதிற்
புத்தகமும்பூணூலும் பொருந்தியபொற்குண்டலமும்
ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணுப்புத்தகமும்
எழுத்தாணிகைப்பிடித்துப் பிறப்பாண்டியென்மகளே
உத்தூளமாய்வெண்ணீறு ஒளிருந்திருகமாய்ச்

சித்திரபுத்திரர்வந்து ஜெனிக்கிருர்மாமயிலே
பூலோகம்ஆளப் பிறக்கிருர்பொற்கொடியே
எறும்புகடையானை தலையெல்லாமெழுதவல்லார்
புத்தகமுந்தன்னிற் புகந்தெழுதும்புண்ணியனுர்
அருளுஞ்சிவனுக்கும் ஆனமகாவிஷ்ணுவுக்கும்
வகுக்கும்பிரமாவுக்கும் வாழ்விக்கும்லட்சுமிக்கும்
கணக்கராய்தானிருந்து காரியமெல்லாம்பார்ப்பார்
இப்படியாக இருப்பார்காண்ஏந்திழையே
அரனுர்கருவூலம் அவர்கையிலிருக்குதுகாண்
இந்திராணிமாதே யிக்குறிபொய்யாதெனவே
இன்பத்தொடுளங்களித்து இருதோளும்பூரித்துக்
கும்பல்கும்பலாகப் குவித்தாளேந்திழையாள்
அந்நேரந்தான்குறத்தி அவள்முகம்பார்த்துரைப்பாள்
உன்னுடையஅன்பு இருந்தாலும்போதுமினி
பொன்னும்பணமும் புலையன்படைக்கிலையோ
நிரைநாழிமுத்தை நேரேகொடுமென்ருர்
மங்கையரேபோய்வாரேன் மகாதுயரமுந்தீர்ந்து
மகனுடனேநீயும் மகிழ்ந்துமேவாழ்ந்திருப்பாய்

விருத்தம்

உமையவள்குறிகள்சொல்லி யுரைப்படிமுடியுமென்று
சமையுநல்லிந்திராணிக்குத் தானுமேமனதைத்தேற்றி
அமையவேவரத்தையீந் தடைவுடனரன்பாற்சென்று
உமையவள்நடந்ததெல்லாமுரைத்தரனிடத்துற்ருளே

நடை

அப்பால்நடக்கு மதிசயத்தைத்கேளுமென்ருர்
நாகமடந்தையரும் நல்லகுறியென்றுசொல்லி
பசுவின்வயிற்றிற் பாலன்பிறப்பதுதான்
நிச்சயமாயெண்ணி நினைவுகளைவிட்டுவிட்டு
கொலுசெய்யும்மண்டபத்தில் கோலமுடன்வீற்றிருந் [தாள்
வானம்புவலோகம் மண்பூமியுள்ளதெல்லாம்
சிறப்பிக்கவேணுமென்று சீரானவள்ளுவனை
அழையுமென்றபோதே யழைத்தங்கேவிட்டார்கள்
பசுவயிற்றிலிப்போது பாலன்பிறக்குமென்று
ஏழுலோகத்திலுள்ளோர் எல்லோருந்தாமறிய
பறைசாற்றுமென்று பைங்கொடியாள்சொன்னவுடன்

வள்ளுவனுமப்போது வாகாயப்பறையறைந்தான்
தெருவீதிகளெல்லாம் சிறக்கவேபந்தலிட்டார்
முத்துவளைத்து முகப்பந்தலிட்டார்கள்
வயிரக்கால்நாட்டி வகைவகையாய்த்தூணிறுத்தி
தங்கத்தாலோடுசெய்து சதிர்ப்பந்தல்போட்டார்கள்
பவளத்தால்காலும் பண்பாகத்தானிறுத்தி
விதவிதமாய்ப்பந்தல் வேடிக்கையாய்ச்செய்து
இந்திரன் நற்சபைக்கு எதிரானதென்புறத்தில்
ஐம்பதுகாதப்பரப்பில் அகலமுள்ளபந்தலொன்று
தங்கத்தால்கால்கள் சதிராகத்தானிறுத்தி
வெள்ளியினுற்கால்கள் விதவிதமாய்த்தானிறுத்தி
நவரத்தினத்தாலே நன்றாகத்தானழுத்தி
சித்திரவிஸ்தாரமாய்ச் செய்யவேவேணுமென்றாள்
தேவாதிதேவரெல்லாஞ் சிறக்கவேவந்திருக்க
தபோதனர்களெல்லாருந் தாமுமேவந்திருக்க
முனிவர்களெல்லாரு முக்கியமாய்த்தானிருக்க
அந்தணர்களெல்லோரும் அப்படியேதாமிருக்க
சங்கீதமேளமுதற் றப்பாமல்வந்திருக்க
பட்டணத்திலுள்ள பரிசனங்கள்தாமிருக்க
வகைவகையாய்ப்பந்தி வகுக்கவேவேணுமென்றாள்
பந்திபந்தியாகப் பண்பாகச்செய்யுமென்றாள்
அந்தப்படியே யடைவாகச்செய்யலுற்றார்
பிள்ளைபிறக்கும் பெருமுகூர்த்தம்வந்ததென்று
ஏழுலோகமறிய இடிபோல்முரசடித்து
வாருமென்றபோதே வள்ளுவனும்பறைசாற்றத்
தேவர்முனிவர் சிறக்கவேவந்தார்கள்
தபோதனர்கள்முதலியோர் தப்பாமல்வந்தார்கள்
ரிஷிகள்முதலாக எல்லோரும்வந்தார்கள்
அந்தணர்களெல்லாம் அப்படியேவந்தார்கள்
பட்டணத்திலுள்ள பரிசனங்கள்வந்தார்கள்
கூன்குருடுசெவிடூமை கும்பலாய்வந்தார்கள்
அவரவருக்கெல்லா மயிராணியப்போது
தானங்கள்வாங்கித் தான்வருந்தியிருந்தார்கள்
வந்தபேர்க்கெல்லாம் வடிவாசனங்கொடுத்து
திருமஞ்சனங்கள் சிறப்பாகக்கொண்டுவந்தார்
மாணிக்கச்சங்கு வலப்புறத்தேநின்றாத

வேதப்பிராமணர்கள் வேதங்கள் தாமோத
மங்கையர்கள்வந்து வாழ்த்திக்குரவையிட
கன்னியர்களெல்லாங் காவலாய்ச்சூழ்ந்துநிற்க
அங்கயற்கண்ணம்மை யருகிருந்துகைகொடுக்க
பார்வதியம்மை பண்பாகவந்தார்காண்
பொன்னின்கலமேந்திப் புறப்பட்டாள்பூமாது
மன்னர்பெருமான் வருகிறஅதிசயங்கள்
ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணைப்புத்தகமும்
பொன்னினெழுத்தாணியுமே பொற்பாகக்கைபிடித்து
காதிலிருகுண்டலமும் கனக்கவேதான்பூட்டி
அரனார்திருவருளால் ஆவின்வயறுவிட்டு
பொன்னின்கலத்திற் பிறந்தார்புகழ்வீரர்
மின்னினொளிபோலே வெளிப்பட்டாருத்தமனார்
பூமிவழிசிறக்கப் போர்வேந்தர்வந்துதித்தார்
பாவபுண்ணியங்கள் பதிந்தெழுதவந்துதித்தார்
ஏடும்பிடித்து இடதுகையில்வெண்ணீறும்
காதிலேயிட்ட கனகமணிகுண்டலனார்
காரிந்திரன்மைந்தன் கணக்கரிவரென்பாரும்
எந்தவுலகி லிருந்தவர்காணென்பாரும்
பிரமாவேயென்று பெருத்தமொழியுரைத்தார்
இப்படியுஞ்சிலபேர் ஏற்றமொழியுரைத்தார்
திருவழகைச்சொல்லத் தேவராற்கூடாது
எல்லாக்கணக்குமெழுதவென்று தான்பிறந்தார்
நமசிவாயவென்கிற நன்னுமச்சித்தமுடன்
நமனுக்கதிகாரி நானென்றசத்தமதாய்ச்
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகவந்துதித்தார்
தெய்வலோகப்பெண்கள் சிறக்கக்குரவையிட்டார்
பெண்களெல்லாங்கூடி பெருங்குரவையிட்டார்கள்
கன்னியர்களெல்லாங் கனத்தகுரவையிட்டார்
பதினெட்டுவாத்தியமும் பாரெங்குந்தான்முழங்கப்
பூமாரியெங்கும் பொழிந்தார்களெல்லோரும்
தேவர்அமிர்தந் திருச்சங்கில்தானேந்தி
சீராகவங்கே சிவனுமையாள் தான்கொடுத்தாள்
இந்திராணிதானும் இளங்கோதையந்நேரம்
திருவாய்விளங்கித் தீர்த்தமுந்தானூடி
பட்டையுடுத்திப் பகவானைத்தெண்டனிட்டுப்

பிள்ளையைவாரி முகத்தோடே முத்தமிட்டாள்
அப்போதுபச்சுடம்பா யாச்சுதவள்மேனியெல்லாம்
பாலுமுலையிரண்டிற் சுரந்ததுகாண்பைங்கொடிக்குத்
தான்பெற்றதுபோல தாதிகையிற்போனாள்காண்
அப்போதொருதாதி யறிவாயெழுந்திருந்து
காயங்கடைசரக்குக் கனமாகவுள்ளதெல்லாம்
கூட்டியேதானுங் கொடுத்தாளேகோதையர்க்கு
அப்போதவ்வையாரும் அங்கேதானோடிவந்து
மைந்தனைக்கையாலெடுத்து மடிமீதில்வைத்திருந்து
வாகால்துருவி வாயிற்செவிமூக்கெடுத்து
சேரனையெடுத்துச் சுரிகுழலாள்கையமர்த்தித்
தொப்புளறுத்துக் குலவைமிகமுழக்கி
ஈரந்துவட்டி யிணையாடைதான்போட்டுக்
பஞ்சாடைக்குள்ளே பலகலைதானமர்த்தி
வேண்டுமுபசாரம் விதவிதமாய்ச்செய்தபின்பு
தேவேந்திரன்வரவை காணுமெனத்திகைத்து
இந்திராணிதான்புலம்பி ஏங்கலுற்றாளன்னேரம்
பாலகனைபார்ப்பதற்கென் பத்தாவைகாணுமென்று
அப்போசிவனொரு மங்குள்ளதேவர்களும்
வந்தவுடனே மகனுரைத்தான்வாங்கி
தாங்கியெடுத்துத் தழுவிமுத்தந்தானுமிட்டு
கண்டான்மகன்முகத்தைக் கண்ணுயிரத்தாளே
அந்நேரமிந்திரனும் அழகனைத்தாதியரே
சுந்தரியாளிடத்திற் கொண்டுபோமென்றுசொன்னார்
ஆவலுடன்வந்து அறியுமகனார்க்கு
தேவபிராமணரைத் திரும்பியழைத்தார்கள்
நவக்ரகமெல்லாம் நலமானநாலொன்றில்
பேரிடவேணுமென்று பெரியதொருஇந்திரனும்
சித்திரையில்வந்ததினாற் சித்திரபுத்திரரென்றார்
அப்படியேபெயரை யழைத்தார்களெல்லோரும்
சீறிட்டபாற்பசுக்கள் சிறப்பாய்க்கொடுத்தனர்காண்
தானதருமங்கள் தான்கொடுத்தாரந்நேரம்
மகனையன்றுபெற்றெடுத்த வாய்த்ததொருபசுவும்
மகனுக்குப்பாலமுர்தம் வாஞ்சையாய்தான்கொடுத்து
நிற்குமளவில் நினைவிமறந்தொருநாள்
பாலகன்நெஞ்சிற் பசுகுளம்புபட்டவுடன்

இந்திராணிகண்டு ஏங்கிமிகப்பயந்து
மகனையெடுத்து மார்போடேதானணைத்து
இந்திராணிதானும் இளம்பசுவையந்நேரம்
கரத்தாலடித்தவுடன் கண்சிவந்தப்பசுவும்
திடமுடையபாற்பசுவுந் தெய்வமேசாட்சியென்று
சரணஞ்சரணமையா தற்காத்துக்கொள்ளென்று
சிவனை நினைந்து தோத்திரங்கள்செய்ததுவே
அப்போசிவனும் அங்குள்ளதேவர்களும்
பசுவையடித்த பாவத்தைதான்தெரிந்து
இந்திரவிமானத்தை யெடுத்துக்கொண்டோடிப்போய்
இந்தட்சணம்பசுவை இங்கேயழையுமென்றார்
தேர்கொண்டுவந்தார்கள் தேன்மொழியாள்வாசலிலே
வந்தவுடன்அப்பசுவு மகாதேவரைப்போற்றித்
தேரின்மேலேறிச் சிவனாரிடஞ்சேர்ந்து
இந்திரற்குப்பிள்ளை கொடுத்துவாவென்றுரைத்தீர்
பாலகனையீன்று கொடுத்தேன்பரிவுடனே
கொடுத்தவுடனென்னைக் கோதையாள்தானடித்தாள்
வந்துவிட்டேனென்று வருந்தியுரைத்ததுவே
சிந்தைமகிழ்ந்து சிவனாருமேதுசொல்வார்
உன்மகனையிங்கே யுனக்கழைத்துநான் தருவேன்
வஞ்சகமில்லாமல் மனமகிழ்ந்துநில்லென்றார்
அப்படியேநற்பசுவும் ஆனந்தங்கொண்டதுவே
இப்பால்நடக்கின்ற இவ்வசனஞ்சொல்லுகிறேன்
தேசாருமிந்திரருந் தேவியுந்தானேதுசொல்வார்
பாலன்பசித்துப் பதறியழுதவுடன்
பாலமுதம்வாங்கப் பசுதன்னைத்தேடுமென்றார்
பசுவைமிகத்தேடிப் பார்த்தார்களெல்லோரும்
காடெல்லாந்தேடிக் காணோமெனவுரைத்தார்
இந்திராணியான இளங்கோதைதானழுதால்
இந்திரனுமப்போது ஏங்கிமிகவாடி
மாயையாய்வந்து மாயையாய்ப்போச்சுதென்று
மற்றுமொருபாற்பசுவின் பாலமுதமைந்தனுக்கு
குற்றம்வாராதபடி கொடுத்துவளர்த்தனரே
பாலகர்க்குத்தொட்டிலைப் பாங்காய்ச்செய்தார்காண்
வயிரம்வைடூரியத்தால் வகைவகையாய்ச்செய்தார்காண்
சித்திரபுத்திரரைச் சீர்சிறந்ததொட்டிலிலே

வைத்துத்தாலாட்ட மன்னவருஞ்சொன்னவுடன்
ஆவின்பாலூட்டி அரியதொட்டில்மேற்கிடத்தி
தொட்டிலைத்தானசைத்துச் சூழநின்றதாதியர்கள்
இந்தநல்லதொட்டிலிலே யென்மகனே நித்திரைபோ
தேவேந்திரன்மணியே செம்பொன்னே தானுறங்காய்
இந்திரனார்செல்வங்கள் ஈடேறவந்தானோ
வானுலகமாள வந்துபிறந்தானோ
மைந்தனாய்வந்து மகவாசைத்தீர்த்தானோ
எங்கள்துயர்தீர இன்றுவந்தபாலகனோ
தோகைகணக்கு தொகுத்தபெருங்கணக்கும்
மண்ணிற்கணக்கும் மகாதேவர்தங்கணக்கும்
விண்ணிற்கணக்கும் விரைந்தெழுதவந்தவனோ
சந்திரசூரியர்போற் சார்ந்ததிருமகனோ
ஆதிபரன்கட்டளையில் அவதரித்தபாலகனோ
துட்டர்கணக்குந் துரோகியர்கள்தம்கணக்கும்
சிட்டர்கணக்குந் தெரிந்தெழுதவந்தானோ
தேவேந்திரன்தவத்தாற் சிறியவுயிர்செய்யும்
நன்மைகளுந்தீமைகளும் நன்றறியவந்தானோ
சீராய்ச்சிவலோகம் சேருகின்றபுண்ணியரை
ஆராய்ந்துசொல்ல அறிவுடனேவந்தானோ
ஆவின்வயிற்றில் அவதரித்தபாலகனோ
எங்கள்அரும்பொருளோ விந்திரனார்கண்மணியோ
எங்கள்குலம்வாழ எழுந்தருளும்நாயகமோ
இப்படியாக யேற்றிநின்று தாலாட்டி
அந்தமகனை யரிதாய்வளர்க்குங்கால்
தாதிமார்தம்பாலைத் தானுண்ணைச்சொன்னார்கள்
உங்கள்மூலைப்பாலை யுண்ணவோநான்பிறந்தேன்
என்றறிந்துசொன்ன விளமைக்குழந்தைக்கு
மந்திரநூல்வேத மகாவறிவையுண்டாக்க
வாத்தியார்தம்மை வரவழைத்தாரந்நேரம்

விருத்தம்.

இந்திரன்புதல்வருக்கு இன்பமாயோதிவைத்த
தந்திரவாத்திமார்கள் தான்அரியோமென்றோத
மந்திரப்புதல்வனாரும் வகைசொல்லுமென்றுகேட்க
மந்திரவுரைசொல்லாமல் மைந்தனுமுரைசெய்தானே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்திரன் இந்திராணி இவர்கள் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்த சித்திரபுத்ரரானவருக்கு வேதங்களப்பியாசம்பண்ணுவிக்கவேணுமென்றுவாத்தியாரையழைபித்துபட்டணமெல்லாமலங்காரஞ்செய்து மகாதானங் கோதானம் வஸ்திரதான முதலானதானங்கள் செய்து ஓமம் எக்கியங்களெல்லாஞ் செய்து சித்திரபுத்திரற்கு வாத்தியார் ஹரி ஓமென்று சொல்ல அதற்குப்பயன் சொல்லுமென்று வாத்தியாரிடத்திற் கேட்க அவர் சொல்லமாட்டாமையால் சித்திரபுத்திரர்தானே பயன் சொல்லிப் பின்நடக்கிறகாரியங்களைச் சொல்லுகிறோம்.

நடை

விநாயகர்பூசை விதவிதமாய்த்தான்முடித்து
ஆதிமுதலான அரிவரியுங்கைக்கொடுத்து
அரியோமரியோமென் றாதரவாய்ச்சொன்னார்கள்
ஆயிரம்பார்ப்பார் அரியோநமோவெனவே
அரியென்றசொல்லுக்கு அருத்தங்களுரையுமென
அப்போதுவாத்தியார் அதன்பொருள்சொல்லாதிருக்க
நான்சொன்னபடிகேளும் நல்லதொருஉத்தமரே
அரிக்குப்பொருள்சொன்னால் அண்ணாவிநீர்எனக்கு
குருக்களுமாவீர் குற்றமில்லைகண்டீரே
எனக்குமோர்அண்ணாவி யீசனல்லால்வேறுமுண்டோ
மேலானவுங்களுக்கு வேதமதுசொல்லுவேன்யான்
கிட்டியான்வாசிக்கக் கேளுங்களென்றுசொல்லி
நன்னெறிநூலவிழ்த்து நற்பாடமீதேறிச்
சைவநூல்வேதந் தழைக்கவேவாசித்தார்
ஓரேட்டுக்குள்ளே யுலகமெல்லாம்வாழவென்று
தேவர்கள்வாழவென்று திருவேடுவாசித்தார்
மூவர்கள்வாழவென்று முதலேடுவாசித்தார்
அயனரன்மால்செங்கை யானதொருசீவனமும்
நமனுருப்வேந்தன் நடுக்கணத்திலுள்ளவர்காண்
சங்கரநாராயணர் தான்கொடுத்தபட்டோலை
அட்டவணைப்பட்டோலை யதுப்படியேவாசிக்க
வாத்தியார்தன்கணக்கு வந்துவெளிப்பட்டதுகாண்

தனதுமனையன்றி தலைநாளில் நீருமொரு
அகதிமனையை யடிமையொத்திகண்டீரே
உம்முடையசெய்கையும் உமக்கறியப்போதாமல்
என்னுடையவேட்டி லெழுதினேனென்றுசொன்னார்
என்றுசொல்லவாத்தியா ரிருகையாற்போற்றிசெய்து
ஈஸ்வரனார்கற்பனையோ வென்றுசொல்லித்தானிருக்க
இவ்வார்த்தைகள்கேட்டு இந்திரனிந்திராணியுடன்
மைந்தனையங்கே மனமகிழ்ந்துமுத்தமிட்டார்
இப்படியேதானும் இருக்குஞ்சிலநாளில்
மைந்தர்பெருமாள் மனமகிழ்ந்தேதுசொல்வார்
பூலோகசோதனைக்குப் போய்வாரேனென்றுரைத்தார்
நகரங்கள்சோதனைக்கு நாம்போறேமிந்திரரே
அங்கேசிவன்வாச லருகிருக்கநாம்போறேம்
என்றுகணக்கை யிதமுடனேதான்சுருட்டி
நன்றியுடனே புறப்பட்டார் நற்கணக்கர்
இட்டப்படியே ஈஸ்வரனார்தான்கொடுத்தா
கட்டளையிட்டபடி கணக்கெழுதப்போறேமென்றார்
அந்தக்கயிலை யரனார்கருவூலம்
நித்தமெழுதிவர நிமலரருள்கொடுத்தார்
பத்திரமாயென்வசத்திற் றந்தவொருபட்டோலை
சீருடனேயென்வசத்திற் சிறப்பாகவிருக்குதுகாண்
பரமனார்தான்கொடுத்தப் பண்டாரபொக்கிஷமும்
கோத்தவரிசைகளைக் கொற்றவரேகண்டீரோ
பொன்னுலகமட்டுமல்லோ புண்ணியரே நீராண்டீர்
நிறைந்தபுகழ்மாதாவு நீருமிகத்தவசிருக்க
உங்களுக்குப்பிள்ளையா யுகந்தளித்தார்கண்டீரே
அண்டரண்டகோளமட்டும் அணுவளவுந்தப்பாமல்
எழுத்தாணிபட்டோலை யென்கையிற்றான்கொடுத்தார்
முத்திரைமோதிரமும் முன்விரலிலேயணிந்தார்
கண்டீரோநீருங் கணையாழிமோதிரத்தை
இவ்வளவுவாழ்வுமுங்க ளிருவருடைவாழ்வும்
புதிதானகாரியமும் போய்ப்பார்க்கவேணுமென்றும்
போய்வருவேனையா பொருந்தவிடைதாருமென்ன
வாலவயசு வருமளவுநீரிருந்தால்
பாலனுய்வந்த பலன்கிடைக்குமென்றுசொல்ல
அந்தப்பலனும் அரனருளாற்றான்கிடைக்கும்

அப்படியேநானும் அவ்விடத்திலிருந்துவிடேன்
எப்படியுமென்தாயே யிங்குமங்குமாயிருப்பேன்
போகவிடையருளும் புண்ணியரேயென்றுரைத்து
மாதாவைத்தந்தையை வணங்கியிருபாதமதில்
புட்பமதுபோட்டுப் பணிந்தாரேபுண்ணியனார்
அருமைத்திருமகனை யன்னைபிதாதான்வாழ்த்தி
இந்திரவான்தேரி லேறியேயுத்தமனார்

விருத்தம்.

சென்றனனீசன்றன்பாற் சீர்பாதந்தெண்டனிட்டு
நின்றனன்மகிழ்ச்சிகூர்ந்து நிகரிலாவுமையாள்தானும்
வந்தவென்மகனேயென் றுவாரியேமோந்துகொண்டா
மைந்தனுமங்குவந்த வரன்முறையியம்பலுற்றான். [ள்

வசனம்.

அஃதெப்படியென்றால் சித்திரபுத்திரநாயனாரான வர் இந்திரன் இந்திராணி இவர்களைவணக்கத்துடன் விடைபெற்றுக்கொண்டுதேரின்மேலேறி,சுவாமிகயிலை யங்கிரிவாசரான பரமேசுவரனையும் பார்வதியம்மாளை யுங்கண்டு நமஸ்காரஞ்செய்து சிந்தைகளிகூர்ந்து நிற் கப்பார்வதியம்மாளும் மகனைக்கட்டிவாரி மோந்துகொ ண்டவுடனே சித்திரபுத்திரநாயனார் சுவாமியிடத்தி லும் அம்மாளிடத்திலும் அவ்விடத்தில்நடந்தவிருத் தாந்தமெல்லாஞ் சொல்லுகிறார்.

நடை.

அப்பால்நடக்கும் அதிசயங்களுள்ளதெல்லாம்
செப்பமுடனுஞ் சொல்லுகிறேன்சீராக
மாதாபிதாவை மறந்திருந்தேனித்தனைநாள்
ஈஸ்வரன்சொன்னவிடை யெள்ளளவுந்தப்பாமல்
தாமரைப்பூவாய்த் தடாகத்திற்சென்றிருந்து
ஆவின்வயற்றில் அவதரித்தேனுதரவாய்
இந்திரனிந்திராணி யிவர்கள்மனங்குளிரப்
புத்திரனாகவென்னைப் போற்றியேதான்வளர்த்தார்
பிறந்தவுடன்தருமம் பெருக்கவேசெய்தார்கள்
என்னையுமங்கே யீன்றதொருநற்பசுவை
என்னைமிதித்ததென்று இந்திராணிதானடித்தாள்
உடனேதானப்பசுவும் உன்கயிலைவந்ததுவே

மற்றுமொருபசுப்பால்;கொடுத்தென்னைவளர்த்தார்கள்
நன்றாய்வளர்த்தார்கள் நாயகியும்நாயகனும்
இந்தப்படியா யிதுவரையும்நானிருந்தேன்
இவ்விடத்துச்சிந்தையினால் ஏக்கமிகவுண்டாகிப்
போகிறேனென்றுசொன்னேன் போர்வேந்தனப்போ
பாலவயசு பருவமுனக்கில்லையென்றார் [து
இவ்விடத்திற்றானு மிருக்கவேவேணுமென்றார்
இங்கிருக்கநீதி யெள்ளளவுமில்லையென்றேன்,
அரன்கயிலைசென்று அவ்விடத்தில்நானிருப்பேன்
அங்குமிங்குமாக இருப்பேனெனவுரைத்து
அவர்கள்விடைவாங்கி யடிபணிந்திங்குவந்தேன்
என்று-சித்திரபுத்திரனார் உரக்கவாய்ச்சொன்னவுடன்
பசுவைமிகவழைத்து பாலன்வந்தாய்கண்டாயே
என்றரனார்சொல்ல ஏற்றதொருநற்பசுவும்
சென்றுமகனார் திருமுகத்தைத்தான்மோந்து
எழுந்துமிருகொம்பால் இரங்கித்தடவினதே
இப்படியேதானும் இருக்கின்றவேளையிலே
இந்திரனிந்திராணி இவர்களிருபேரும்
மகனார்தான்போன வழித்தடத்தைத்தானோக்கி
வந்தார்க்கயிலை மலைதனிலேவானவர்கோன்
அப்பால்நடக்கு மதிசயத்தைக்கேளுமினிச்
சிவனாரிடத்தில் தேவேந்திரன்புலம்பிப்
புத்திரனுஞ்சத்துருவாய்ப் போனானெனவுரைத்தார்
உரைத்தமொழிகேட்டு உமைபாகரேதுரைப்பார்
சத்துருவென்று-சலியாமல்சொன்னாயே
தாயாரருகே தன்பிள்ளைவந்ததென்றால்
பேயாவுனக்கினிதான் பேசக்கணக்குமுண்டோ
பித்தரைப்போலே பிதற்றுகிறாய் நீதானும்
நாட்டுக்கணக்கும் நமனார்பெருங்கணக்கும்
நன்மையுந்தின்மையும் நடுவெழுதவேணுமென்றே
எமதருமர்தன்னிடத்தி லிருந்துகணக்கெழுத
வேணுமென்றுசொல்லி விரும்பியேநாமழைத்தோம்
எங்கிருந்தாலென்ன ஏற்றதொருஇந்திரரே
போம்பிள்ளையென்றுரைக்கப் போனாரேஇந்திரரும்
ஈஸ்வரனார்தாமும் ஏற்றதொருபுத்திரரை
இப்போதுநீயும் இயமனதுவாசலுக்கு

சித்தாந்தம்யாவுஞ் செய்யுமுறைப்படியே
அத்தாந்திரக்கணக்கும் அடைவாயெழுதுமென்றார்
இந்தப்படியே இயமனைத்தானழைத்து
கலியின்உபத்திரத்தாற் களறிகள் தான்மிகுத்து
அவயக்குரலுண்டாகு மானதாலிப்போது
எல்லாக்கணக்கு மியல்பாகத்தானெழுதச்
சித்திரபுத்திரரைச் சிறப்பாயருளினன்காண்
என்று-நமனுக்குச் சிவனாரிசைத்தபின்பு
நன்றுநன்றென்று நமஸ்கரித்தாரந்நேரம்
இருபேருமொன்றாகி யேற்றவிடைதான்வாங்கி
நின்றபொழுதேபிரமா நிமலரருளாலே
இருபேரும்வாழவென்று ஏற்றவிடைகொடுத்து
கட்டழகருடனே கனத்தண்டஞ்சூலமுடன்
குத்திடுங்கோல்கொடுத்துக் கோலக்கடாவளித்து
இவ்வளவும்தான்கொடுத்து ஏற்றபிரமாவும்
வாகாய்சிவனுக்கு வழியடிமைசெய்வார்மேல்
சிவனை நினைத்துத் திருத்தொண்டுசெய்வார்மேல்
தவத்தை நினைத்துத் தான்பூசைசெய்வார்மேல்
தருமங்கள்செய்வார்மேல்சற்றுஞ்சொல்லாதேயென்று
புத்திகளுஞ்சொல்லிப் போகவிடைகொடுக்கக்
கருங்கடாமேலேறிக் கணக்கனையும்தான்வைத்து
வலக்கடாதானேறி வாரார்எமதருமர்
நல்லமுரசுசின்னம் நன்றாய்முழங்கிவர்
இருபேருமொன்றாகி யிந்திரலோகம்புகுந்தார்
இருபேருந்தாங்கள் இசைவாகவேதான்பேசி
பாரிலுள்ளோர்கணக்கைப் பார்த்தார்களப்போது
சிவகுருவேயென்று திருநீறணியாதார்
நாராயணாவென்று நாமமணியாதார்
பெற்றதாய்தந்தையைப் பேணாதபாவியர்கள்
மண்ணிலிருந்து வழக்கோரஞ்செய்தவர்கள்
அம்பலத்தில்நின்று அநியாயஞ்சொன்னவர்கள்
ஊராருடைமைக்குப் பேராசைகொண்டவர்கள்
கல்லாக்கசடர் கணக்குப்படியாதோர்
சிவனைவணங்காதார் திருக்கோயில்சூழாதார்
அரியைவணங்காதார் ஆலயத்தைமேவாதார்
பிச்சைக்குவந்தவரைப் பின்னைவாவென்பவர்கள்

கன்றுவருந்தக் கறந்துபாலுண்டவர்கள்
பொட்டாநாழிமரக்கால் போட்டளந்தபாவியர்கள்
பிள்ளையழித்துப் பேதமுறச்சொன்னவர்கள்
உள்ளபொருளை இல்லையென்றேயுரைத்தவர்கள்
தூரவழிக்குத் துணைவாரோமென்றுசொல்லி
ஆருமில்லாக்காட்டில் அடித்துப்பறித்தவர்கள்
குளிசிலையின்றிக் குளித்திடும்பொல்லாதார்
கொண்டமனையாள்வருந்தக் கூத்தியர்கள்தன்னைவைத்
மாதாபிதாவருந்த வயிறுவளர்த்திடுவார் [தே
இட்டுண்டுவாழாதார் ஏற்றவர்க்குமில்லையென்பார்
நீட்டும்புழைக்கையில் நின்றுமெள்ளக்கேட்டவர்கள்
சாவற்போர்செய்விக்குஞ் சண்டாளபாதகர்கள்
கொண்டகணவனுக்கு குறிப்பறிந்துசெய்யாதார்
இப்படிக்கொத்தவிழி தொழில்செய்வோரையெல்லாம்
செப்பமுடன்நல்ல செந்தழலிற்றான்போட்டு
பாசத்தைவீசிப் பதறவேதான்பிடித்து
நாசிதனில்நஞ்சையிட்டு நாக்கில்துரடிட்டு
உச்சித்தலைதனிலே யோங்கிமூளையெறிந்து
அச்சப்படக்கண்ணில் ஆணைகளை நிறுத்திக்
கையிரண்டும்பின்கட்டாய்க் கட்டியிருகால்பின்னி
மார்பைத்துளைத்து மறுகுகதிர்பாம்புடனே
கூறியநாராசங் கொடுஞ்செவியினூடேற்றி
பாறையினிற்போட்டுப் பதறவிழுந்திழுத்து
வேறுவேறாயுடலை வெட்டியேபோட்டிழுத்துக்
காரமுள்ளவுப்பதை கரைத்ததிலேதானெழுக்கி
முள்ளுவனங்களில் முகங்கீழாய்ப்போட்டிழுத்து
பள்ளமேடென்று பாராமற்றானிழுத்து
இவர்-தங்களையெல்லாம் ஏழாநரகத்தில்
தள்ளவென்றுபட்டோலை தானெழுதிகொண்டார்காண்
நல்லோர்பெரியோரை நடுங்கவேசொன்னவரை
கொண்டகணவனுக்குக் கொலைமருந்துசெய்தவரை
வீதிவீதியாக விவரமாய்த்தானெழுதி
அவ்வீதிவிட்டு மறுவீதிவந்தார்கள்
பெற்றதாய்சொத்தைக் களவுசெய்யும்பேதையரை
அரைத்தஅம்மிசாத்தாத அரும்பாவியானவரை
குற்றமுரலுலக்கை யொதுங்கவையாக்கொடியவரை

வாசற்படி நடக்கும் வழிசுத்திசெய்யாரை
எந்தப்பதார்த்தமும் ஏற்றசுத்திசெய்யாரை
கண்டபோதொன்றுசொல்லிக் காணாமலொன்றுசொல்
குண்டுணிகள்சொல்லும் கொடும்பாவியானவரை [லிக்
பகலுறக்கஞ்செய்யும் பாவிகள் தங்களையும்
நரகத்திலேயமுந்த நடுவோலைதானெழுதிக்
கள்ளிர்களோடு கடுகவந்துசிக்கினதே
குண்டுணிகள்சொல்லிக் குறளைகள் தான்பேசச்
சண்டையிட்டுமுன்னே சாலங்கள்சொல்வாரைக்
கணவனைக்காணாமல் கள்ளியவள்வீடுவிட்டுத்
தீர்த்தமுமாடித்திருநாளும்பார்த்தவரைப்
பர்த்தாவிருக்கப் பசியாற்றிக்கொண்டவளை
அவர்களைப்போலே அணுக்கணக்குத்தப்பாமல்
செய்யவென்று நல்கணக்குச் சேரவேதானெழுதி
செட்டிகள்வீதியிலே சிறப்பாகவந்தார்காண்
அவர்களெல்லாமங்கே யடிபணிந்துவாய்புதைத்து
வில்லாச்சரக்கை விலைசரக்காய்விற்றிடுவோம்
செல்லாப்பணத்தைச் செலுத்துவோங்கண்டீரே
எல்லாப்பிழையும் பொருத்தருளுமென்றுசொல்ல
அவர்களுக்குச்சொல்லி யமைத்தபடி தானெழுதி
வெள்ளாளரெல்லாம்வேண்டினதெல்லாம்படைத்தும்
நெல்லுகளை நாங்கள் உலர்த்தாமல்விற்றிடுவோம்
கள்ளமரக்கால்நாழி கலந்தூமிகவிற்றிடுவோம்
என்றுசொல்லியெங்கள் குற்றம்பொறுமெனவே
இவர்களுக்குத்தக்க ஏற்றபடி தானெழுதி
பட்டமார்வீதியிலே வந்தார்பரிவுடனே
பட்டமார்வந்து பணிந்துமிகத்தொழுது
குளிக்காமல்சேவிப்போம் கோவிலையும்பூசிப்போம்
பால்தயிரும்நெய்யும் பகிர்ந்தெடுத்துச்சாப்பிடுவோம்
ஏறுதமானதனை யேற்றிடுவேமென்றுசொல்ல
இவர்களுக்குமங்கே ஏற்றபடிதானெழுதி
அந்தந்தச்சாதிதெரு அடைவாகத்தான்பார்த்து
அவரவர்கள்செய்யும்வகை யதிர்க்கவேதானெழுதிப்
பாவபுண்ணியங்கள் பகுத்துமேதானெழுதி
புண்ணியஞ்செய்வோரைப் புதுமையாயெடுத்தெழுதி
பசியாமலன்னம் பாங்குடனே கொடுத்தவரை

இடுக்கத்துடனே ஏமாறிவந்தவர்க்கு
உடுத்தபுடவை யுகந்தளித்தோர்தங்களையும்
பிச்சையுமிட்டுப் பெரியவிடங்கொடுத்து
மகேசுரபூசைக்கு மடங்கட்டிவைத்தவரை
சாலைமரமுஞ் சத்திரமும்வைத்தவரை
சிவபூசைதவபூசை குருபூசைசெய்வோரை
நான்குதிசைவிளங்க நந்தவனம்வைத்தவரை
ஆலயங்கட்டி யன்னமிகக்கொடுப்போரை
இடிந்தபழங்கோயி லெடுத்துப்பு துப்பித்தவரை
தாகத்துக்காகநல்ல தண்ணீர்கொடுத்தவரை
பொரிந்தவுயிர்தனக்குப் போகநீர்விட்டவரை
இராக்காலப்பட்டினியை யிதமாகத்தீர்த்தவரை
பஞ்சம்வருங்காலம் பகுந்தன்னமிட்டவரை
பெரியோர்கள்தங்களையும் பேணிநடந்தவரை
விருந்துகள்வந்தால் வேறுவைத்துண்ணாமல்
வைத்துவகையில் வஞ்சகங்கள்செய்யாரை
நெய்விளக்குமாவிளக்கு நேமமாய்ச்செய்தவரை
மாதானங்கோதானம் வஸ்திரதானம்முதலாம்
தானங்களெல்லாம் தயவாகச்செய்தவரை
வழக்கோரஞ்சொல்லாமல் மன்னருடன்சேர்ந்தவரை
சிவனைவணங்கிச் சிவபூசைசெய்தவரை
செருப்புக்குடைமுதலாய்ச் சிறந்தபிராமணர்க்குக்
கோடைகாலத்தில் கொடுந்தன்னமிட்டவரை
பிள்ளைபால்வளர்த்தோரைப்பிணிக்குமருந்தளித்தோ
அதிதிபரதேசியருக் கன்னமிட்டுண்டவரை [ரை
சூரியரையெந்நாளுந் தோத்திரங்கள்செய்வோரை
பௌர்ணமியில்நல்விரதம் பத்தியாயிருந்தோரை
பர்த்தாவின்மேலாசை பண்பாகவைத்தவரை
குருவைமறவாரைக் கொலைகளவுசெய்யாரை
கணவரதுசொல்லைக் கட்டாய்நடத்தினரை
ஆறுகுளங்கள் தனி லணைகட்டிவைத்தவரை
வழியைப்பறியாமல் வாகாகக்காத்தோரை
கன்றுபால்குடிக்குமட்டுங் கருத்தாகவிட்டவரை
தருமங்கள்செய்வோரைத் தப்பாமலெழுதிவைத்து
ஒளிவுமறைந்தவர்க்கு ஊன்றுகோல்தான்கொடுப்போர்
காய்ந்ததலைக்கெண்ணெய் கட்டாகத்தான்கொடுப்போர்

ஆவைவணங்கி அனுதினமுந்தான்தொழுவோர்
விநாயகர்பூசை விருப்பமாய்ச்செய்தவர்கள்
பள்ளிக்கூடங்கட்டிப் பாங்காகவாத்தியார்க்குச்
சம்பளமும்பணமும் தான்கொடுத்தோர்தங்களையும்
கந்தனையெந்நாளுங் கருதித்தொழுதிடுவோர்
மாதாபிதாவை மகிழ்ந்துநித்தம்தொழுவோர்
வேதங்களாகமங்கள் விதிப்படியேதானடப்போர்
குருநன்றிசெய்நன்றி குறையாமற்றானடப்போர்
விஷங்கள்தனைமீள விருப்பமாய்ச்செய்தவரும்
வண்ணான்நாவிதன்கூலிமகிழ்ந்துமேதான்கொடுப்போர்
தருமங்கள்செய்தோரைத் தப்பாமற்றானெழுதி
இப்படிக்கொத்த இயல்புடையபுண்ணியரைச்
செப்பமுடனறிந்து செய்தபிழைபொறுத்து
தப்பாமலீசுரனார் தன்னடியிற்றான்சேர்த்து
வைகுண்டலோகத்தும் வகையுடனேதான்சேர்த்து
அந்தவுலகத்தி லமரர்களைப்போலிருந்து
புண்ணியஞ்செய்தவர்கள் போதவேதானிருக்கக்
கயிலைக்குவடபுறத்தில் கனகவனமுண்டாக்கி
பூங்காவனத்திற் புட்பங்களுண்டாக்கி
காய்கனிகளுள்ளதெல்லாங் கடுகெனவேயுண்டாக்கி
எப்போதுஞ்சிவனை இன்பமாய்ப்பூசைசெய்ய
பணிவிடைகள்செய்யவே பாங்காகவுண்டுபண்ணி
அவ்விடத்திலேயிருக்க அன்பாகச்செய்வித்து
வைகுண்டலோகத்தும் வாழ்ந்திருக்கத்தானெழுதி
பாவியர்க்குத்துன்பப் பலனையெழுதுகிறார்
அட்டைக்குழியும் அழகுபுழுக்குழியும்
கிருமிவகைக்குழியும் வேறாகச்செய்தார்காண்
அகல்கிடங்குவெட்டி அதிலேயனல்வளர்த்தி
முள்ளுவனங்களையும் மோசமாய்ச்செய்தார்காண்
நூற்பாலம்மயிர்ப்பாலம் நூதனமாய்ச்சேர்த்தார்காண்
காடுங்கரடுங் கல்லுமிகவுண்டாக்கிச்
சற்றுநிழலில்லாமல் தவிக்கவேசெய்தார்காண்
நரகக்குழியும் நடுநடுங்கச்செய்துவைத்தார்
மெத்தவேயுண்டாக்கி விமரிசையாய்ஆயுதமும்
ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணாச்செக்குகளும்
இருப்புத்தூணுக்காய்ச்சி யற்றபடிநிறுத்தி

இருப்புமுக்காலிகளை எந்நேரங்காய்ச்சிவைத்தார்
செவிகளுக்குநாராசஞ் சேரவேயுண்டாக்கி
உச்சிமுதலா யுள்ளங்கால்தன்வரைக்கும்
வகைவகையாயணி வரிசையாய்த்தானடித்து
தொறண்டிவகைகள் தோற்றமிகவுண்டாக்கி
இந்தவகைப்படியே எள்ளளவுந்தப்பாமல்
பாவபுண்ணியங்களுக்குப் பரிந்துவகைசெய்தபின்பு
இந்திரனிந்திராணி யிவர்கள்பால்போகலுற்றார்
அப்பால்நடக்கு மதிசயங்களுள்ளதெல்லாம்
செப்பமுடனே நானுஞ்சொல்லுகிறேன்கேளுமென்றார்
மாதாவின்றன்னருகே வந்தார்பெருங்கணக்கர்
எமதர்மராஜனும் இயல்பாகஅருகிருந்தார்
தந்தையாரைவணங்கித் தாயார்தம்பாதமதில்
நமஸ்கரித்ததன்மகனை நன்றாகவேவாழ்வாய்
என்றுசொல்லியுத்தமரை இருகையாற்றானெடுத்துக்
கன்னல்மொழியாள் கனிவாயால்முத்தமிட்டாள்
முத்தமிட்டபோது முன்னின்றதாதியர்கள்
எண்ணெய்ப்பலகைதன்னை யெடுத்தங்கேதான்போட்டு
பொற்கிண்ணிதன்னிற்போதவேயெண்ணெயிட்டு (றார்
எண்ணெய்க்காப்புச்செய்ய எழுந்தருளவேணுமென்
எண்ணெய்க்காப்பிட்டபின்பு ஏற்றதலைதான்கோதித்
தீர்த்தமுமாடித் திருநீறுந்தானணிந்து
சிவனைத்தொழுது சிவபூசைதான்முடித்து
வேதப்பிராமணர்க்கு வேண்டியதானங்கொடுத்து
அதிதிபரதேசியர்க்கு அன்னமிகக்கொடுத்து
மகேசுரபூசையை வண்மையுடன்செய்தபின்பு
ஆபரணமுள்ளதெல்லாம் அழகாகத்தான்பூண்டு
புட்பாதிகளெல்லாம் போதவேதான்முடித்து
போசனச்சாலைக்குப் போயிருந்தாருத்தமனார்
நாடாளுமிந்திரரும் நாகமடந்தையரும்
தலைவாழையிலையறுத்துத் தங்கத்தகடுமூத்தி
பூமிதனில்வைத்துப் பொன்னின்முக்காலிவைத்து
மாணிக்கவட்டிலை வைத்தார்கள்முன்பாக
கைக்குநீர்வார்த்துக் கறிவகைகளுள்ளதெல்லாம்
சுற்றிக்கறிகளெல்லாம் சேரவேதான்படைத்து
தும்பைப்பூப்போலமுது சொரிந்துநறுநெய்வார்த்து

தம்பியரையுண்ணென்று தடவினர்முதுகதனை
அப்போதுமுத்தமனர் அவர்கள்முகம்நோக்கி
உன்வீட்டிலேயமுது உண்பமேயாமாகில்
உன்வயிற்றில்வந்து பிறப்பேன்காண்மாதாவே
என்றபொழுதில் இயல்பானமாதாவும்
நின்றுபரதவித்து நெடுமூச்சுந்தானெறிந்து
அகமகிழச்சந்ததிதான் அறியாதபாவியென்று
காதல்மிகவில்லாத கன்னியிருந்தென்னவென்று
போதமயங்கியே போய்ச்சேர்ந்தாள்பஞ்சணையில்
மாதாமயங்கியபின் மைந்தரெழுந்திருந்து
உண்ணவேவாருமென உவந்துநிற்கவப்போது
தண்ணீர்குடித்தவுடன் தாகந்தெளிந்தாற்போல்
கைதொழுதுபாலகனைக் கட்டியெடுத்தணைத்து
மைவிழியாள்தானும் மடியிலெடுத்துவைத்து
வருக்கைப்பலாச்சுளையு மற்றுமுள்ள நற்கனியும்
சர்க்கரைநற்சீனி தாரணியிலுள்ளதெல்லாம்
திரட்டுப்பால்தன்னையுஞ் சிறக்கவேதான்படைக்கப்
பாங்குடனேயுத்தமனர் பரிந்தமுதுசெய்யலுற்றார்
கைகழுவிச்சுத்திபண்ணிக் கனகமணியாசனத்தில்
அடைக்காயும்வெற்றிலையும் ஆனபரிமளங்கள்
சிறப்பாகத்தான்கொடுத்துச் சிந்தைமகிழ்ந்தங்குரைப்
இயமலோகக்கணக்கு மெழுதவேநீபோவாய் (பாள்
அற்பமாங்குற்றங்கள் அக்கணக்கிலெழுதாமல்
சொற்பமாங்குற்றமதைத் தொகைபடுத்தாமற்கணக்கை
எழுதிமுடித்திடுவாய் என்மகனேயென்றுசொல்ல
ஏதுகுற்றஞ்சொன்னீர் என்னுடையமாதாவே
தலைவாழையிலையறுத்துத் தானெனக்குப்போட்டதுவும்
குற்றமென்றுபட்டோலை கொண்டேனன்மாதாவே
என்றுசொல்லிப்பேசி யிருக்கின்ற அந்நேரம்
எமதர்மராச னியல்பாகத்தானழைக்க
மைந்தர்பெருமாள் மாளிகையினுட்புகுந்து
போகவிடைதாருமென்று பொருந்தவேதாமுரைத்தார்
வந்துதொழுத மகனரைப்பார்த்து
வாரியெடுத்து மார்போடேதானணைத்து
இந்திரனருடனே யிந்திராணிமனமகிழ்ந்து
தருமராசனிடத்திற் றமொருவார்த்தைசொல்வார்

புத்திரர்பின்வருவார் போமுன்பெனவுரைத்தார்
அந்தப்படிதரும ராசனும்போகலுற்றான்
போனார்யமதருமர் பூவுலகிற்சேனையுடன்
அப்பால்நடக்கிற அதிசயத்தைக்கேளுங்கள்
மிருகண்டன்நற்கதையை மெய்யாகசொல்லுகிறேன்
வருந்திமிருகண்டன் மகனுமேவேணுமென்று
பாதாளந்தோன்றவெட்டிப் பதிவாயனல்வளர்த்த
வோமகுண்டமத்தியிலே யுயர்ந்தகம்பம்நாட்டியந்தக்
கம்பத்திலேறிக் கால்விரலைத்தானூன்றி
வேதாளஅக்கினியு மேலேபடர்ந்தெரிய
ஈசனைபிள்ளையரு ளென்றேதவமிருந்தார்
தண்ணீரருந்தாமல் சருகும்புசியாமல்
இருந்தான்தவசு ஈராண்டோடெட்டுடனே
வருந்தித்தபசிருந்தான் மன்னிமிருகண்டன்
அந்தத்தவத்தருமை யரனுருந்தாமறிந்து
தவசிவடிவாகத் தானெழுந்தார்சங்கரரும்
அப்போதுஉமையவளு மப்படியேதானும்வந்தாள்
இருபேருந்தவசியா யேகினார்தவத்தருகே
மிருகண்டன்செய்தவத்தை மெய்யாகக்கண்டார்கள்
அப்போமிருகண்டன் அரனுரைத்தான்தொழுது

விருத்தம்

அய்யனேபோற்றிபோற்றியறம்வளர்த்தவனேபோற்றி
செய்யனேபோற்றிபோற்றி திருக்கயிலாசாபோற்றி
பையவேதவசியாகப் பார்தனிலுதித்தாய்போற்றி [ற்றி
உய்யவேயடியேற்கன்பா யொருமைந்தனருள்வாய்போ

நடை

என்றமொழிகேட்டு இருவருமனமகிழ்ந்து
சிந்தையுடனே திருவாக்குத்தானுரைப்பார்
வாராய்மிருகண்டா மதலையைநாந்தருவோம்
சீராகவேவயசு தீர்க்காயுசாயிருந்தால்
கல்வியறிவில்லாமற் கசடனாய்த்தானிருப்பான்
அல்லதுகல்வி யறிவுடையவனாயிருந்தால்
பதினாறுவயதினிற் பரிந்தேயிறந்திடுவான்
ஆனதினாலந்த வகைதனிலேயாண்பிள்ளை



எந்தவகையா யிருக்கவேவேணுமென்று
அப்போமிருகண்டன் ஆராயுங்கல்வியனைத்
தவத்தினில்மிக்கோனைத் தந்தருள்வாய்பிள்ளையென்று
தெண்டனிட்டபோது திருமதலைதானருளி
அம்மையுமையாளும் ஆனபரமேஸ்வரரும்
இடபமதிலேறி யேகினர்கயிலைதனில்
மிருகண்டனரு மிக்கதவமுடித்து
நலம்பெறவேதானிருந்து நன்றாகவாழ்கையிலே
வந்துபிறந்தான் மகவாகிமார்க்கண்டன்
சாஸ்திரபுராணமெல்லாம் சதுராகத்தான்படித்து
வேதங்களோதி விளங்கினர்மார்க்கண்டன்
அப்பால்நடக்குமதிசயத்தைக்கேளுமினி
வில்வந்துளசி விருப்பமுடன் தானெடுத்து
மந்தாரைப்பிச்சி மருவற்றபூக்களுடன்
செண்பகமுமல்லிகையுஞ் சேர்ந்தஅலரியுடன்
புஷ்பவகைகளெல்லாம் போதவேதானெடுத்து
தீர்த்தங்களாடித் திருநீறுந்தானிணைந்து
கண்டியணிந்தைந்தெழுத்தை கருத்திலேதானமைத்து
சிவனைத்தொழுது சிவபூசைசெய்யலுற்றான்
அல்லும்பகலும் அரைநாழிகைபிரியாமல்
அந்தமுடன்சிவனை யன்பாகப்பூசைசெய்தான்
தோத்திரங்கள்தானும் துலங்கவேசொல்லலுற்றான்

விருத்தம்

அண்டர்கட்கரியாய்போற்றியடியவர்க்கெளியாய்போற்[றி
வண்டமிழ்ப்பாண்டிநாடுவாழ மண்சுமந்தாய்போற்றி
கண்டவர்க்கினியமேனி காட்டியென்சென்னிமீதில்
மூண்டகத்திருத்தாள்வைத்தமுத்தனேபோற்றிபோற்றி.
வேதநாயகனேபோற்றி விண்ணவர்தலைவாபோற்றி
மாதொருபாகாபோற்றி மறுசமயங்கள்மாளப்
பேதகஞ்செய்வாய்போற்றிபிஞ்ஞகாபோற்றியான்செய்
பாதகமனைத்துந்தீர்க்கும் பராபராபோற்றிபோற்றி.

நடை

இப்படித்தோத்திரங்கள் இயம்பிமிகப்பணிந்து
பழுதுகள்வாராமல் பரமனையேதொழுவார்
இந்தப்படியே யிருக்குந்தருவாயில்

ஆண்டுபதினாறும் ஆச்சுதேயாங்கவர்க்கு
அப்போதுயமதருமர் அருகில்நின்றதூதுவரை
மார்க்கண்டமாமுனிக்கு வயதுபதினாறாச்சு
மார்க்கண்டன்தன்னை வரவழையுமென்றுரைக்க
அந்தமொழிகேட்டு ஆனபெருந்தூதுவர்கள்
சென்றதனைத்தேடிச் சீக்கிரத்தில்வந்தார்கள்
அப்போதுமார்க்கண்டன் ஆனபெருங்கோயில்நிற்க
நின்றமார்க்கண்டனையும் நீர்வாருமென்றுரைத்தார்
அப்போதுதூதரைத்தான் அன்பாகத்தான்பார்த்து
நீங்கள்யாரென்று எடுத்துரைத்தாரந்நேரம்
யமதர்மராசன் இயல்தூதர் நாங்களெல்லாம்
எங்களரசனும்மை யினிமையாய்த்தானழைத்தான்
உங்கள்வயசு மொருபதினாறுமாச்சுதென்று
வந்தோமுமையழைக்க வாருமென்றுதானுரைக்க
மார்க்கண்டனாரும் மனம்நடுங்காதேயுரைப்பார்
தார்க்கொன்றைசூடுகின்ற சங்கரனைத்தானினைந்து
வந்ததொருதூதுவரே வார்த்தையொன்றுகேளுங்கள்
அந்தமுடனுங்களை யழைத்துவரச்சொன்னவனும்
முந்தியிருந்தவனே முறைசெய்யவந்தவனோ
எந்தஇயமனென்னை யழைக்கச்சொன்னவன்காண்
என்றபொழுதில் எமதூதரேங்கிநின்று
இருவரையுந்தான்பிடிக்க இசையாதென்றோடிவந்து
எமதருமராசன்பா லிசைக்கிறார் தூதுவர்கள்
மார்க்கண்டன்தன்னை வரவழைக்கச்சொன்னீரே
அவன்சொன்னவார்த்தை அடியேன்உரைக்கின்றோம்
முந்தியிருந்தவனோ முறைசெய்யவந்தவனோ
உங்களியமன் ஒளித்தோடிப்போவான்காண்
வந்தவழியே வழிபார்த்துஓடுமென்றான்
உடனேபயந்துஓடிவந்தோமென்றனரே
அந்தமொழிகேட்டு அப்போதுயமதருமர்
கோபித்துக்கண்சிவந்து கூற்றுவருமந்நேரம்

விருத்தம் [ப்

அரியுமயனுந்தெரியாத அரனைநோக்கித்தவம்பண்ணி
பிரியமுடனேமிருகண்டன் பெற்றபிள்ளையுயிர்சோர
எரியுங்குஞ்சியுளகூற்ற னெடுத்தான்சூலத்துடன்சாபம்
விரியுங்கடல்சூழுலகமெலாம் வெற்றிபிறக்கத்தோன்றினனே.



தெரியுங்கடல்போற் கோபமூண்டுசேனையெல்லாம் புடைசூழக், கரியமலைப்போல்செம்மலைபோல்கடுகநடந்தான்வழியின்மேற், பெரியகடாவின்மீதேறி பிறைபோல்வளர்ந்த வயிறுகளும், எரியும்விளக்கின் சுடர்போல இரண்டு விழியும் பொறிசிதற,

வசனம்

அஃதெப்படியென்றால் மார்க்கண்டனுக்கு வயசு பதினாறானவுடனே தூதர்களையனுப்பிக் கூட்டிவரச் சொல்லமார்க்கண்டனை வன்சுவாமிகயிலையங்கிரிவாசர் கிருபையைத் தியானித்துக்கொண்டு, வந்த தூதரை நிராகரித்து எமதர்மராசனையுஞ் சட்டை பண்ணமற் சொன்னசெய்தியைத்தூதரானவர்தருமராசாவினிடத்திற்போயறிவிக்கத்தருமராசன் மிகுந்தகோபங்கொண்டு கண்களிரண்டும் நெருப்புப்பொறிபறக்கத் தக்கதாக அண்டங்கள்மலைகளெல்லாம்நடுநடுங்கவும்தேவர்களெல்லாம் வெருண்டோடத்தக்கதாக வயிரமுடிதரித்தும் புயங்களிரண்டிலும் ஆயிரம்பேர்களால்தூக்கப்படாநின்றஉடைவாளும் சரிகையுங்கட்டி ஆயுதவரிசைகளிற் சிலஆயுதமும் இடுப்பில்வரைந்துகட்டிப் பாசக்கயிறுந் தண்டாயுதமுமெடுத்து, கருங்கடாவின் மேலேறிக்கொண்டுவெற்றிசங்கூதிவீரமுரசறைந்து ஆயுதபாணிகளுடனே வளர்ந்திருக்கப்படாநின்ற கருங்கடாவானது இரண்டாயிரம் வரவும் மீசைகள்படபடவென்று துடிக்கத்தக்கதாகவும் அண்டபுவனங்களெல்லாம்அதிரத்தக்கதாகவும் வலதுதொடை தட்டிமார்க்கண்டனைத் தேடப் புறப்பட்டான்.

நடை

வாரார்எமதருமர் மார்க்கண்டனைத்தேடி
இயமன்தன் அங்குவரும் இரைச்சல்மிகக்கேட்டு
மார்க்கண்டன் தானு மனதுமிகநடுங்கி
என்செய்வோமென்று ஈஸ்வரரைத்தானினைத்துத்
தஞ்சமென்றுசொல்லிச் சரணம்பணியலுற்றான்.

விருத்தம்

கண்டான்பாலன்காலனையுங் கண்ணீர் மிகத்ததும்பி, அண்டர்பெருமான்றனைப்பார்த்தேயடியேன்செய்தகுற்றங்க, ளுண்டானாலும் பொருத்தருள் வாயுற்றகால

னொன் னுயிரைக், கொண்டேயின்றுபோகாமற் கோவே காத்துக் கொள்வாயே.

என்றேயிறைஞ்சி மார்க்கண்டன் இறைவன் பாத மலர்போற்றி, நின்றேதொழுதுகும்பிட்டு நெடுமூச்செறிய நிமலனுமே, நன்றே யுனது பக்தியினி நமனுமூனைப்பற்றிடில்யாமுஞ், சென்றேதொலைப்போம் மார்க்கண்டாதெரிவாயென்றேசெப்பியுடன்.

அஞ்சாதேநாங் காத்திடுவோ மாணைமுகவன் தன் னாணை, துஞ்சாதே நீயவனுடனே சொல்லாலொன்றும் பேசாதேமஞ்சார்பொழில்சூழுலகறியமதியாதுன்மேல் வருவானேல், நஞ்சார்கூர்வாள் மழுவாலே நமனைக் கொல்வோமெனச்சொல்ல.

கோலஞ்செய்துமலர்தூவிக்குறித்துன்பாதம்வணங்கிடுவென், ஆலமுண்டமிடற்றானே அடியேனெஞ்சங் கலங்காமற், சூலபாசந்தன்னுடனே சுற்றிநின்று என்னுயிரைக், காலன்கொண்டு போகாமற் காத்துக்கொள் வாய்கொள்வாயே.

அத்தனே போற்றிபோற்றி அடியவர்க்கெளியாய் போற்றி, பித்தனே போற்றிபோற்றி பிறைமுடித்தான் போற்றி, நித்தனே போற்றிபோற்றிநிருமலாபோற்றி போற்றி, யுற்றதோர் கூற்றன்வந்தா லுதைத்துடன் கொல்லுவாயே.

ஆதிப்பொருளாயலகடலாய னுவுக்கனுவாயாவருக்கு, நீதிபரனாய் நிர்க்குணனாய்நினையுமடியார்க்கெளியோனாய்ச், சோதிவடிவாய்ச் சுடரொளியாய்த் தோன்றுஞ் சிவனேமாமறலி, மோதிப்பாச மெறியவந்தான் முழுதுநானுன்னடைக்கலமே.

வசனம். இப்படி மார்க்கண்டன் தோத்திரம் பண்ணுவதைக்கேட்டு எமதருமராசன் சொல்லுகிறான்.

வாடாகெடுவாய் மார்க்கண்டா மறந்தாலும்விடுவேனோ, ஓடுகொண்டாரென்செய்வாருன்னைபிடித்துக் கொண்டுபோய்ச், சூடாமணிசேர்விழியிரண்டுஞ்சொருகச்சூலத்தாற்குத்திக் கூடாஉயிரைப் பிடித்தேநான் கொண்டேபோவேன் கண்டாயே.

வ-ம். என்னடா மார்க்கண்டா என்னுடைய மனுஷன் வந்துஉன்னையழைத்தால்அதற்குவராமலிருந்து

மேலானவார்த்தைசொன்னாயல்லவாஉன்னைவிடத்தக்க தில்லை கர்த்தாவானவர் உன்னைக்கொண்டோடும்போது தடுக்கமாட்டாரென்று வெகுவாய்த் தருமராசன் மார்க் கண்டனைப் பயப்படுத்துகிறான் (எ-று.)

விருத்தம்

ஈசன்றன்னாலென்செயலா மிந்தப்பதத்தையினிய வரால்,வாசஞ்செய்துமலரிட்டுவணங்கினாலுமாற்றரிது மோசம்போகேனுன்றனக்கு முடிந்தநாளும் வந்தது காண், பாசங்கொண்டே யுன்னுயிரைப் பற்றிமிகவும் பறிப்பேனே.

ஈரெட்டொழியவயதுனக்குவ ற்றமுண்டோஎன்னு டனே, மார்பைத்தட்டியெதிராடி வலிமைசொன்னாய் மார்க்கண்டா, பாரிப்போதேநானுன்னைப் பரமேஸ்வர ரும்பார்த்திருக்கக், கூரிட்டொளிர்வேல் தன்னாலேகொ ண்டேபோவேன் ாண்டாயே

வ-ம். அஃதெப்படியென்றால் எமதர்மராஜனான வன் மார்க்கண்டனைப்பார்த்து அடா மார்க்கண்டா நீ எத்தனைதவத்தோடுங்கூடிப் பூசைசெய்தாலும் உனக் குப் பதினாறுவயசுக்குமே லிருப்பில்லையே கர்த்தர்தா மென்னசெய்வார் அவர்பார்த்திருக்கக் கொண்டுபோகி றேனென்று கருங்கடாவின்பேரில் ஏறியிருந்த எமதரு மராசன்கீழிறங்கி இன்றையதினம் உன்னுயிரைக்கொ ண்டுபோகிறேனென்று கோபத்துடன் சொல்ல அதைக் கேட்ட மார்க்கண்டன் சுவாமியைப்பார்த்து அபயஞ்சொல்லப் போகிறான் (எ-று.)

விருத்தம்

அடியேன்தொழு நம்பரனேயபயம் பரமேஸ்வர னேயபயம், துடிசேரிடையாள்கணவாவபயம் தூயநெல் லைப்பதியாயபயம், கடிசேர்சூலக்கர்த்தாவபயங் கருணா லயனேயபயமபயம், கொடிதாகியகூற்றுவனைகொன்று கொடுப்பாயெல்லாவரமுமென்ன.

வசனம். இப்படிஅபயமிட்டுவருந்தின மார்க்கண் டனைப் பார்த்து, சுவாமியருளுகிறார்.

விருத்தம்

வந்துபயந்தே யபயமிட்ட மார்க்கண்டாநீயஞ்சா தே,யைந்துகரத்தன்றன்னாணையந்தநமனையணுகவொ

ட்டோனு, சிந்தைமகிழ்ந்தே யிருவென்று திருவெண்ணீற்றுக்காப்பணிந்து, மைந்தன்றன்னைத்தன்னருகே வாவென்றழைத்து வைத்தனரே.

வசனம். இப்படிக்கயிலாசபதியானவர்மார்க்கண்டனைத்தன்கிட்ட வைத்ததைப் பார்த்து எமதருமராஜன் சொல்லுகிறான்.

விருத்தம்

கூசக்கடவேனல்லவென்று கொடிய கோபத்துடனியமன், ஈசர்க்கெதிரேதழலெழவேயெரியுஞ்செக்கர்க்குஞ்சியுடன், பாசக்கயிற்றாலவன்றன்னைப்பற்றிப்பிடிப்போமென்றெண்ணிப், பேசிக்கொண்டுதான்வந்து பெரியமலைபோல் நின்றனனே.

நடை

நின்றானியமன் நேசமுள்ளபாசமதை
வீசியெறிந்தான்காண் விரைந்துமார்க்கண்டன்மேல்
அப்போதுமார்க்கண்டன் அரனையேகட்டலுற்றான்
வீசினபாசமது விரைந்துசிவன்மார்க்கண்டனையும்
சிக்கெனவேதானிறுக்கிச் சேர்த்துமேதானிழுத்தான்

விருத்தம்

வட்டச்சடையார்திருமுதுகைவலுவாய்மார்க்கண்டனும்தாவிக், கட்டிக்கொண்டான்தானிறுகக்கண்ணீர்நின்றுமிகத்ததும்பச், சிஷ்டர்க்குரிய பிராணுருஞ் சிறுவன்ருனுமகப்படவே, துஷ்டக்காலன்பாசத்தைச்சுழற்றியிழுக்கலுற்றானே.

வசனம்

அஃதெப்படியெனில் எமதருமராசனுக்குக் கோபமுண்டாகி மார்க்கண்டன்பேரிற்பாசத்தைவீசிட மார்க்கண்டனானவன் சுவாமியைத் தாவிச்சேர்த்துக் கட்டிக்கொள்ள அப்பாசம் சுவாமியையும் மார்க்கண்டனையுஞ் சேர்த்தது. அதைக்கண்டுமார்க்கண்டனானவன்றன்னைப் பாசமிழுக்கிறதுந்தவிர நம்முடைநிமித்தியஞ் சுவாமியையும்பாசக்கயிறுபற்றியிழுக்கும்படி ஆச்சுதேயென்று கண்ணீரானது தாரைதாரையாகவோடுகிறது சுவாமிக்குத்தெரிந்து கோபமுண்டாகிஎமதர்மராசனை ஆக்கினை செய்யப்போகிறார்.

விருத்தம்

வாழுமுலகிலருள்பெற்ற மார்க்கண்டனைத் தான்காத்திடவே, யேழைபாக ரெழுந்திருந்து இடதுகாலை மிகநீட்டி, வீழவுதைத்தார் நிலப்பார் விண்ணுமண்ணுந்தானதிர ஆழியுடைந்தாற் போலியமன் அலறி வீழ்ந்தானவனியிலே.

நடை

அப்பால்நடக்கு மதிசயத்தைச்சொல்லுகிறேன்
பாதத்தாலேயுதைக்கப் பாதாளத்தேவிழுந்து
இறந்தானே இயமன் ஏற்றதொருஈஸ்வரரும்
மார்க்கண்டா நீ மயங்காதேயென்றுரைத்து
என்றும்பதினாறுயிருக்க வரங்கொடுத்து
ஒன்றுக்குமஞ்சாதே யுன்னைநாங்காத்திடுவோம்
என்றுசிவனார் இவ்வசனஞ்சொல்லிடவே
மார்க்கண்டன்றானு மகிழ்ச்சியுடன்வாழ்ந்திருந்தான்
அன்றுமுதலுலகிலுள்ள ஆருயிர்கள் இறவாமல்
இருந்ததினாலென்னசெய்வாள் ஏற்றதொருபூமிமாது
அன்றுமுகம்வாடிக் கண்ணிடத்துநீர்சொறிந்து
சர்வார்களில்லாமற் றரைப்பாரமாச்சுதினிப்
பூமிபொருக்காதிருக்கப் புனிதரருள்வேணுமென்று
பைங்கொடியாள்மாது பாரஞ்சுமத்தலற
இந்திரனார்தர்மிடத்தி லேகுவோமென நினைத்துச்
சித்திரபுத்திரரைச் சென்றுகண்டுகொள்வோமென்று
பூமாதுமங்கே புனிதமாயோடிவந்தாள்
வந்துநின்றுஇந்திரனார் வாய்த்ததிருமாளிகையில்
முறையிட்டுச்சொல்லுகிறாள் மடிந்தான்காண்மல்லியும்
என்னாற்சுமக்கக் கூடவில்லையென்றுரைத்தாள்
அப்போதுசித்திரபுத்திரர் ஆதரவாய்வந்துநின்று
நின்றுசலித்து நெடுமூச்சுத்தானெறிந்து
ஆருமிலைமாது அலறியேசென்றுகண்டாள்

விருத்தம்

பாலன் செய்தநற் பாக்கியத்தாற் பரமேஸ்வரனார் பாதத்தாற்காலன்பட்டு விழுந்திறந்தான். அதனாலுயிர்கள்காசினியிற், சாலமிகுந்து சாவின்றித் தாரணியில் பாரமாச்சுதென்று, ஞாலமடந்தை வருத்தமுற்றுநாராயணனைப்போற்றினளே.

நடை

அப்போதுமாயவரும் ஆனதொழுபூமாதே
உன்னுடையபார மொழித்தருள்வேன் நான்தானும்
போவென்று சொல்லி யனுப்பினார்பூமாதை
அப்போது தன்கணத்துக் மழைத்தேயருள்புரிவார்
தேவேந்திரலோகத்திற் றானிருக்கும்உத்தமரை
இங்கேயழைத்தோடி வாருமென்றாரங்கே
கணங்களுநமோடியே கணக்கரிடம்வந்துகண்டு
நாராயணருமை நன்றாயழைக்கலுற்றார்
என்றமொழிகேட்டவுடன் ஏற்றதொருபுத்திரரும்
சிந்தைமகிழ்ந்து சீக்கிரமாய்த்தானெழுந்து
நாடாளுமிந்திரற்கும் நாகமடந்தையர்க்கும்
கூடவேதெண்டனிட்டுக் கூப்பிட்டெழுந்திருந்து
இனிதாயனுப்புமென்று இணையடியைக்கைதொழவே
நல்லதென்று இந்திரரும் நாயகியுமுளமகிழ்ந்து
போய்வாருமென்று புகழ்ந்துவிடைகொடுத்தார்
சேனைகள்சூழ்ந்துவரச் செம்பொன்னின்தேரேறிச்
சித்திரபுத்திரனார் சிவன்கயிலைபோய்ச்சேர்ந்தார்
முப்பத்துமுக்கோடி தேவர்களும்வந்துகண்டார்
நாற்பத்துநாற்கோடி ரிஷிகளும்வந்துகண்டார்
சந்திரருஞ்சூரியருந் தானவரும்வானவரும்
வந்தமுனிதேவரெல்லாம் வணங்கினாரப்போது
சித்திரபுத்திரருஞ் சிவனாரடிவணங்கி
அருச்சனைகள்செய்து அரன்பாதம்போய்ப்பணிந்தார்
வந்துபணிந்த மகனாரைத்தானெடுத்து
நன்மையுந்துன்மையும் நடுவெழுதவந்தீரே
என்றரனார்களிகூற ஏற்றசித்திரபுத்திரரும்
பத்தியுடன்பட்டோலை வாசித்தார்பாங்காக
அப்போதுவிஷ்ணுவும் அகமகிழ்ந்தேயடிவணங்கிச்
சிவன்கயிலைசென்று செப்புகிறார்நல்வசனம்
எமதருமராசன் இறந்ததினாற்பூமாது
சாவின்றிமிகுந்தவுயிர் தமைச்சுமக்கமாட்டாமல்
அல்லல்படுந்துயர மாற்றவேவேணுமென்று
சிவனாரிடத்திற் செப்பினாரப்போது
எல்லோருங்கூடி யிசைந்தார்சிவனிடத்தில்
சிவனாருமங்கே சித்தமகிழ்ந்திடவே

பிரமாவுமந்நேரம் பெருமையாய்த்தானுரைப்பார்
வயசுபதினூருய்ச் சிருட்டித்தோதாமவர்க்குக்
கணக்குப்படிசென்றுன் காலத்தையறிந்து நமன்
தவத்தைமிகப்பாராமற் றுனே தான்மாண்டனன்காண்
புத்திகுறைச்சலினூற் போய்மாண்டானந்த நமன்
பிள்ளைகள்செய்தகுற்றம் பொறுத்தருளவேணுமையா
ஆரிடத்திற்செல்வோம் அரனே நீரல்லாமல்
வேறெருவருண்டோ விண்ணப்பம்கேட்கவென்றுர்
இப்படியேவானவர்கள் எல்லோருமுறையிடவே [வார்
சொல்லுகிறேம்கேளுங்கள் சுருக்கமாயென்றுசொல்
அன்னதானஞ்செய்வோர் அருங்கோவில்கட்டினவர்
கன்னிகாதானஞ்செய்வோர் கன்றுக்குப்பால்விட்டோர்
சிவன்பாதம்சென்றவர்கள் சிவபூசைசெய்திடுவோர்
அன்னைபிதாவை அனுதினமுந்தான்தொழுவார்
பார்வதிபூசை பக்தியாய்ச்செய்வோர்கள்
வைகுண்டநாதருக்கு வழியடிமைசெய்தவர்கள்
இவ்வளவுபேரும் இன்பமுடனென்னிடத்தில்
கொண்டுவரவேணுமென்று கூறியேபின்புசொல்வார்
எமனையெழுப்பி யின்பமுடன்மகிழ்ந்து
கூப்பிடுங்களென்றுசொல்லிக் கோமான்விடைகொடுக்க
அருளளிப்பாயென்றுசொல்லி அந்தகனைத்தானெழு
தண்டாயுதத்தோடே யெழுந்தானியமனுந்தான [ப்ப
வாய்புதைத்துத்தெண்டனிட்டு வணங்கினூனியமன்
அப்போதரனூர் அகமகிழ்ந்துபார்த்தவனை
நன்மைகள்செய்தவர்மேல் நாடாதேயென்றுசொல்லி
ஆயுதங்களெல்லாம் அன்பாகத்தான்கொடுத்து
தன்மக்கணக்கெழுதிய தான்வந்தவுத்தமரை
நன்மைதுன்மையுள்ளபடி நமனருகேதானிருந்து
வாக்குடனேசொல்லுமென்று மகிழ்ந்துமேதானுரை
இருபேருமொன்றுய் எல்லோரையுமனுப்பி [த்தார்
எமலோகப்பட்டணத்தைச் சேருகிறூரிருபேரும்
பட்டைகள்மிகநெருங்கப் பாரக்கடாவேறி
வேற்றிக்குடைபிடிக்க வெண்சாமரைபோடக்
கணக்கரும்நல்ல கற்பகத்தேரேறி
இயமதர்மன்கூட இசைந்துவந்தாருத்தமனூர்
எட்டுத்திசையு மெங்குமேதான்முழங்க

திக்குத்திசைகளெல்லாஞ் சிறப்பானபந்தலிலே
கவிவாணர்பாடக் கட்டியர்களாடிவர
நாடகசாலைப்பெண்கள் நாட்டியங்களாடிவர
பதினெட்டுவாத்தியங்கள் பண்பாகத்தான்முழங்க
வாசங்கள்தான்வீச வான்கவரிதான்வீச
பொன்னுலகத்தாரும் போதவேசூழ்ந்துவர
புட்பமாரிபொழிந்து பொன்னுலகோர்வாழ்த்திட
தேவாதிகளெல்லாஞ் சிறப்புடனேதான்வரவே
இந்தப்படியே யிருபேரும்வந்திருந்தார்
வானும்புவியு மற்றுலகிலுள்ளதெல்லாம்
நன்மையுந்துன்மையும் நன்றாய்க்கணக்கெழுதி
எமதருமன்மாளிகையில் எழுதுகின்றார் நற்கணக்கர்
நான்குவாசல்வழிக்கு நடுவேயோர்மாளிகையில்
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகத்தானிருந்து
பட்டோலைதன்னைப் பதிவாகவாசித்தார்
திருந்தவே நன்மைசெய்தோர் சிறந்தவழிவருவதற்கு
வடக்குவாசல்வழியை வரிசையாய்ச்செய்யலுற்றார்
மாணிக்கஞ்சேர்ந்த வயிரக்கால்தானாட்டி
இடம்பெறவேபந்தல் எழிற்காவணம்போட்டு
மாடங்கள்கட்டி வயிரவிளக்கேற்றி
கூடங்கள்கட்டிக் குளிர்ந்தமலக்காவுடனே
நல்லதண்ணீர்ப்பந்தல்களை நன்றாகவுண்டுபண்ணி
புண்ணியஞ்செய்தவர்க்குப் பொருத்தமிகவுண்டாக
அதற்கானபேரை யவ்வழிக்குக்காவல்வைத்து
இதுதான்கயிலைவழி யென்றுமேபுண்ணியர்க்குச்
சொல்லும்படிக்குச் சுருதியுள்ளகாவலரை
திட்டங்கள்செய்து சிறப்புடனேவைத்தார்காண்
கீழ்வாசல்தன்னருகே சேவகனைத்தானேக்கி
ஞானநிஷ்டைசெய்தவர்கள் நல்லவழிவருவதற்கு
சிவஞானபத்தர் தரிசிக்கவருவதற்கு
பராசத்திபக்தர்கள் பண்பாயிருப்பதற்கு
மண்டபமுஞ்மாளிகையும் வகையுடனேதான்வைத்து
மாளிகைகூடம் வகுப்பாகச்செய்யலுற்றார்
வெள்ளிக்கதவுமிட்டு வேதியரைக்காவல்வைத்து
வைகுண்டநாதருக்கு வழியடிமைசெய்தவர்கள்
வருகிறவழியென்று வைத்தாரேதூதுவரை

வேறுமொருவாசல் விரைவாகவகுக்கவென்று
வந்துதெற்குவாசல் வழிதோறுமுட்பரப்பி
நெருப்புப்பாரந்தெங்கும் நின்றெரியவுண்டுபண்ணிச்
சுண்ணாம்புஞ்சேறுஞ் சுடுமணலுமுண்டாக்கி
பேர்தெரியவெட்டிப் பெருங்கழுக்கள்தானாட்டி
கூரையுங்காவுங் குளிர்ந்தநிழலில்லாமல்
நாயும்நரியும் பெருங்கடுவாயோநாயும்
கட்டெறும்புகொட்டுந்தேள் கடியதொருபாம்புடனே
அட்டைப்புழுக்குழியும் நன்றாகவுண்டாக்கி
அரியதொருபாதகரை யடித்திழுத்துவரச்சொன்னார்
கல்லுங்கரடுங் கடியமணல்பரப்பி
பாதகரைத்தண்டிக்கப்பாவிகளைக்காவல்வைத்து
மேற்கேயொருவாசல்வைத்து விதவிதமாய்ச்செய்யும்
பார்க்கப்பயங்காட்டும் படர்பூதப்பிசாசுகளும் [வகை
கருநாயுஞ்செந்நாயுங் கலந்துகட்டிநிறுத்திவைத்தார்
குரைக்குந்தலைப்பேய்கள் கூட்டமாய்நிறுத்திவைத்தார்
செக்குலக்கைதலைதிருகிச் சிறப்பாகவுண்டுபண்ணி
செம்புத்தூணாட்டியதிற் றீயெரிநிறுத்திவைத்தார்
இரும்பாலேதூண்டில்களை யெங்குமேதானாட்டி
நீரில்லாத்தரைதனிலே நெருப்பெரியச்செம்புருக்கி
பஞ்சமாபாதகர்க்குப் பரப்பியேசெய்துவைத்தார்
கிங்கிலியரங்கே கெட்டியாய்க்காவல்வைத்தார்
இப்படியேவாசல்களெல்லாம்வகுத்தபின்பு
செப்பமுடனிருபேருஞ் சிறப்பாகத்தானிருந்தார்
இங்கிதங்கள்பேசி யிருபேருந்தான்மகிழ்ந்து
வள்ளுவனுக்காள்விட்டு வரவழைத்தாரந்நேரம்
வள்ளுவனும் அங்கே வலமாகவந்துநின்று
அடியேனையிங்கே யழைத்ததேதுக்கெனவே
படியேழுஞ்சென்று பறையடிக்கநீகேளு
சீவசந்துக்களெல்லாம் சிறப்பாகத்தானறிய
காயிருக்கப்பழமுதிரும் படியேயடிமுரசை
அடித்துவாவென்றுசொல்லி யனுப்பினாரந்நேரம்
அப்படியேவள்ளுவனும் யானைதனைக்கொண்டுவந்து
ஆனைக்குள்ளவரிசைகளை யன்பாயலங்கரித்து
ஆபரணமுள்ளதெல்லாம் அடைவாகவேபூட்டி
தம்பட்டம்வைத்துத் தனிக்காய்வழியேதான்

ஆனை தனிலேறியே புறப்பட்டானப்போது
துர்க்கைதிருக்கோயில் தூரவேதான்தெரிய
துய்யகரிவிட்டிறங்கித் துர்க்கையைத்தான்பணிந்தான்
மதுவைக்கொடுத்தாள் மாகாளியப்போது
அரக்குமதுவை யளவின்றித்தான்குடித்தான்
பதினாலுலகறியப் பறையறைந்துசொல்லுகிறான்
ஆண்சாதிபெண்சாதி ஆகியேதான்பிறந்த
நாலுவகைச்சாதிகளும் நன்றாகத்தான்தெரிந்து
பழமுதிரக்காயிருக்க வென்றுசொல்லிப்பண்புடனே
வெய்யபெருந்தோளான் வீதியிலேவந்துநின்று
மறையிட்டுத்தான்பறையை முழக்கினனப்போது
இந்தமொழிகேட்டுடனே யெல்லாருந்தான்மகிழ்ந்து
அந்நேரஞ்சிறுபிள்ளைக ளனேகம்பேர்தான்கூடி
இரைச்சலிட்டுக்கொண்டு எதிராகநின்றாரே
அப்போதுவள்ளுவனு மானைதனைநோக்கி
அடித்தானேபிள்ளைகள்மே லானதொருகோபத்தால்
அப்போதுபிள்ளைகளுக் கதிகோபமுண்டாகி
கையில்மணலெடுத்துக் காற்றிலே தூற்றிவிட்டார்
கண்ணில்மணல்விழுந்து கசங்கியேவள்ளுவனும்
கோபம்பெரிதாகிக் குணக்கேடாச்சொல்லிவிட்டான்
குடித்தவெறியாற் குணந்தப்பிச்சொல்லிவிட்டான்
பூவுதிரப்பிஞ்சுதிரப் பொருக்கெனவேமொட்டுதிரக்
காயும்பழமுங் கலந்துதிரவேணுமென்று
தினம்பிறப்பாராயிரம்பேர் தினமிறப்பாராயிரம்பேர்
கனமிகுதியேறுமற் றாரணிப்பாரங்குறைய
என்றேமதுகுடித்த வெறியாலிரங்காது
அடிஅடியென்று அடித்தான்பெருமுரசை
அப்படியேதானடித்து அவ்விடத்தைவிட்டேகிச்
சித்திரபுத்திரர்பாற் சென்றேயடிபணிந்தான்
அந்தக்கொடும்பறைகேட் டவ்விடத்திலுள்ளவர்கள்
எல்லோருமொன்றா யெமலோகம்போய்ப்புகுந்தார்
நல்லதர்மராசனையும் நற்கணக்குநாதரையும்
வந்துமிகப்பணிந்து வள்ளுவனங்குவந்து
மன்னவரேநீங்கள்சொன்ன மாற்றத்தைவிட்டுவிட்டுக்
கருக்குழியிற்பூமுதலுங் கருத்தரித்தபின்முதலும்
வடுப்பிஞ்சுகாயுதிர வென்றுரைத்தேவள்ளுவனும்

ஏற்றதொருபறையடித்தா ளெல்லோருந்தான்கேட்க
என்றுதொழுதுசொன்னு ரிருபேருந்தான்பார்த்து
அந்நேரமவர்களுக்கு அதிககோபமுண்டாகி
சொன்னமொழியொன்றிருக்கச் சொற்றவறியடித்தவ
கோபம்பெரிதாகிக் கூட்டிவரச்சொன்னுர்கள் [னைக்
வந்துமேவள்ளுவனு மலரடியைப்போற்றிசெய்ய
வாராய்நீவள்ளுவனே வாய்மதங்களேதுரைத்தாய்
அப்போதுவள்ளுவனு மடிபணிந்தங்கேதுரைப்பான்
இப்போதுவந்தகுறை யென்னுலேவந்ததல்ல
அரக்குமதுமர்காளி யம்மைமிகவார்த்தாள்
அரக்குவெறியால் முழக்கினேனம்முரசைப்
பிள்ளைகள்துர்ச்சனராற் பிழைகேடாய்சொல்லிவிட்டே
இந்தப்பிழையைப் பொறுத்தருளவேணுமையா [ன்
குடித்தவெறியாற் குணந்தப்பிச்சொல்லிவிட்டேன்
உள்ளமொழிசொன்னதெல்லாமுறுதியாமென்றுசொல்
மாயையதுசொன்ன வள்ளுவனைத்தான்பார்த்து [ல
சாராயந்தான்குடித்தான் தவறுவந்துவிட்டதினுல்
வள்ளுவனைச்சொல்ல வகையேதுமில்லையென்றுர்
பிள்ளைகளாலே பிழைகேடுவந்ததென்றுர்
வள்ளுவன்றுனென்செய்வான்மற்றபேரேதுசெய்வார்
வள்ளுவன்சொற்படியே மானிடவரெல்லோரும்
வாழ்வுபெறவேவாழ்ந்து மகிழ்ந்திருங்கள்புவிமீதில்
என்றேயமனுர் இன்பமாய்த்தானுரைத்தார்
பூலோகத்திலுள்ள புகழ்படைத்தமனிதரெல்லாம்
அவரவரிடத்தில் ஏகினுரப்போது
இருந்தாரிருவருந்தான் இரத்னமணிமண்டபத்தில்
மணிமுடியைத்தான்பூட்டி வண்மையுடன்தானிருந்து
பட்டோலைகள்தன்னைப் பரிந்துமிகவாசிக்க
அப்போதுசெட்டிச்சி யம்மையொருசீமாட்டி
அமராவதிபெருமாள் அன்னைபோல்காத்தளிப்பாள்
தர்மராசன்தேவி தான்செய்தபுண்ணியங்கள்
அழகியபுத்தகத்தில் அகப்படவேயப்போது
இயமனுர்தன்னிடத்தி லியல்பாகவாசித்தார்
இந்தவிபரம்இனிமேல்விளப்புகிறேன்
இந்தக்கதையைக்கேட்டவர்க ளிராசர்பதம்பெறுவார்
நன்றிப்பெருங்கதையை நாள்தோறும்படிப்பவர்கள்

பாடிப்படித்திடவே பக்தியுடன்கேட்டவர்கள்
நாடியெழுதினவர் நல்விரதந்தானெடுத்தோர்
பலமாகப்பெருஞ்செல்வம் படைத்துமேவாழ்ந்திருப் [பார்
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரூன்றி
மூங்கில்போல்சுற்றம் முகியாமல்வாழியவே.

சித்திரபுத்திர நாயனார்கதை முற்றிற்று.

ஓம்.

அமராவதிகதை.

செட்டியம்மையென்ற சீமாட்டிதன்கதையை
காரணத்தால்நான்பாடக் கணபதியேமுன்னருள்வாய்
தர்மராசாவின் தயவானதேவியென்பாள்
அமராவதியென்ற அழகானநற்பெயராள்
பூதலத்திற்செல்வம் பொருந்தமிகவுண்டாகி
மட்டில்லாச்செல்வம் வளர்ந்துமிகவுண்டாகி
அன்னைசுற்றத்துடனே யருள்பெறவேதான்வாழ்ந்து
முத்தொட்டில்கட்டி முடியவாழ்வுண்டாகித்
தருமங்கள்தானே தவறாமல்செய்துவந்தாள்
பாவங்களென்றுசற்றும் பக்கத்தில்கேட்டறியாள்
இந்தப்படியே யியல்புடனேதான்வாழ்ந்தாள்
நாயனார்தனிநோன்பு நாவிலெடுத்தறியாள்
கணக்கென்றசெய்தி களவிலுங்கேட்டறியாள்
முப்பாலுங்காய்ச்சி முடியாமல்வாழுகின்றாள்
சிவஸ்தலம்விஷ்ணுஸ்தலம் தரிசனஞ்செய்தறியாள்
சித்திரபுத்திரர்நோன்பு சிந்தையிலேவைத்தறியாள்
இவள்செய்திதன்னை இயல்கணக்கர்தாமறிந்து
எமதருமராசனிட மின்பமாய்த்தானுரைக்க
அவள்-தருமநற்கணக்கை யணுவளவுந்தப்பாமல்
கேட்டரியதருமருந்தான் கிருபையுடனேயிருந்து
அவள்செய்தபுண்ணியங்க ளடைவாகச்சொல்லுகிறார்
பட்டணமெல்லாம் பறைதட்டியாராய்ந்து
அன்னக்கொடிகட்டி யமுதுபடைத்திடுவாள்
அதிதிபரதேசியர்க்கும் ஆருமற்றார்தங்களுக்கும்

ஆராய்ந்துதேடி யமுதுமிகக்கொடுப்பாள்
அத்தாலங்கேட்டவர்க்கு அமுதுமேதான்கொடுப்பாள்
மகேசுரபூசைமுதல் மனமகிழ்ந்துசெய்திடுவாள்
கோடைக்குத்தண்ணீர் குளிர்ச்சிமிகவுண்டாக்கிப்
பானகம்நீர்மோர் பதிவாகச்செய்துவைத்து
சித்திரைமாதத்திற் செழிப்புடனே நற்குடையும்
விசிறியுந்தான்கொடுத்து வெப்பங்கள்தணித்திடுவாள்
கன்னிகாதானங் கருதிமுடித்துவைப்பாள்
வேதியர்க்குள்ளதெல்லாம் விரும்பியேகொடுத்திடுவாள்
ஆடையில்லாப்பேர்களுக்கு ஆடைமிகக்கொடுத்திடுவா [ள்
சனிவாரமெண்ணெய் தப்பாமல்கொடுத்துவந்தாள்
நந்தவனமுண்டாக்கி நற்பூக்கள்தான்பறித்து
ஆலயங்கள்தன்னி லடைவாகச்சாத்திவைப்பாள்
தூரத்துக்குத்தூரம் சுமைதாங்கிகட்டிவைப்பாள்
காதத்துக்குக்காதம் கற்கிணறுகட்டிவைப்பாள்
பிள்ளைபாற்றின்பண்டம் பெருக்கவேதான்கொடுப்பாள்
வெட்டுந்தலையைப் பொருள்கொடுத்துமீட்டிடுவாள்
வட்டியில்லாமற்கொடுத்து வாங்கிமிகவைத்திடுவாள்
வேந்தனுக்கஞ்சி விரும்பிவருவார்க்கு
தேறுதலைச்சொல்லி யடைக்கலங்கள்தான்கொடுப்பாள்
கன்னங்கள்குத்திக் களவுசெய்யவருபவர்க்கு
அஞ்சாதேபோவென்று ஆதரவுசொல்லிடுவாள்
ஏழைபரதேசியர்க்கு இல்லிடமும்கட்டிவைப்பாள்
இடிந்தமடமுதலாய் எடுத்துமேபுதிப்பித்துத்
பூப்பந்தல்போட்டுப் புதுக்கனிகள்தான்கொடுப்பாள்
அனுதிப்பிணத்தை யடக்கிவைப்பாள்கண்டீரே
ஆயிரங்கோட்டையரிசி அன்றைக்கன்றுசெலவிடுவாள்
அதற்கானகாய்கறியு மப்படியேதான்கொடுப்பாள்
சம்பாரஞ்சொல்லுவன தடையறவேதான்கொடுப்பாள்
இந்தப்படிதருமம் எள்ளளவுந்தப்பாமல்
செய்துமேதானுஞ் சிறப்பாகத்தானிருக்க
விரதமும்நோன்பும் விரும்பாதபாவியென்று
கணக்கருமங்கே கடுங்கோபமுண்டாகி
என்னதான்செய்தாலுமே ந்திழையாள்தன்னைவிடோம்
பூமிதனிலிருந்து பொருந்தியேவாழாமல்
அதற்கானபடிசெய்ய அழைப்பிக்கவேணுமென்று

கணக்கருக்குக்கைக்கூலி கட்டுவாருலகமதில்
இந்தவசனமதை எவ்வளவுமறியாமல்
இருந்தஅமராவதியை யிங்கழைக்கவேணுமென்று
ஏவினார் தூதுவரை யின்னமொருவார்த்தை
அவளுடையவாச லடையாளங்கேட்டீரோ
தென்னமரங்களுஞ் சேரவேசூழ்ந்துநிற்கும்
கப்பல்படவுமுதல் கரையருகேவந்துநிற்கும்
தீவுகளிலுள்ளவைகள் சேகரமாய்வந்துநிற்கும்
பசுக்களொருகோடி நிற்கும்பைங்கொடியாள்வாசலிலே
அதிதிபரதேசிக் கன்னம்வழங்கிடுவாள்
என்றுசொல்லிநற்கணக்கர் ஏவினார் தூதுவரை
அந்நேரம் தூதுவர்க்கு அதிககோபமுண்டாகி
இருப்புத்தடியுடனே யேற்றதோராயுதமும்
பாசக்கயிறும் பெருவலையும் தானெடுத்து
வந்துவளைந்தார்கள் மனையாட்டிவாசலிலே
வாசலிலேவந்துநின்று வலிமையெல்லாங்கண்டார்கள்
அதிதிபரதேசிகட்கு அன்னங்கொடுக்கிறதும்
கூனர்குருடர் குறைக்கால்முடவருக்கும்
ஆராய்ந்துபார்த்து அமுதுகொடுக்கிறதும்
தருமங்களெல்லாம் தயவுடனேசெய்கிறதும்
இத்தனையுங்கண்டு இயல்பான தூதுவர்கள்
அமராவதியாளை யழைத்துவரச்சொன்னார்கள்
இவளைநாமழைத்துப் போனோமேயாமாகில்
தருமங்களெல்லாந் தவிர்ந்துவிடுங்கண்டீரே
அன்னக்கொடிகளெல்லா மலைந்துவிடுங்கண்டீரே
என்றுசொல்லித்தூதுவர்கள் ஏங்கிமனங்கலங்கி
கையில்தடியை கடக்கவேபோட்டுவிட்டு
நின்றுபெருமூச்சும் நெடுமூச்சும்தானெறிந்தார்
அந்நேரமோடிவந்தாள் அமராவதியாளும்
கண்டாளே தூதுவரைக் கலங்கியிருக்கிறதை
அமராவதியவள் அவர்முகத்தைத்தான்பார்த்து
வாருங்கள்மக்களே பயங்கியிருப்பானேன்
இத்தனைநேரமட்டும் இளைப்பாயிருந்தீரே
அடியாள்தன்பேரில் அபராதமுண்டுகண்டீர்
என்றுசொல்லியிங்கிருந்து இனியமுதுகொள்ளுமென்
இந்நேரம்நாங்கள் இனியமுதுகொள்வதில்லை [ருள்

என்றுசொல்லித்தூதுவர்க ளிருந்துவிசாரமுற
வாருங்கள்மக்களே வருந்திமெலிவானேன்
கன்னமிடவந்தீரோ களவுசெய்யவந்தீரோ
வேந்தனுக்கஞ்சி வேண்டிதான்வந்தீரோ
தாய்க்குத்தாயாகி நானிருக்கவுங்களுக்கு
உண்டிருக்கஅன்னமுநல் உடுமடியும்நான்தருவேன்
அஞ்சாமல்நீங்க ளின்னமுதம்தான்புசிக்க
வாருங்களென்று வருந்திமிகவழைக்க
இவ்விடத்தில்யாமமுது புசித்தோமேயாகில்
எங்கள்நாயனுர் எழுதுவார்பட்டோலை
ஆனதினுல்நாங்க ளமுதுபுசிப்பதில்லை
இருந்தராசாளுமென்று யேகினுர் தூதுவர்கள்
வந்துகணக்கர் மலரடியைத்தெண்டனிட்டு
சித்திரபுத்திரரே சீமானேகேளுமையா
செட்டிச்சியாலெங்களைத் தீக்குழிவிற்போட்டாலும்
செட்டிச்சியை நாங்கள் தீண்டோமொருநாளும்
என்றுசொல்லக்கணக்க ரிருகண்ணுந்தான்சிவக்க
உங்களையுண்ண உபசாரஞ்சொன்னுளோ
மற்றுமொருதூதுவரை வரவழைத்தேதுசொல்வார்
அமராவதியொருத்தி ஆனதர்மஞ்செய்துகொண்டு
என்னேன்புகொண்டு என்றனையும்நினையாமல்
பூதலத்திற்செல்வம் புகழ்பெறவேதானி
தனிக்குறும்புசெய்துகொண்டு தரணியிலிருப்பவளை
இந்நேரமிங்கே யழைத்துவாவென்றுசொன்னுர்
என்றுசொல்லித்தூதுவரை யியல்பாகத்தானனுப்ப
அந்நேரந்தூதுவர்க்கு அதிககோபமுண்டாகி
இருப்புத்தடியெடுத்தார் ஏற்றதொருகிங்கிலியர்
வந்துவளைத்தார்கள் வாழ்வரசிவாசலிலே
நந்வவனம்வைத்து நறும்பூப்பறிக்கிறதும்
அன்னங்கொடுத்து ஆதரவுசொல்லுவதும்
சத்திரங்கள்கட்டித் தயவாய்நடக்கிறதும்
தருமங்களெல்லாம் தவருமல்செய்கிறதும்
கண்டார்கள்கிங்கிலியர் கவலைமெத்தவுண்டாகி
கையிற்றடியைக் கடக்கவேவிட்டெறிந்தார்
தலையிலேகையைவைத்துச் சலிப்பாயிருக்கையிலே
அந்நேரம்அங்குவந்தாள் அமராவதியாளும்

வாருங்கள்மக்களே வாடியிருப்பானேன்
அமுதுகொள்ளவாருமென் றழைத்தாளேயப்போது
பானகம்வாங்கிப் பசியாறக்குடித்தார்கள்
இப்போதிவளை யழைத்துமேபோனுக்கால்
தருமங்களெல்லாந் தவறிவிடுமென்றுசொல்லி
ஏதுகுறையென்று ஏகினூர்கிங்கிலியர்
சித்திரபுத்திரரே சீமானேகேளுமையா
எங்களையும்நீங்கள் என்னபழிசெய்தாலும்
செட்டிச்சியைக்கூட்டி வரமாட்டோமென்றுசொன்னூர்
அந்நேரமக்கணக்கர்க் கதிககோபமுண்டாகி
உங்களுக்குக்கைக்கூடி காட்டினுளுதாரி
பானகம்வாங்கிப் பதிவாய்க்குடித்தீர்கள்
இதற்கோஅனுப்பிவைத்தே னென்றுரேயுத்தமனூர்
அதையுங்கணக்கெழுதிக் கொண்டாரேயுத்தமனூர்
சினந்துமிகவுரைத்துச் சீறியேயப்போது
மற்றுமொருதூதுவரை வரவழைத்தாரந்நேரம்
பெற்றதாயைக்கொன்ற பெரும்பாவிமொட்டையனைக்
கொண்டகணவனைக் கொன்றகொலைப்பிராமணியை
இவர்கள்தமையழைத்து யேவினூர்நற்கணக்கர்
அரைநாழிகைப்பொழுதிலழைத்தோடிவாருமென்றூர்
ஆயுதங்கள்தானெடுத்து அடைந்தாரிருவருந்தான்
வந்துதலைப்பட்டார்கள் வாழ்வரசிவாசலிலே
மனையிலொருபுறத்தே மறைவாயிருந்தார்கள்
தானதருமங்கள் தயவாய்நடக்கிறதை
இத்தனையுங்கண்டு எடுத்துரைத்தான்மொட்டையனும்
இவளெத்தனைதரும மினிதாகச்செய்தாலும்
நாயனுருரைப்படியே நான்விடுவதில்லையென்றுன்
என்றுசொல்லிமொட்டையனு மிருகண்ணுந்தான்சீற
அந்நேரமேதானும் அமராவதியாளும்
தீர்த்தமுமாடித் தெருவீதிவருகையிலே
பூனையாய்வந்து குறுக்கிட்டான்மொட்டையனும்
அப்போதுசெட்டிச்சி யதிகக்கவலையுற்று
துக்கமுமுண்டாகத் துடிக்கதேவலதுகண்ணும்
மயக்கம்பிறந்து மதிமறந்துஅந்நேரம்
ஏதோகொடுமை யினிக்கேட்கவேணுமென்று
பூனைகுறுக்கிடுதல் போந்தகூறல்லவென்று

தருமங்கள்செய்வதிலே தப்பிதமுண்டாச்சோ
என்றுசொல்லியம்மை யேற்றதொருபாத்திரத்தில்
அமுதுகறிகளை யப்போதுதானெடுத்துச்
செய்யவேண்டியதைமுடித்து தெருவெல்லாந்தான் திரிந்து
ஆராய்ந்துதேடி யமுதுகொடுத்திடவே
திட்டசட்டமாகச் செய்தாளந்நேரம்
ஒன்றுந்தவறுமல் உள்ளபடியே நடத்தி
வந்தாளரண்மனையில் வாழ்வரசிதானுமப்போ
இருக்கும்பதியில் இயல்பாகத்தானிருந்து
பேத்திமார்பாட்டிமார் பிரியமுடனேயிருக்கப்
பாலோடுநெய்யும் பதிவாயமுதருந்திச்
சாந்துபுனுகுஞ் சவ்வாதுமுதல்தானணிந்து
புஷ்பாதிகளெல்லாம் போதவேதான்சூடிச்
சந்தோஷமாகவே தானிருக்கும்வேளையிலே
கொல்லவந்தகூற்றுவனும் கோலப்பிராமணியும்
அவ்வேளைதான்பார்த்து அவள்நடையில்வந்தார்கள்
வாசற்படியில் வந்துநின்றுளந்நேரம்
கண்டவமராதியாளும் கர்மமோவென்றுசொல்லி
இத்தனைநேரமட்டும் இளைப்பாயிருந்தீரோ
இருபேரும்நீங்கள் இனியமுதுகொள்ளுமென்றுள்
சத்திரத்தில்வாருமென்று தான்விரும்பிச்சொன்னுளே
அப்போதுகூற்றுவனு மானபிராமணியும்
இந்நேரம்நாங்கள் அமுதுகொள்வதில்லையெனப்
பலகாரம்நான்தருவேன் பதிலாகக்கொள்ளுமென்றுள்
பலகாரம்நாங்கள் புசிப்பதில்லையென்றுர்கள்
எதின்பேரிலிச்சையென்று ஏந்திழையாள்தான்கேட்க
பாலின்மேலாசையென்றுள் பிராமணியுமப்போது
பாலும்பழமும் பரிவாகக்கொண்டுவந்தாள்
காய்ச்சினபால்நாங்கள் கண்ணுரக்கொள்வதில்லை
கண்காணப்பால்தான் கறந்துவரவேணுமென்றுள்
இதுவுமொருசோதனையோ வென்றுமனதிலெண்ணி
ஆறுற்கறந்து அடைவாகத்தருவேனென்றுள்
அணைகயிறுங்கடைகாலும் அன்பாகத்தானெடுத்து
காராவினண்டையிலே காரிகையாள்தான்வரவே
கொல்லவந்தகூற்றுவனும் குடுகுடெனவோடிவந்து
கொம்புதனிலேறிக் கொற்றவனுந்தானிருக்க

அணைவதற்கென்றுதானும் அமராவதிவரவே
அப்போதுபசுவுக் கதிககோபமுண்டாக
காடிகழுநீர் கலந்துவைப்பதில்லையென்று
வைக்கோல்பிடுங்கி வாரியேவைக்கையிலே
குத்தியெடுக்கக் கூறியகொம்பதனால்
இருந்தாள் அமரா வதியுமிகக்கலங்கி
கதறத்தொடுத்தாளே காரிகையாளந்நேரம்
ஏங்கிப்பழுதாள் எமலோகந்தானறிய
தருமங்கள்செய்ததிலே தான்கேடுவந்ததுண்டோ
பொல்லாதகாலமாய்ப் பூனைகுறுக்கிடவும்
துர்க்குறிகள்காட்டினதுஞ் சோதனையுமுண்டாச்சு
ஏதுகுறைகளுண்டோ எனைமோவென்றுசொல்லி
எண்ணுதவெண்ணி யேங்கியுயிர்பிரிந்தாள்
கொல்லவந்தகூற்றுவனும் கோலப்பிராமணியும்
பாசக்கயிறும் பருவலையுந்தானெடுத்து
கட்டினாரப்போது கண்மண்டைதான்பிதுங்க
இறுப்புத்தடியால் இரக்கமற்றுத்தானடித்துப்
பாப்பாத்திக்கள்ளியவள் பாசக்கயிறுபிடிக்க
அடித்தானேகூற்றுவனும் அமராவதியாளைக்
காமவல்லியென்றுமொரு காற்றுவந்துவீசிடவே
ஆகாயமின்னொளியு மதிககோபத்தோடுவர
இருப்புதடிமுறிந்து இரக்கமுற்றுத்தான்விழவே
பாசகயிறும் பருவலையுந்தான்தெறிக்க
அப்போதுகூற்றுவனு மானபிராமணியுந்
திடுக்கிட்டுநின்று தடுமாறியந்நேரம்
இத்தனைக்குந்தருமங்கள் இனிதாகச்செய்தாளே
இவளை நாம்விட்டால் இயல்கணக்கரேதுசொல்வார்
கோபித்துக்கண்சிவந்துகொலைக்கழுவிற்போட்டிடுவார்
எப்படியுந்தானிவளைக் கொண்டுமேபோகவென்று
இருபேருமாக நினைந்துமேதாமுணர்ந்து
வலைக்கயிறுதானெடுத்து வரியவேதான்பூட்டிக்
கட்டியிழுத்தார்கள் காரிகையையந்நேரம்
கொண்டுவந்துவிட்டார்கள் கொற்றவர்முன்பாகச்
சித்திரபுத்திரருஞ் சீறியேயேதுசொல்வார்
தருமத்தைதானே தயவாய்நினைத்தாயே
என்றுசொல்லிநற்கணக்கர் இருகண்ணுந்தான்சிவக்க

காட்டிக்கொடுத்தாரே கடுந்தூதர்கிட்டவுந்தான்
பின்கட்டாய்க்கட்டிப் பிடரியிலேகுத்துமென்றூர்
செப்புத்தூணோடே சேரவேகட்டுமென்றூர்
நாராசங்காச்சி நடுசெவியில்ஊற்றுமென்றூர்
உச்சிதனிலாணி யோங்கியடியுமென்றூர்
அமராவதிக்கு அதிககோபமுண்டாகி
தண்ணீர்தவிக்குதென்றூள் தாமக்குழலாளும்
சித்திரபுத்திரனூர் சீமானூர்தான்கேட்டு
செம்பையுருக்கித் தெளியவைத்துக்கொடுங்களென்றூர்
அந்தப்படிஅவர்கள்செய்ய அமராவதியாளும்
பானகமென்று பதிவாகத்தான்குடித்தாள்
இதையுமறிந்தாரே யியல்பான நற்கணக்கர்
மழுவையும்காச்சி வைக்கவேசொன்னூர்காண்
சந்தனச்சேருகத் தான்குளிர்ச்சியானதுவே
அப்போதொருகாற்று அவனிதனில்வந்தடித்துக்
கயிறுதெரித்துக் கடுதூரந்தான்விழவே
கணக்கருமப்போது கடுங்கோபமுண்டாகி
மூந்நூறுகாத மகலமுள்ளகாட்டூடே
கல்லுங்கறடுங் காரமுள்ளுந்தான்படவே
கட்டியிழுங்களென்றூர் கண்விழிகள்தான்பிதுங்க
இந்தப்படிநாடெங்கும் இழுக்கலுற்றூர்தூதுவர்கள்
அந்நேரங்காட்டு அதிசயங்களுண்டாச்சு
பொல்லாதகாடெல்லாம் பூங்காவனமாச்சு
புட்பங்கள்தான்சொரியப் பூஞ்சோலையுண்டாச்சு
சாந்துபுனுகு சவ்வாதுமணந்தான்வீச
தாமரைத்தடாகங்கள் தானுமேயுண்டாகி
இந்திரலோகம்போ லிருந்தாளேபெண்கொடியும்
வாசம்பொருந்தியே மனமகிழ்ந்துதானிருந்தாள்
தருமங்களானதெல்லாம் தற்காத்துநின்றனவே
வந்தகாற்றுக்கூடக் கயிறுந்தெரித்ததுவே
ஓடிவந்ததூதர் உரைத்தார்கணக்கருக்கு
பொல்லாதகாடெல்லாம் பூங்காவனமாச்சு
ஆனையைக்கட்டுங் கயிறுமறுந்ததென்றூர்
இத்தனையுங்கேட்டு இயற்கணக்கரந்நேரம்
செப்புத்தூணட்டி சிறுக்கவேதான்காய்ச்சி
செப்புத்தூணோடே சேர்த்துஇருக்குமென்றூர்

கொல்லரைக்கூட்டிவந்து குறடுகள்தான்காய்ச்சி
காய்ச்சிப்பிடுங்கவே கம்மாளர்வந்துநிற்க
அமராவதியு மபயமிடத்தொடுத்தாள்
கண்கள்தெரித்துவிழக் கன்னத்திற்போடுமென்றார்
தண்ணீர்தவிக்குதென்றாள் தாமக்குழலாளும்
ஈயத்தைக்காய்ச்சி யிதம்பெறவேதான்கொடுத்தார்
பன்னீர்சலமாகப் பாங்குடனேதான்குடித்தாள்
அத்தையும்அறிந்தார்காண் ஆனதொருநற்கணக்கர்
இருப்புலக்கையாலே யடியென்றுருத்தமனூர்
அந்நேரஞ்செட்டிச்சி யானைபோல்வீறிடவே
வீறிட்டசத்தம் விமலனூர்தாமறிந்து
சிருட்டித்தாரந்நேரஞ் செட்டிச்சிநோகாமல்
மின்னுமழையு மிகவேதானுண்டாகி
காற்றும்புயலுங் கனமாகிவந்திடவே
செப்புத்தூணெல்லாஞ் சேரக்குளிர்ந்ததுவே
கொல்லர்குறடுங் குளிர்ச்சிகளானதுவே
தாமக்குழலாளுந் தற்சொரூபமாயிருந்தாள்
இன்னமொருவுபாய மெடுத்தாரேயுத்தமனூர்
அரையளவுகுழிகள் ஆழமாய்வெட்டியதில்
செட்டியம்மைதன்னைச் சீராகத்தானிறுத்தி
கைகள்தனைப்பின்னிக் கட்டாகத்தானிறுக்கி
உச்சிமயிரை யொருமிக்கத்தான்வகிர்த்து
மூன்றுதிசைமரத்தில் மூன்றுவகையாய்முடித்து
ஆனைதனைக்கொண்டிடறயடித்துவிடுமென்றுரைத்தார்
இந்தமொழிகேட்டுடனே யேங்கினாள்பைங்கொடியும்
அப்போதுதூதுவர்கள் அதுசெய்யவந்தவுடன்
தருமங்கள்செய்ததெல்லாந் தழைத்துமிகவோடிவந்து
காற்றும்புயலுங் கடுகனவேதானடித்து
எல்லாரையுந்தூக்கி யெறிந்ததேபூமியிலே
அதையுமறிந்தார்கள் ஆனதொருநற்கணக்கர்
அட்டைக்குளத்தி லழுந்தவேதள்ளுமென்றார்
தாமரைத்தடாகமாய்த் தானுமேயுண்டாச்சு
அட்டைக்குளத்தி லழுந்திநிற்கும்பாவிகளும்
செட்டிச்சியாலே சிவலோகஞ்சேர்ந்தார்கள்
வாசம்பொருந்தி மணந்ததேயக்குளமும்
செக்கிலேபோட்டுத் திருகுமென்றாராயிழையை

வாணியரைக்கூட்டிவந்து வடங்களுந்தான்முறுக்க
அந்தச்சமயத்தில் அங்கொருவரில்லாமல்
தாயில்லாப்பிள்ளை நின்று தவிக்கிறதைக்கண்டாளே
பிள்ளைகளையெடுத்துப் புழுதியெல்லாம் துடைத்து
கண்ணீர் துடைத்துக் கடுகவனுப்பினளே
ஆதரவுசொல்லி யனுப்பினள் பிள்ளைதனை
உடனேவடமுறுக்கி யோடிவந்தார் வாணியருஞ்
செட்டிச்சியம்மைதனைச் செக்கிலேதான்போட்டு
ஆட்டவேணுமென்று அங்குவந்தாரந்நேரம்
செட்டிச்சியப்போ சிவனை நினைந்தழுதாள்
அப்போதொருகாற்று அவனிதனிலுண்டாகி
செக்குந்தகர்ந்தவுடன் செக்குலக்கைதான்முறிந்து
ஓடியேதூதுவர்க ளொருவருமேகாணமல்
அந்நேரம்வாணியர்கள் அதுசெய்திகண்டவுடன்
வந்துமேசொல்லுகிறார் வாய்த்தகணக்கருடன்
ஆகாசக்காற்று அதிகோபமாகவந்து
செக்குத்தகர்ந்து செக்குலக்கைதான்முறிய
ஓடினர் தூதுவர்க ளொருவருமேதான்காணோம்
அமராவதியாளு மன்னம்போலவேயிருந்தாள்
கணக்கரிதைகேட்டவுன் கண்களிரண்டுஞ்சிவந்து
அமராவதியாளை யழிநரகில்தள்ளுமென்றார்
நரகத்தைக்கண்டாளே நல்லதொருமாதும்
நரகத்திலேகிடந்த பாவியர்களெல்லோரும்
செட்டிச்சிபார்த்தவுடன் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
நரகக்குழிகளெல்லாம் நல்லகுழியாயினதே
அதையுமறிந்தாரே ஆனதொருநற்கணக்கர்
எண்ணெயும்பிண்ணாக்கும் எடுக்கவென்றாரவள் தலையில்
விற்றுவரச்சொல்லி விடைகொடுத்தாரந்நேரம்
அந்நேரந்தூதுவர்கள் அவள் தலையிற்றானெடுத்து
ஏழுதெருவும் இயல்புடனேகூறிடவே
கொள்ளுவாருமில்லைக் கூப்பிடுவார்தானுமில்லை
பட்டணத்துள்ள பலபேர்களெல்லோரும்
புண்ணியரைச்சற்றும் புகழ்ந்தறியாப்பாவியிடம்
எண்ணெயும்புண்ணாக்கு மினிவாங்கக்காலமென்று
செட்டிச்சியைக்கண்டவுடன் தெருக்கதவைத்தானடை
தெருவுகளெல்லாம் சேரவேதான்சுமந்து [த்தார்

கழுத்துத்தெறிக்கக் கண்உண்டை தான்பிதுங்க
அமராவதியாளும் அநியாயமென்றழுதாள்
ஐயையோதெய்வமே அரும்பாவஞ்செய்தேனே
இந்தவிதிகளெல்லாம் எனக்கேன்வரவேணும்
விதியைநினைத்தந்தணர் வீதியில்வந்தவுடன்
அதிலொருபிராமணியும் அந்நேரமோடிவந்து
எண்ணெயும்பிண்ணாக்கு மிறக்குமென்ருளப்போது
அந்தக்ஷணமே யிறக்கினுளப்போது
தண்ணீர்தவிக்குதென்ருள் தாமக்குழலாளும்
நீர்மோர்பெருக்கி நிறையவேகொண்டுவந்தாள்
கொண்டுவந்தநீர்மோரைக் குடித்தாள்வயிறுமுட்ட
தாகந்தெளிந்து களைதீர்ந்தாள்செட்டிச்சி
பிராமணியுமப்போ பெருத்தமொழியுரைத்தாள்
அமராவதியாள் அருகிருந்துகேட்கலுற்ருள்
அன்னமேதேனே யமராவதியாளே
நீயெத்தனைதருமம் நிலையாகச்செய்தாலும்
சித்திரபுத்திரரைச் சிந்தையில்வையாமல்
புண்ணியவானென்று புத்திதனில்வையாமல்
யமதருமர்வாசலிலே யிருந்துகணக்கெழுதப்
பசுவின்வயிற்றில் பாலகனுய்வந்தவரை
அவரைநினையாமல் அனியாயம்போனதென்ன
தருமங்களெல்லாம் தவிடுபொடியாக்கிடுவார்
அண்டபுவனமெல்லா மறிந்துகணக்கெழுதும்
புண்ணியனூர்வந்து பிறந்ததறியாயோ
இத்தனைபாடுமட்டும் எள்ளளவும்புத்தியில்லை
அவரைநினையாமல் அவதிமிகப்பட்டாயே
அவர்நோன்பிருக்க அறிவிக்கவேணுமென்று
உன்னுலேதானும் மூலமெங்கும்தானறிய
கூட்டிவந்தேயுன்றனைக் கோரணிகள்செய்கின்ருர்
என்றேபிராமணியும் எடுத்துரைத்தாளந்நேரம்
அமராவதியாட்கும் அறிவுமிகவுண்டாகி
சித்திரபுத்திராதி சிவனார்பெருங்கணக்கர்
பாவங்கள்புண்ணியங்கள் பகுத்தெழுதவந்தவரே
காணுதகாட்சியெல்லாங் காட்டிவைத்தார்சீமானும்
அவரைநினையாம லல்லலெல்லாம்பட்டேனே
அறியாமல்நானும் அவதியுற்றேனென்றுசொல்லி

மண்ணில்விழுந்து மலரடியைத்தெண்டனிட்டு
அறிவெனக்குவந்ததைடா ஆனதொருபாலகரே
செய்தபிழைபொறுப்பீரென்றுசொல்லித்தெண்டனிட்
கணக்கருக்கப்போது கருணைமிகவுண்டாகி [டாள்
சித்தந்திரும்பித் திருவாய்மலர்ந்தருளி
மெத்தமனமகிழ்ந்து வேகமெல்லாந்தான்தணிந்து
என்னை நினைந்ததினால் இனிவருமெப்பிறப்பும் [ல்லி
இவளுக்குநற்பலனும் இனிக்கொடுப்போமென்றுசொ
ஸ்நானங்கள்பண்ணிவரத் தாயேயனுப்பினர்காண்
ஸ்நானங்கள்செய்து தவக்குறையுந்தான்முடித்து
சிவனை நினைந்து திருநீறுந்தானணிந்து
சித்திரபுத்திரரே சீமானேயென்றுசொல்லி
கணக்கரிடத்திலே காரிகையாள்வந்துநின்றாள்
அந்நேரமுங்கணக்கர் ஆனையைவரவழைத்து
திருமஞ்சனங்கொண்டுவந்துசிறக்கவேதான்சொரிந்து
பட்டுமுதலுள்ளதெல்லாம்பண்பாகத்தான்கொடுத்தார்
ஆபரணமெல்லா மழகாகத்தான்கொடுத்தார்
எல்லாப்பழமு மினிமையாய்த்தான்கொடுத்தார்
அந்நேரமேதானும் அமராவதியாளும்
தருமத்தையெல்லாம் தவறாமல்செய்திடவும்
என்னையிழுத்துவந்து இடறுகள்செய்வானேன்
வகைவிபரமாக வசனிக்கவேணுமென்றாள்
அப்போதுநற்கணக்கர் அறிவித்தாருத்தமிக்கு
உன்னாலேயென்பே ருலகமெல்லாமுத்தமிக்கு
செய்துவைத்தேனுத்தமியே செய்தபிழைபொறுப்பாய்
என்னாலென்பிருந்தவர்கள் இகபரங்கள்தானடைவார்
இந்தவிரதம் எடுக்காமற்போனவர்கள்
நீபட்டதண்டனைகள் நிலையாகத்தானடக்கும்
அப்படிக்குவாராமல் உன்னையழைத்துவந்தோம்
என்னாலேமோட்ச மடையவென்றேயுன்னை நான்
கூட்டிவந்ததென்றவுடன் கொம்பனையாள்கேட்டிடு
அறிவித்தால்நானுமப்படியேநடப்பேனெனச் [வாள்
சொல்லுகிறேன்கேளாய் சுகமானவென்பிறப்பே
சித்திரைமாதம் பதினெட்டாந்தேதியிலே
சித்திரைக்குச்சித்திரையில் சீராய்பவுரணையில்
பூதலத்திலுள்ள புகழ்ந்தமலுைச்செந்துவெல்லாம்

ஆண்பெண்ணுடனே அடைவாகநோன்பிருந்து
ஆறுகுளத்திலே அன்பாகத்தான்முழுகி
திருநீறணிந்து சிவனைமிகவணங்கி
சூரியநமஸ்காரம் தொழுதுமிகவணங்கி
புதுப்பணிகளெல்லாம் பூட்டியலங்கரித்து
சாந்தாற்றரைமெழுகிச் சந்தனத்தாற்கோலமிட்டு
வாழைக்கரும்பு வான்கமுகுதானிறுத்தி
பழக்குலைகளாலே பாங்காயலங்கரித்து
மஞ்சள்குலையும் மாங்குலையுந்தான் தூக்கி
பலகைதனைப்போட்டுப் பாவாடைமேல்விரித்து
வேழமுகத்து விநாயகனைமுன்புவைத்து
பூரணகும்பம்வைத்துப் பொன்னின்விளக்கேற்றி
நிறைநாழிவைத்து நிறைமரக்கால்தானும்வைத்து
அடைக்காயும்வெள்ளிலையும் அன்புடனேதான்படைத்
கடலைதுவரைமுதல் காராமணிப்பயறும் [து
பயறுவகையுள்ளதெல்லாம்பாங்குடனேதான்படைத்
பலகாரவகைகள் பாங்காகச்செய்துவைத்து
பருப்பரிசிபானகம் பாங்குடனேதானும்
பொன்னினெழுத்தாணியுடன் புத்தகமுங்கூடவைத்து
உப்புமுதற்கற்பூர முள்ளதெல்லாந்தான்படைத்து
எள்ளுபருத்தி யேற்றதொருபுத்துகளும்
இத்தனையும்நன்று யியல்பாகவைத்தபின்பு
புதுப்பானைதன்னிலே பொங்கலிட்டுக்கீழிறக்கி
திருக்கண்ணமுதுஞ் சேகரமாய்வைத்திறக்கி
புத்துருக்குநெய்யும் பொரிக்கறியும்பாற்குழம்பும்
கறிவகைகளுள்ளதெல்லாம் கட்டாகத்தான்படைத்து
தயிருமுறைத்துவைத்துச் சகலகறிவர்க்கமுடன்
நேமநிட்டையாக நைவேத்தியஞ்செய்து
அரகராவென்று அடிபணிந்துதெண்டனிட்டு
தூபம்புகைகாட்டித் தோத்திரங்கள்செய்துநன்றாய்
சூடன்பணிமாறிச் சூழக்குரவையிட்டு
வாத்தியங்களெல்லாம் வகைவகையாய்த்தான்முழங்க
ஆண்டவரேயென்று அடிபணிந்துதெண்டனிட்டு
ஆசாரியார்தன்னை யன்புடனேகூட்டிவந்து
கட்டாகநன்றாய்க் கதைகள்படிக்கவைத்து
இன்பமாய்த்தானிருந்து இக்கதையைத்தான்கேட்டு

கேட்டுமுடிந்தபின்பு கிருபைவரத்தெண்டனிட்டு
இப்படிநோன்பு இயல்பாயிருந்தவர்க்கும்
இந்தக்கதையை யெழுதிப்படித்தோர்க்கும்
எல்லாப்பதமுங் கொடுப்போம்நாமேந்திழையே
புத்திரசம்பத்தும் புண்ணியமுமுண்டாகும்
மங்கிலியம்வாழ்ந்து மக்கள்தழைத்திருப்பார்
இந்தப்படிநோன்பு எல்லோருந்தானிருக்க
பூலோகமெல்லாம் புகழ்ந்துபறைசாற்றிடென்று
இந்தப்படிகணக்க ரியல்பாயுரைத்திடவே
நாயனுருரைத்தபடி நன்ருய்க்கருத்தில்வைத்து
தப்பாமல்நோன்பிருந்து தவம்பெறுவோமுத்தமரே
சித்திரபுத்திரரே சீமானே நீர்கேளீர்
உயிரோடேசொர்க்கம் வரவழைத்துக்கொண்டாக்கால்
இப்போதேயென்னை யிங்கேவரவழைத்தால்
என்தர்மமெல்லாந் தவிர்ந்துவிடுமென்றுசொல்ல
சித்திரபுத்திரர்க்குச் சிந்தைமிகவுண்டாகி
பூலோகத்திற்போய் பொருந்தவேவாழ்ந்து
தருமங்களெல்லாம் தப்பாமற்செய்யவும்
போகவிடைகொடுப்போம் பொற்கொடியேகேளென்ரு
நூறுவயதிருப்பாய் நூருண்டுசென்றபின்பு [ர்
உன்னையும்நானு முடனழைத்துக்கொள்ளுகிறேன்
ஆனதினல் நீயு மாக்கையழியுமுன்னே
பூந்தேரிலேறிப் போய்வாருமென்றுசொல்லி
அப்படியேதேரேறி அமராவதிவருமுன்
அங்குநடக்கு மதிசயத்தைக்கேளுமினி
சூரியகோப்பதினல் கொன்றப்பசுத்தானும்
இரையுமருந்தாமல் இனத்தோடுங்கூடாமல்
கண்ணீரொழுகிக் கதறுதேநற்பசுவும்
அமராவதியாளென் அன்னையிறந்தாளென்று
ஊராருறவுள்ளா ருற்ருர்கள்தான்கூடி
கூப்பிட்டழுது கோவிந்தாவென்றிடவே
ஆண்டிபரதேசி அனியாயமென்பதுவே
அமராவதிகூட்டை யன்பாகத்தானெடுத்து
செய்யுஞ்சடங்குகளைச் சீக்கிரமாய்த்தான்முடித்து
மஞ்சளையும்பூசி மலர்களுந்தான்சூட்டி
பட்டுமுடுத்திப் பாவாடைமேற்போட்டு

மாலைகழுத்திலிட்டு மருக்கொழுந்துதானணிந்தார்
பூந்தேருங்கட்டிப்புட்பமலங்கரித்து
வாத்தியங்களெல்லாம் வரிசையாய்த்தான்முழங்கி
குரவைதனைமுழங்கிக் கோவிந்தாவென்றுசொல்லி
அமராவதிகூட்டை யானதொரு பூந்தேரில்
வைத்துமேதானெடுத்து வானமெல்லாந்தான்முழங்கி
மயானக்கரையில் வகைவகையாய்ப்பந்தலிட்டு
சந்தனக்கட்டை சதிராகத்தானடுக்கி
கருமங்கள்செய்தார்கள் காரிகைக்குமப்போது
கொள்ளிகைள்வைத்துக் குடமுமுடைத்தார்கள்
இப்படியாகயிருக்குந்தருவாயில்
வாய்க்கரிசிபோட்டார்கள் வந்தவர்களெல்லோரும்
அமராவதியாளை அனுப்பிஞரந்நேரம்
மயானத்துறைக்கு வந்தாளேதேரோடும்
கட்டையிலேயிட்ட கனத்தவுடல்புகுந்தவுடன்
செட்டிச்சியார்தனக்குச் சீவன்பிறந்ததுவே
நித்திரைதெளிந்ததுபோல் நினைவுமிகவுண்டாகி
சிவசிவாவென்று சிவனைமிகத்தொழுதாள்
திசைநோக்கித்தானும் தெண்டனிட்டாளுத்தமியும்
நன்மையுந்தின்மையும் நடுவெழுதவந்தவரே
காணுதகாட்சியெல்லாம் காட்டிவைத்தசீமானே
படாதபாடெல்லாம் படுத்திவைத்தீர்சீமானே
இப்படிநினைந்து ஏகிஞளுத்தமியும்
அடுக்கினகட்டையெல்லாம் ஆல்போல்தழைத்திடவே
அமராவதியாள் அகத்திலேவந்தவுடன்
உற்ருர்வுறவுடையார் ஊராரைக்கூட்டிவந்து
போசனம்பண்ணுவித்துப் போகவிடைகொடுத்தாள்
தருமங்களெல்லாந் தப்பாமல்செய்திடுவாள்
நாயனர்தம்நோன்பு நன்ருயிருக்கவென்று
நாயனர்தம்மிடத்தில் தானுமிகப்பயந்து
ஸ்திரீபுருஷாள்தானுஞ் சிறக்கவேநோன்பிருந்தார்
சித்திரைமாதம் பதினெட்டாந்தேதியிலே
சித்திரைக்குச்சித்திரையிற் சீரார்பவுரணையில்
பறையோசைகேட்டுப் பதம்பெற்ருேமென்றுசொல்லி
பூலோகத்திலுள்ளே புகழ்ந்துமனுஷரெல்லாம்
நாயனர்திருநோன்பு நன்ருகத்தானிருங்கள்

என்றுசொல்லிவள்ளுவனும் எடுத்துப்பறைசாற்றிட
பலகைதனைப்போட்டுப் பாவாடைமேல்விரித்துப் [வே
நிறைநாழிவைத்து நிறைமரக்கால்தானும்வைத்து
தேங்காய்ப்பழமுஞ் சிறக்கவேதானும்வைத்து
சர்க்கரையெள்ளுருண்டை சகலபதார்த்தமுடன்
பருப்பரிசிபானகம் பாங்குடனே தான்படைத்து
கறிவகைகளுள்ளதெல்லாம்கட்டாகத்தான்படைத்துப்
பொங்கலுமிட்டுப் போதமிகப்படைத்து
திருக்கண்ணமுதுஞ் சேகரமாய்த்தானும்வைத்துப்
புத்துருக்குநெய்யும் போதவேதான்படைத்துப்
தூபதீபங்காட்டித் தோத்திரங்கள்தான்செய்து
தெண்டனிட்டுத்தான்பணிந்து திருநீறுந்தானணிந்து
ஏங்கப்பரதவித்து இருக்குந்தருவாயில்
உத்தமனார்தாமு முடனேயறிந்தார்காண்
இதற்கென்னசெய்வோமென்று ஏற்றபடி நினைத்தார்
பார்வதியாளிடத்திற் பண்பாகச்சொல்லவென்று
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகத்தான்பார்த்து
என்தன்பிறப்புவளர்ப்பு எல்லோருந்தாமறிய
என்னோன்புநல்விரதம் எல்லோருந்தாமிருக்க
வேணுமென்று நினைந்து மேன்மையுள்ளசெட்டிச்சி
அமராவதியாளை யன்புடையமாதரசை
வரவழைத்துநானும் வகைப்படிசொல்லிவிட்டேன்
பூலோகத்துள்ளே புகழ்ந்தமனுஷர்க்குரைத்தாள்
விரதமிருந்து விஸ்தாரஞ்செய்துவைத்தாள்
என்தன்பிறப்பை எடுத்துரைக்கயாருமில்லை
சிவனாருமப்போது சிந்தைமிகநினைத்துப்
பார்வதியம்மாளைப் பக்கத்திற்றானழைத்து
புத்திரநற்பிறப்பைப் பூவைமிகநீயும்
பூலோகம்தானறியப்போய்ச்சொல்லுமென்றுரைத்தார்
பார்ப்பாத்திவேஷம் புகுந்தாளேபார்வதியும்
கையிற்பிரம்புங் கனத்ததொருபுத்தகமும்
தானெடுத்துக்கொண்டு சதிராகவந்திருந்து
ஏதுக்குநீயும் இளைப்புடனேயிருக்கின்றாய்
என்னுடனேநீயும் இசைத்திடுவாயுத்தமியே
அமராவதியாள் அறிவுமிகவுண்டாகி
நாயனார்திருநோன்பு நாங்களிருக்கின்றோம்

அவருடையபிறப்பை யறிவிப்பாரில்லாமல்
தயங்குகிறேனென்றாள் தாமக்குழலாளும்
அப்போதுபிராமணியும் அவிழ்த்தாளேபுத்தகத்தைக்
கேளுங்களிக்கதையைக் கிருபையுடன்சொல்லுகிறேன்
நாட்டுக்கணக்கர் நமனூர்பெருங்கணக்கர்
பூலோகத்திலுள்ள புகழ்ந்தமனிதருக்கும்
நன்மையுந்தின்மையும் நடுவெழுதவேணுமென்று
எமதர்மர்வாசலிலே யிருந்துகணக்கெழுதுவதும்
பிறப்பும்வளர்ப்பும் பேரான நல்வளமும்
தவத்தாலேவந்தகதை தானேயுரைத்திடுவாள்
பசுவின்வயிற்றில் பாலன்பிறந்ததுவும்
சப்புதலத்திற் றுமறையாயிருந்ததும்
எல்லாக்கதையும் எடுத்துரைத்தாள்பிராமணியும்
புத்தகமுந்தானும் பொன்னினெழுத்தாணியுடன்
கேட்டார்களெல்லோருங் கிருபையுடனேயிருந்து
தெண்டனிட்டுத்தான்பணிந்து திருநீறுவாங்கியிட்டார்
சாந்துசவ்வாது சந்தனமுந்தான்கொடுத்தார்
அடைக்காயும்வெள்ளிலையும் அன்புடனே தான்கொடுத்
மாலைகழுத்திலிட்டார் மண்டலமெல்லாமறிய [தார்
ஆபரணபூஷணமு மன்பாகத்தான்கொடுத்தார்
இப்படியேவரிசைபெற்று ஏகினாள்பார்வதியும்
சிவனாரிடத்திற் சேர்ந்திருந்தாள்பார்வதியும்
புத்திரனாரிடத்திற் போனதொருசேதியெல்லாஞ்
சிவனாருங்கேட்கச் சிந்தைகளிகூர்ந்து
செப்பினாள்பார்வதியும் சேதியொன்றுந்தப்பாமல்
புத்திருமப்படியே புகழ்ந்துமிகத்தொழுது
இயமரிடம்வருவதற்கு ஏற்றவிடைவாங்கி
புத்திரரும்வந்து புகழ்ந்துமேதானிருந்தார்
இந்தக்கதையை யின்பமாய்க்கேட்டவர்கள்
அமராவதியாட்கு அறிவுமிகவுண்டாச்சு
செல்வங்களெல்லாம் சேரவேயுண்டாகி
நாளுக்குநாளதிகம் நன்றாய்தழைத்ததுகாண்
கேட்டபேரெல்லாங் கிளைகளுடன்வாழ்ந்திருந்தார்
நினைத்தபடிமுடித்து நீடூழிவாழ்ந்தார்கள்
அமராவதியாட்கு ஆண்டுபலசென்றதுவே
நோன்புகள்செய்தாட்கு நூறாண்டுசென்றவுடன்

சித்திரபுத்திருஞ் சிந்தைதனிலே தெரிந்து
நோன்புமறவாமல் நூருண்டு தானிருந்தாள்
அவளையுமிங்கே யழைக்கவேவேணுமென்று
கூட்டோடே சொற்கத்திற் கூட்டிவரவேணுமென்று
பூந்தேரனுப்பினர் புண்ணியனாரன்புடனே
அந்நேரந்தானும் அமராவதியாளும்
நூறுவயதளவு நோன்புவிடாதிருந்தால்
சிவலோகம்போகிறேன் செகத்துள்ள புண்ணியரே
நோன்புவிரதத்தை நுணுக்கமாய்த்தானறிந்து
கிருபைபெறவேயிருந்து கேளுங்களிக்கதையை
பயபக்தியாயிருந்து பலன்பெறுங்கள் புண்ணியரே
என்றுமிகச்சொல்லி யேற்றதொருவுத்தமியும்
அந்தியகாலம அடுக்கவேவந்திடவே
தானதருமங்கள் தயவாகத்தான் கொடுத்தாள்
பிராமணபோஜனகள் பிரியமாய்நடத்திவைத்தள்
சிவபூஜைகுருபூஜை செய்துமேதான்முடித்துக்
கூட்டோடேசொர்க்கத்திற்கூடுகிறேனெனவுரைத்தாள்
இந்தப்படிசொல்லியிருக்குந்தருவாயில்
அந்நேரம்வந்ததுகாண் அழகானபூந்தேரும்
அமராவதியும் அவள்தர்மராஜாவும்
இருபேருமொன்றாய் ஏறினர்தேர்மீதில்
சிவகணங்கள்வந்து தேர்கொண்டுபோனார்கள்
பூமாரியாகப் பொழிந்தார்களந்நேரம்
பரமசிவனும் பார்வதியுமிதுகண்டு
சொற்கத்துவாசலையுந் திறக்கவேசொன்னார்கள்
சித்திரபுத்திரரைச் சென்றுமேதெண்டனிட்டு
சிவனோடுமையாளைச் சேரவேதெண்டனிட்டு
சிவனாரிடத்திற் செப்பினாளுத்தமியாள்
தருமங்கள்செய்யவின்னந் தரணிதனிற்பிறக்க
புத்திருமப்படியே பொருந்தத்தரிப்பதற்கு
பிரமாவைப்பார்த்து பிறப்பிக்கச்சொல்லினர்காண்
அந்நேரம்பிரமாவும் அகமகிழ்ந்துகொண்டாடி
தலைமகளாகப் பிறப்பித்தாரன்னேரம்
தருமராசாவையும் தலைமகனாய்ப்பிறப்பித்தார்
ஒருவருக்கொருவர் ஒப்புறவாய்வாழ்ந்திருந்தார்
அந்தப்பிறவியிலும் அப்படியேதானதர்மம்

புண்ணியங்களெல்லாம் புகழ்ந்து நடத்தினர்காண்
அன்னக்கொடிகட்டி யடைவாகத்தான்வாழ்ந்து
தவருமல்நோன்பு தானிருந்தாரதுபார்த்து
ஆனபடிவாழ்ந்தே யாண்டு நூருனபின்பு
சித்திரபுத்திருந் தேரையனுப்பினர்காண்
கூட்டிவந்துவிட்டார்கள் குற்றமில்லாஇருவரையும்
இன்னமுந்தான்பிறக்க வேணுமோயேந்திழையே
என்றுசித்திரபுத்திரர் இதமாகத்தான்கேட்க
இறப்பதுவும்பிறப்பதுவும் இனியெனக்குஆகாது
கலியுகங்கள்வந்து கலந்ததே நண்ணியரே
அதர்மங்கள்வந்து அழிக்குமேபுண்ணியரே
நட்சத்திரப்பதவி நலமாகவளருமெனச்
சிவனுரிடத்திலவர் செய்திகள்தானுரைத்து
அந்நேரம்பிரமா அப்படியேசெய்துவைக்க
நட்சத்திரப்பதத்தில் நன்ருகவாழ்ந்திருந்தார்
இந்தக்கதையை எடுத்துரைக்கக்கேட்டவர்கள்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
மூங்கில்போலன்னைசுற்றம் முசியாமல்வாழவே
பூலோகமெல்லாப் பொருந்தமிகவாழவே
எல்லோருந்நன்ரு யினிதாகவாழவே
சித்திரபுத்திரனூர் சீமானும்வாழவே
பொன்னினெழுத்தாணியுடன் புத்தகமும்வாழவே
நிலத்துள்ளமாந்தர் நெடுங்காலம்வாழவே
நெல்வேலிநாதர் நெடுங்காலம்வாழவே
காந்திமதியம்மாளும் கணபதியும்வாழ்கவே

அமராவதிகதை முற்றிற்று.

சரவணபவ அச்சுக்கூடம், மண்ணடி, மதருஸ்—March, 1936.